Multimedia & DTP

| | | | |
|---|---|---|---|
| 01 | மாயா | Maya SOFTWARE CD + 473 pages e-book, 5000 Indian Cliparts, 100 super games, AVG Antivirus | 2 CD விலை ரூ.110/- |
| 02 | வெப் டிசைனிங் டிரீம் வீவர் | Dream Weaver MX Software CD + Games CD | 2 CD விலை ரூ.90/- |
| 03 | பிரிமியர் | Software + e-Book CD + Audio video Editing | 2 CD விலை ரூ.70/- |
| 04 | ப்ளாஷ் | Flash Software CD | 2 CD விலை ரூ.60/- |
| 05 | ஃபயர் வொர்க்ஸ் | Fire Works Software CD+ Animation Software, 888 Borders, Frames & Cliparts, 85 Cartoon Wallpapers + 20 free software + 60 Games. | 2 CD விலை ரூ.80/- |
| 06 | வெப் டிசைனிங் PHP | + INDIAN Clip Arts DVD | விலை ரூ.100/- |
| 07 | போட்டோஷாப் | PHOTOSHOP CS3 SOFTWARE CD + 6666 LOGOS | 2 CD விலை ரூ.120/- |
| 08 | கம்பஸ்ஷன் | Software CD + 20 Video Tutorials + 100 Mobile Wallpapers & Games. 5000 Cliparts. Video Editing | CD விலை ரூ.90/- |
| 09 | இல்லஸ்ட்ரேட்டர் | Adobe Illustrator SOFTWARE CD + Games CD | 2 CD விலை ரூ.60/- |
| 10 | வீட்டிலிருந்தே பணம் சம்பாதிக்கும் வழிகள் | Games DVD | விலை ரூ.50/- |
| 11 | Macromedia டைரக்டர் | CD + Software CD + 3 e-Book Audio video CBT CD | 2 CD விலை ரூ.60/- |
| 12 | கோரல்டிரா | Corel Draw X3 Software CD Indian Clip Arts 2,322 images CD | 2 CD விலை ரூ.90/- |
| 13 | இன்-டிசைன் | Adobe Indesign SOFTWARE CD + Clipart & Games CD லேஅவுட் வேலைகளுக்கு உதவும் புத்தகம் | 2 CD விலை ரூ.70/- |
| 14 | பேஜ்மேக்கர் | Software CD + Indian Clip Arts 2,322 Images CD. | 2 CD விலை ரூ.70/- |
| 15 | Tamil Website's Directory | மத்திய அரசு தமிழ் சாப்ட்வேர் CD + Games CD 300 Tamil Font, Dictionary, Spell checker, Tamil OCR | 2 CD விலை ரூ.80/- |
| 16 | ஆட்டோகேட் | Autocad 2010 software + Tools 2 CD கட்டிட வரைபடங்கள் வரைய உதவும் புத்தகம் | விலை ரூ.80/- |
| 17 | ஆட்டோகேட் Tips | Autocad 2010 software + Tools 2 CD கட்டிட வரைபடங்கள் வரைய உதவும் புத்தகம் | விலை ரூ.70/- |
| 18 | விண்டோஸ் விஸ்டா & எக்ஸ்பி | Wista Tools + 100Mobile Games+1001 Letters + 4000 Logos + 55 Games | CD விலை ரூ.70/- |
| 19 | விண்டோஸ் XP | CD + விண்டோஸ் XP + 1000 Fonts + 30 Games + 300 images CD. விண்டோஸ் பற்றி முழுமையாக அறிந்துகொள்ள | 2 CD விலை ரூ.80/- |
| 20 | கம்ப்யூட்டர் அசெம்பிளிங் | + Assembling, Repairing, Trouble shooting Video CD + Games CD. | 2 CD விலை ரூ.75/- |
| 21 | ஹார்டுவேர் Troubleshooting | Video Tutors + Games CD Trouble shooting, Assembling, Upgrading. | 2 CD விலை ரூ.60/- |

Basic & MS Office

| | | | | |
|---|---|---|---|---|
| 22 | வேர்ட் 2 CD — Word CD + office Software CD | விலை ரூ.75/- | 29 | பிளாக் — DVD விலை ரூ.40/- |
| 23 | எக்ஸல் 2 CD — Excel CD + office Software CD | விலை ரூ.65/- | 30 | இன்டர்நெட் மோசடிகள் — DVD விலை ரூ.40/- |
| 24 | பவர் பாய்ண்ட் 2 CD — Power Point CD + office Software CD | விலை ரூ.65/- | 31 | நெட்வொர்க்கிங் Basic — Networking Essential CD + Games CD — 2 CD ரூ.50/- |
| 25 | ஃபாண்ட் உருவாக்குவது எப்படி 2 CD — games+Font creater software+ Indian cliparts | விலை ரூ.80/- | 32 | C# — விலை ரூ.40/- |
| 26 | Exporters Web Directory CD — MP3 Converter, Cassette to CD, Karoke, Audio Mixing, Games | விலை ரூ.35/- | 33 | 1 மணி நேரத்தில் இன்டர்நெட், இ-மெயில், சாட் +Internet for beginers CD — விலை ரூ.50/- |
| 27 | ஆர்குட் DVD | விலை ரூ.40/- | 34 | 101 வைரஸ் பாதுகாப்பு டிப்ஸ் — AVG Antivirus+5000 Indian cliparts + 100 super Games — CD ரூ.40/- |
| 28 | Business Web Directory CD — 2626 + 5 e-Book | விலை ரூ.50/- | 35 | கம்ப்யூட்டர் BASIC — 2 CD விலை ரூ.50/- |

மொத்தமாக விற்பனை செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்...

கரிசல் மீடியா

37, பஜனைகோவில் முதல் தெரு, SRM University அருகில், வடபழனி, சென்னை-26.
Ph: 044-42801500, karisalm@gmail.com

NANDHINI - Novel Monthly - R.Dis. No. 780/2005

அக்ஷயாவின்

# அழகிய நந்தினி

₹10

பெண்கள் மாத இதழ்



# இனியவளே...

## அகிலா கோவிந்த்



நாதா குமரா நம என்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா குறமின் பத சேகரனே.

- கந்தர் அநுபூதி



# இனியவளே...

## அகிலாகோவிந்த்






# இனியவளே...

நட்ட நடு ஆற்றில் விட்டு விட்டார்கள் என்பார்களே... அப்படியொரு நிலைதான் கவிதாவுக்கு ஏற்பட்டது. திடீரென்று ஒரே நாளில் ஒரே கணத்தில் பெட்டியும் கையுமாய் நகரின் நடு வீதிக்கே வந்துவிட்டாள்.

அவள் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. இப்படி ஒரு அபாயம் புயல் போல் தன்னைத் தாக்கும். தனது பொல்லாத சுய கௌரவம் சீறிட்டுக் கிளம்பும் என்று. ஆயிற்று. வீராப்பாய் பேசி வீராப்பாய் கிளம்பியாயிற்று. இனி என்ன செய்வது?

நட்ட நடு வீதியில் பெட்டியும் கையுமாய் அழகான இருபது வயது இளம் பெண் நின்றால்... அது எவ்வளவு வேதனையான எவ்வளவு கேலிக்குரிய விஷயம்? எத்தனை பார்வைகள் அவளைத் துளைத்தன? எத்தனை முகங்கள் பிச்சை போடாத குறையாய் அவள் மீது பரிதாபப்பட்டன.

அகிலா கோவிந்த்

அவ்வளவு கேவலமான நான் போய் விட்டேனோ? என்று துடித்த கவிதா, ஒரு கணம் இதற்கு நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம் என்று கூட நினைத்தாள்.

ஆனால் அதற்கும் முடியவில்லை. போதுமான தைரியம் இல்லை. கோபம்தான் வந்தது. திடீரென தன்னை இப்படி நட்ட நடு வீதிக்கு கொண்டு வந்து விட்ட அனாதை இல்லத்தலைவி ரங்கமணி அம்மாளை உதடு துடிக்க நினைத்துக் கொண்டாள்.

அன்று விடுதி அறைில் வழக்கம் போல் எழுந்து சுறுசுறுப்பாய் காலை வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவளைப் பணியாள், மேடம், அழைக்கிறரர்கள் அம்மா... என கூட்டிப் போன போது கூட அவள் விஷயம் இவ்வளவு அபாயகரமானதாய் இருக்குமென்று நினைக்கவில்லை.

உட்கார் கவிதா. உன்னிடம் முக்கியமான விஷயம் சொல்லவேண்டும்... ரங்கமணி அம்மாள் பீடிகையுடன் இழுத்தபோது கூட கவிதா உணராமல், சொல்லுங்கள் அம்மா என்றாள் புன்சிரிப்புடன்.

கவிதா, அந்த விஷயம் முக்கியமானது. அதை எப்படி உன்னிடம் சொல்வது என தயக்கமாய் இருக்கிறது..

மேடம் தயங்கியதைப் பார்த்ததும் கவிதாவிற்கு சிரிப்பு தான் வந்தது. என்னிடமா தயக்கம்? தமாராளமாகச் சொல்லுங்கள் அம்மா. நான் உங்கள் மகள் மாதிரி... என்றாள் சிரிப்பு மாறாமல்.

கவிதா தன் அரிசிப் பற்கள் அனைத்தையும் காட்டி வெகுளியாய் சிரித்தபடி கூறியது ரங்கமணி அம்மாளை மேலும் சங்கடப்படுத்தியது. தயங்கித் தயங்கி பேச்சை ஆரம்பித்தாள். பழத்தில் ஊசியேற்றுவது போல் விஷயத்தைச் சொன்னாள். விஷயத்தைக் கேட்டதும் துடித்துப் போனாள் கவிதா.

விஷயம் இதுதான். ரங்கமணி அம்மாள் நடத்தி வரும் அனாதை மற்றும் ஆதரவற்றோர் இல்லத்தில் வளரந்து வந்தவள்தான் கவிதா. இவளுக்கு நினைவு தெரிந்தது முதல் ரங்கமணி அம்மாளும் அங்கிருக்கும் வார்டன்களும் தான் அவளுக்கு சகலமும், அப்பா அம்மா சொந்தம் பந்தம் எல்லாம் அவர்களும் அங்கு அவளைப் போன்று இருக்கும் அனாதை ஆதவற்றோரும்தான். இனி இவர்கள்தான் நம் குடும்பம். இவர்கள்தான் நம் வாழ்க்கை என எது பற்றியும் கவலைப்படாமல் முகம் தெரியாமல்



தன்னை அனாதை காப்பகத்தில் விட்டுச் சென்ற பெற்றவர்களை நினைத்து வருந்தாமல் வாழ்க்கையைத் தொடங்கியவள் கவிதா.

அறியாச் சிறுமியாய் வந்த அவளுக்கு பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு, டைப்ரைட்டிங், ஷார்ட் ஹேண்ட் என சகலத்தையும் பயிலச் செய்து அவளை ஒரு உலகறிந்தவளாக உருவாக்கியது அந்தக் கருணை இல்லம்தான். அக கவிதா படித்து முடித்து விட்டாள். இனி வேலை தேடுவது தான் பாக்கி. உற்சாகமாய் சர்டிபிகேட்டுகள் அடங்கிய பைலுடன் அவள் வேலை தேடும் கோதாவில் இறங்கிய போது தான் எவ்வளவு பெரிய மகா சமுத்டதிரக் கூட்டத்தில் லட்சத்தோடு லட்சமாய் நீச்சல் அடிக்க வந்திருக்கிறோம் என்பது புரிந்தது.

இருந்தும் கவிதா மனந்தரவில்லை. துணிச்சலாய் வேலை தேடும் படலத்தைத் தொடங்கினாள். அவள் தொடங்கி மூன்று மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் விடுதி மேடம் ரங்கமணி அம்மாளிடமிருந்து இப்படி ஒரு அழைப்பு அபாயகரமான அறிவிப்பு.

எனக்குச் சொல்லக் கஷ்டமாய்த்தான் இருக்கிறது. ஆனாலும் வேறு வழியில்லை கவிதா. நான்ட சொல்லித்தான் ஆக வேண்டும். ஏனென்னில் நம் விடுதியின் பொருாதார நிலைமை அப்படி....

நீங்கள் சொல்வது புரியவில்லையே அம்மா என்று கவிதா பேந்தப் பேந்த விழிக்கத்தான் செய்தாள்.

ரங்கமணி அம்மாள் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு விஷயத்தைக் கொட்டிவிட்டாள்.

இதோ பார் கவிதா. அனாதைச் சிறுமியாய் வந்த உன்னைப் படிக்க வைத்து பட்டமும் வாங்கிக் கொடுத்தாயிற்று. நீயும் சமூகத்தில் உன் சொந்தக் காலில் நிற்கும் அளவிற்கும் வளர்ந்தும் விட்டாய். இந்த அனாதைக் காப்பகத்தில் நாளுக்கு நாள் புதிய பச்சியம் குழந்தைகளாய் வரவுகள் வந்து கொண்டே இருக்கின்றன. விடுதியைப் பராமரிக்கவும் அவர்களுக்குத் தேவையான உணவு உடைகளை ஏற்பாடு செய்யும் ரொம்ப சிரமப்படுகிறது. அதனால்...

சொல்லுங்கள் அம்மா... குரல் உடைய விஷக் கஷாயத்தை விழுங்குபவள் போல் கவிதா கேட்டாள்.

உன் போன்றவர்கள் உங்கள் தேவைகளை நீங்களே கவனித்துக் கொண்டு ஒதுங்கி நின்றால். விடுதியைப் பராமதிக்க அது ரொம்பவும் உதவியாய் இருக்கும்...

ரங்கமணி அம்மாள் மேலும் தயங்கியது கவிதாவிற்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்க வேண்டும். விஷயத்தைப் பட்டென போட்டு உடைத்து விட்டாள்.

அதாவது... நான் விடுதியை விட்டு வெளியேறி தனியே என் சொந்தக் காலில் நின்று கொள்ள வேண்டும்... என் தேவைகளை கவனித்துக் கொள்ள வேண்டும். அப்படித்தானே அம்மா?

அப்படிக் கேட்கும் போதே கவிதாவுக்கு கண் கலங்கிவிட்டது. கவனித்து விட்ட ரங்கமணி அம்மாளும் சங்கடமாய் தலையசைத்தாள்.

ஆனால் அவசரம் இல்லை கவிதா. நீ நிதானமாய் ஒரு வேலை தேடிக்கொண்டு உனக்கென்று ஒரு வழி அமைத்துக் கொண்டு இங்கிருந்து சென்றால் போதும். அதுவரை உனக்கு இங்கு தங்கியிருக்கு அனுமதி உண்டு.

அதன் பிறகு ரங்கமணி அம்மாள் விடுதிப் பராமரிப்பு பற்றி, விடுதிக்கு வரும் நன்கொடைகள் குறைந்து விட்டது பற்றி தன்னை எதிர்நோக்கும் சிரமங்க்ள பற்றி என என்னென்னமோ சொன்னாள்.

ஆனால் எதுவும் கவிதாவின் காதில் ஏறவில்லை. அவளது பொல்லாத சுய கௌரவம், தன்மானம் விழித்துக் கொண்டு விட்டது. இவ்வளவு சொல்லிவிட்ட பின் இனியும் இவர்களுக்குப் பாரமாய் இருப்பதா? என்ற கேள்வி அவளைப் பிடித்து ஆட்டியது.

இரண்டு நாள் ஒன்றும் ஓடவில்லை. உட்கார்ந்து விடிய விடிய சிந்தித்தாள். தன்னைப் பற்றி இனி தான் செய்ய வேண்டியவைகளைப் பற்றி விதவிதமாய் கற்பனை செய்து பார்த்தாள். கற்பனை அவளுக்கு இலகுவாய் இருந்தது. கற்பனையில் அவள் பெட்டியும் கையுமாய் விடுதியை விட்டு வெளியேறுகிறாள். வேலை தேடுகிறாள். உடனே ஒரு பெரிய கம்பெனியில் வேலை. கை நிறையச் சம்பளம். அந்தச் சம்பளத்தை அப்படியே வாங்கிக் கொண்டு போய் ரங்கமணி அம்மாளின் மேஜை முன் கொட்டுகிறாள். விடுதிக்கான தனது நன்கொடையெனக் கூறி ரங்கமணி அம்மாளைத் திகைக்க வைக்கிறாள்

கற்பனை நன்றாகத்தான் இருந்தது. கவிதாவுக்கு அதுவே பெரிய துணிச்சலைக் கொடுக்கும் டானிக்காகவும் அமைந்து விட்டது. விளைவு? தன்மானம் சுயகௌரவம் பெரிது எனறு மூன்றே நாளில் பெட்டியும் கையுமாய் யாரிடமும் சொல்லாமல் விடுதியில் இருந்து கிளம்பி விட்டாள். சின்ன துண்டுச் சீட்டு ஒன்றில், சீக்கிரம் வேலை ஒன்றைத் தேடி விட்டு



தங்களைச் சந்திக்கிறேன். மன்னியுங்கள் அம்மா... என்று ரங்கமணி அம்மாள் பார்வைக்கு மட்டும் எழுதி வைத்துவிட்டு வீராப்புடன் கிளம்பிவிட்டாள்.

அனால் வெளிவந்து உலகத்தைப் பார்த்த பின்தான் தெரிந்தது.... தான் எவ்வளவு பெரிய அசட்டுத்தனத்தைச் செய்திருக்கிறோம் என்று. விடுதியிலிருந்து வெளியேறியதும் கவிதா நேராய் பழைய கல்லூரித் தோழி வீட்டிற்குப் போனாள். முகப் மலர வரவேற்று தன்னுடன் தங்க வைத்துக் கொண்டாள் தோழி. இவ்வளவுதானா விஷயம்? நீ எடுத்த முடிவு சரிதான்! இதை உன் வீடு மாதிரி நினைத்துக் கொள். தாராளமாய்த் தங்கி நீ விரும்பும் வேலையைத் தேடிக்கொள். சரிதானா? என்று உற்சாகமாய் பேசியபோது தன் தோழியை நினைத்து குளிர்ந்து போனாள் கவிதா.

ஆனால் இரண்டே நாளில் தோழியில் வீட்டில் பேசிய கிசுகிசுப் பேச்சு கண்டு துடித்துப் போனாள். ஏண்டி அவளுக்குத்தான் புத்தியில்லேன்னா உனக்கு எங்கே போச்சு? கண்ட கண்ட அனாதை கழுதைகளெல்லாம் வந்து தங்க இது என்ன சத்திடிரமா? என தோழியின் தாயார் வாய் கூசாமல் பேசியதும் கவிதாவின் மனம் வெந்த புண்ணாயிற்று.

திரும்பவும் அந்த பொல்லாத சுய கௌரவமும் வீராப்பும் அவளுள் விழித்துக் கொண்டது. மறுபடி பெட்டியைத் தூக்கினாள். தோழியிடம் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பினாள்.

அன்று முழுவதும் கொதித்த மனதுடன் உதடு துடிக்கும் கோபத்தில் முழு வீச்சாய் வேலை தேடும் படலத்தில் இறங்கினாள். எப்படியும் இன்று ஏதாவது ஒரு வேலையைத் தேடியாக வேண்டும் என்ற ஒரே வெறியோடு கம்பெனி கம்பெனியாய் ஏறி இறங்கினாள். சில இடங்களில் தன் நிலைமையைக் கூறி மனமுருகப் பேசியும் பார்த்தாள்.

ம்ஹூம்.... அவளை யாரும் கண்டு கொள்ளவில்லை... ஒரு பொருட்டாய் மதித்து அவளது சர்டிபிகேட்டுகளைப் புரட்டக் கூட செய்யவில்லை. பிச்சைக்காரியை விரட்டுவது போல்தான் விரட்டினார்கள். கவிதா நொந்து போனாள். சுவரில் அடித்த பந்தாய் அவளது அத்தனை முயற்சிகளும் பூஜ்யமாய் அவளிடமே திரும்பி வந்து விட்டன. வேறு வழி...?

இதோ நட்ட நடு ஆற்றில் விட்டது போல் நடு வீதியில் பிளாட்பார பெஞ்சு ஒன்றில் சோர்வாய் கவிதா பெட்டியும் கையுமாய் அமர்ந்தபடி. அவளது சிவந்த முகம் மேலும் சிவந்து கொண்டிருந்தது. பாரத மாதாவின் சுதந்திர பூமியில் தனக்கு இப்படி ஒரு நிலையா? இப்படி ஒரு அவமலானமா? எல்லா வழிகளும் அடைத்துக் கொண்டது. இனி என்ன செய்வது?

நேரம் இருட்டிக் கொண்டிருக்கிறது. பேசாமல் அனாதை இல்லத்துக்கு திரும்பிச் சென்று விடலாமா? ரங்கமணி அம்மாளின் காலில் விழுந்து தான் தோற்று விட்டதை ஒப்புக் கொண்டு விடலாமா? கவிதாவால் இப்படி யோசிக்க முடியவில்லை. நானாவது? திரும்பச் சென்று அவர்களுக்குப் பாரமாய் இருப்பதாவது? அதைவிட எங்காவது விழுந்து செத்து விடலாம்? என்ற வீராப்பு எண்ணம் அலையாய் அடித்து அவளைத் திணறடித்தது.இ

கவிதா சிந்தித்தாள். குழம்பினாள். கடைசியில் இறுதி முடிவு எடுத்தது போல் எழுந்தாள். பெட்டியும் கையுமாய்க் கடற்கரைச் சாலையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். அப்படி அவள் முடிவெடுத்து பெட்டியுடன் இர்ண்டடிதான் நகர்ந்திருப்பாள்.

நான் இருக்கேன், என்னை மறந்துட்டியே குழந்தே?

அவளுக்கு வெகு பரிச்சயமான குரல் அசரீரியாய் ஒலித்தது. திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள் கவிதா.

குரலுக்குச் சொந்தக்காரியாய் அங்கு போளி மாமி நின்றுகொண்டிருந்தாள்.



## 2



போளி மாமியைப் பார்த்ததும் கவிதாவுக்கு வந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அடாடா... யார் யாரையோ நினைத்தோம். போளி மாமியை நினைக்க மறந்துவிட்டோமே.... என்று உள்ளூர வருந்தினாள். போளி மாமி உரிமையாய் அவள் கை பற்றி வாஞ்சையுடன் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டபோது அவளுக்கு கண்ணெல்லாம் கலங்கிவிட்டது.

அம்மா நல்ல சமயத்தில் வந்தீர்கள். நான் ரொம்பவும் தவித்துப் போய்விட்டேன் அப்படியே சிறு குழந்தை போல் மாமியிடம் ஒட்டிக் கொண்டாள். மாமியும் எல்லாம் புரிந்தவள் போல் அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை. முகம் பதித்தவளின் தலையை ஆதரவாய் வருடிவிட்டாள். நான் இருக்கிறேன், எதற்கும் கவலைப்படாதே குழந்தே... என்று தைரியம் கொடுத்தாள்.



வாஞ்சையுடன் அவளை அணைத்தபடியே, நேரமாயிற்று. எல்லாவற்றையும் வீடுபோய் பேசிக்கொள்ளலாம்.. என கை பற்றி உரிமையுடன் அழைத்துச் செல்ல ஆரம்பித்தாள். கவிதாவும் மாமியின் அன்பைக் கண்டு நெகிழ்ந்தபடி பின் தொடர்ந்தாள்.

அவளுக்கு போளி மாமி நினைவு தெரிந்த நாளிலிருந்தே பரிச்சயமாகிப்போன அன்பு தெய்வம். கருணைக் கடல் போல் எப்போதும் அன்பொழுகப் பேசுவாள். சிரிப்பும் ஸ்நேகமும் எப்போதும் அவள் முகத்தில் தாண்டவமாடிக்கொண்டிருக்கும். மாமிக்கு போளி மாமி என்று பெயர் வைத்ததே தனிக் கதைதான்.

கையில் பெரிய தூக்குச் சட்டி ஒன்றை இடுக்கிக்கொண்டு வெயிலுக்கு சேலைத் தலைப்பை இழுத்துப்போர்த்திக்கொண்டு விடுவிடுவென காலையிலே போளி வியாபாரத்தைத் துவக்கி விடும் போளி மாமியை அந்த ஊரில் தெரியாதவர்களே கிடையாது. மாமி போளி போடும் அழகே அழகு. மைதா மாவில் அளவான சர்க்கரை சேர்த்து தேங்காய்ப் பூ துருவலுடன் நெய் மணம் கமழ சிறுக சிறுசாய் போளி தயாரிப்பாள். போளியை எடுத்து வாயில் வைத்தால் போதும். விட மனம் வராது. அவ்வளவு ருசி. மாமி அப்படி சுடச் சுட தயாரித்த போளிகளுடன் காலையிலே வியாபாரத்திற்கு கிளம்பிவிடுவாள்.

மாமியைப் பற்றி கதை கதையாய் சொல்வார்கள். மாமிக்கு மூன்று நான்கு மகன்கள் நல்ல நிலையில், நல்ல வேலையில் இருந்தும் வயது காலத்தில் மாமிக்கு உதவாமல் மாமியை பாரமாய் நினைத்தார்களாம். தன் கையே தனக்கு உதவி என்ற வெறியோடு மாமி தனியாய் வந்து போளி வியாபாரத்தைத் தொடங்கி யார் தயவையும் எதிர்பார்க்காமல் காலத்தை ஓட்டுவதைப் பெருமையாய் பேசுவதை கவிதாவும் கேட்டிருக்கிறாள்.

மேலும் மாமிக்கு இரக்க குணம் ஜாஸ்தி பேருக்குத்தான் வியாபாரமே தவிர, வழக்கமான வாடிக்கையான வீடுகளுக்கு போளிகளைக் கொடுத்து விட்டால் மீதமிருக்கும் போளிகளை எல்லாம் தெருவில் விளையாடும் சின்னஞ் சிறுமியர்களுக்கு கொடுப்பது மாமிக்குப் பிடித்தமான பொழுது போக்கு. மாமியைத் தெருவில் பார்த்ததுமே குழந்தைகள் அனைவரும் போளி மாமி போளி மாமி! என்றபடி மாமியை ஆர்வமாய்ச் சூழ்ந்து கொள்ளும்.

அந்தப் பிஞ்சு மலர்களைக் கண்டதும் மாமிக்கு குஷி பிய்த்துக் கொண்டு விடும். செல்லமாய் அதட்டல் போட்டவாறு குழந்தைகளை

வரிசைப்படுத்தி போளிகள் அனைத்தையும் விண்டு விண்டு கொடுத்து அந்த பிஞ்சுகள் சுவைத்து அசை போடுவதைக் கண் குளிரப் பார்ப்பாள் மாமி. அதில் அலாதி சுகம் அவளுக்கு.

கவிதாவிற்கு மாமி அறிமுகமாகியதும் அப்படித்தான். அவளுக்கு நினைவு தெரிந்த நாள் முதலே அவர்களது அனாதை இல்லத்திற்கு தினம் சட்டி நிறைய போளிகளுடன் மாமி ஆஜராகி விடுவாள். ஒரு குழந்தையை விடாமல் எல்லோருக்கும் என தேடிப்பிடித்து போளிகளைக் கொடுப்பாள். ரங்கமணி அம்மாள் எவ்வளவு வற்புறுத்தினாலும் பணம் சிறிதும் வாங்காமல் சென்று விடுவாள். ஏதோ குழந்தைகளுக்கு என்னால் முடிந்தது. வற்புறுத்தாதீர்கள் அம்மா என்று மாமி பல முறை கூறுவதை கவிதாவே கேட்டிருக்கிறாள்.

அப்படி போளியில் ஆரம்பித்த ஸ்நேகம்தான் கவிதாவிற்கும் மாமிக்கும் நெருக்கத்தை ஏற்படுத்தியது. கவிதா வளர வளர மாமி மேல் தனிப் பிரியம் கொண்டவளாய் மாறிவிட்டாள். மாமிக்கும் கவிதாவை ரொம்பப் பிடித்துப் போயிற்று. ஊர்க் கதை உலகக் கதை என எனக்குத் தெரிந்த விஷயங்களை யெல்லாம் ஒன்று விடாமல் மாமி சொல்ல... அதை கவிதா வாய் பிளக்க கேட்பது... அனாதை இல்லத்தில் அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சியாகிப் போனது.

அந்த மாமிதான் இப்போது சரியான நேரத்தில் தவித்த கவிதாவிற்கு அடைக்கலம் கொடுத்து தன்னுடன் தங்க வைக்க அழைத்திருக்கிறாள். மறுப்பு சொல்லாமல் கவிதா நடந்தாள்.

மாமியின் வீடு சிறியதாய் இருந்தாலும் சுத்தமாய் துடைத்து வைத்த அழகுடன் இருந்தது. மாமி தயாராய் வைத்திருந்த இரவு உணவை வாஞ்சையுடன் பரிமாறி, எல்லாவற்றையும் காலையில் பேசிக்கொள்ளலாம் குழந்தே! என கவிதாவைத் தூங்கவும வைத்துவிட்டாள்.

மறுநாள் கவிதாவின் கதை கேட்ட மாமி முதல் வேலையாய் கவிதாவிற்கு தனக்குத் தெரிந்த ஏற்றுமதி நிறுவனம் ஒன்றில் வேலை வாங்கித் தருவதாக கூறி அழைத்துச் சென்றாள். கவிதாவுக்கு ஒரே ஆச்சரியம் அந்தப் பெரிய ஏற்றுமதி நிறுவனத்தில் மாமிக்கு வேலை வாங்கித் தருமளவுக்கு செல்வாக்கு இருக்கிறதா என வியந்தாள்.

மாமி கவிதாவை ரிசப்ஷனில் உட்கார வைத்துவிட்டு முதலாளியைப் பார்க்கச் சென்றவள் அரைமணி நேரத்தில் புன்னகை ததும்ப வெளி வந்து உனக்கு வேலை கிடைத்துவிட்டது குழந்தே. மாதம் மூவாயிரம் சம்பளம்...



என அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை நீட்டியபோது கவிதா அசந்துதான் போனாள்.

மறுநாளே அந்த ஏற்றுமதி நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்து விட்டாள் கவிதா. நகரின் பிரதான சாலையில் அலுவலகம் அமைந்திருந்தது. அலுவலகத்தில் வேலை. பார்ப்போரும் அன்பொழு பழக கவிதாவுக்கு வேலை ரொம்பவும் பிடித்துப் போனது.

அலுவலக காரியதரிசி அவளது வேலையைப் பற்றி விலாவாரியாக சொல்லிவிட்டுப் போனதும் கவனமாய் வேலையில் ஈடுபட ஆரம்பித்தாள். அப்போதுதான் எதிர் சீட்டிலிருந்து ஹாய் கவிதா! என கம்பீரமான ஆண் குரலொன்று எழும்பியது. திடுக்கிட்டுப் போனாள். குரல் வந்த திசையில் மீசையை முறுக்கியபடி குறும்புச் சிரிப்பு பொங்க ஒரு இளைஞன்.

டூத் பேஸ்ட் விளம்பரம் போல் அத்தனை பற்களையும் காட்டி ரோமியோ பார்வை பார்த்தவன் விடாது, நான் பக்கத்து சீட் கிளார்க். இப்படியொரு பேரழகியை இப்போதுதான் பார்க்கிறேன். ஆஹா! என்ன ஒரு அழகு! சப்பு கொட்டாத குறையாய் அவன் பேச, அதில் கொஞ்சமும் ஆர்வமில்லாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கவிதா.

அவளுக்கு இதுபோன்ற ஜொள் கூட்டங்களைக் கண்டாலே அலர்ஜிதான்! தினம் தினம் தெரு முக்கில், பஸ் ஸ்டாப்பில், பஸ் இடிசல்களில் எத்தனை எத்தனை ஜொள்ளர்கள். அவள் கண்டிருக்கிறாள் போதாக்குறைக்கு இவன் வேறா?

கவிதா அவனைக் கொஞ்சமும் சட்டை செய்யாமல் வேலையை கவனிக்க ஆரம்பித்தாள். அந்த இளைஞனோ விடாது கவிதாவிடம் பேச்சுக் கொடுத்தான். அசடு வழிந்தான். தேவையில்லாத கேள்விகள் கேட்டு எரிச்சல் மூட்டினான்.

கவிதா நினைத்துக் கொண்டாள். இன்னும் அவள் அலுவலக எம்.டியைப் பார்க்கவில்லை. பார்த்ததும் முதல் வேலையாய் இந்தப் பக்கத்து சீட் ரோமியோ தொல்லையைப் பற்றி எச்சரித்து வைக்கவேண்டும். மனதிற்கு முடிவெடுத்தபடி இருந்தாள் கவிதா. அன்று மாலை மூன்று மணியளவில் எம்.டி.ரூமில் இருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

ஆர்வமாய் எழுந்தவள் பயம் கலந்த படபடப்புடன் எம்.டி.ரூமின் கதவைத் திறந்து நுழைந்தவள் அப்படியே அதிர்ந்தாள் எம்.டி.இருக்கையில் முதலாளியாக அந்தப் பக்கத்து சீட் குறும்புக்காரன் அதே குறும்புச் சிரிப்புடன்.

# 3

ஆச்சரியப்படாதே.. நான் உன் முதலாளிதான்! திரும்பவும் கணீரென அவன் குரல் ஒலிக்க கவிதா ஒருகணம் நம்ப முடியாமல் திகைத்தாள். அவளுக்குப் புரியவில்லை. காலை வரை தன்னுடன் எதிர் இருக்கையில் அமர்ந்து கேலியும், கிண்டலுமாய் வேலை பார்த்தவன். திடீரென எம்.டி.ரூமிற்குள் முதலாளி ஸ்தானத்தில் உட்கார்ந்து கொண்டு அதிகார தோரணையுடன் கர்ஜிக்கிறானே? எப்படி இது சாத்தியம்?

காண்பது கனவா? நனவா? இங்கு என்னதான் நடக்கிறது? இவனது கோமாளித்தனத்தை விளையாட்டு என்ற பெயரில் வேஷம் போட்டு நம்மை பயமுறுத்துகிறானா? கவிதா திகைத்துப் போனவளாய் யோசித்தாள்.

அவனோ அவள் மிரள மிரள விழித்துத் திகைப்பதை ரொம்பவும் ரசித்தான். முகத்தைச் சாய்த்துக் கொண்டு ஆர்வமாய் பார்த்தான்.

மறுகணமே, கவிதா பயப்படாதே. இது வேஷமல்ல. இதுவரை உன் முன் குமாஸ்தாவாய் நடித்ததுதான் வேஷம். இதுதான் ஒரிஜினல் ராஜா எம். ராஜா. இந்த எம்.ஆர்.எக்ஸ்போர்ட்ஸ் சேர்மன் மோகனரங்கத்தின் ஒரே வாரிசு ராஜா புரிகிறதா?

ராஜா படபடவென அவளது கண்களில் தெரிந்த எல்லா கேள்விகளுக்கும் விடையளிப்பது போல் பேசினாலும் கவிதாவின் முகத்தில் மிரட்சி குறையவில்லை. அவளது மருண்ட மான் விழிகள் படபடத்தன. மீண்டும் மீண்டும் அவனையே நம்ப முடியாமல் பார்த்தாள்.

ராஜா சிரிப்புடன் இருக்கையில் இருந்து எழுந்து விட்டான். என்ன நம்ப முடியவில்லையா? ஆச்சரியமாய் இருக்கிறதா? வேண்டுமானால் கிள்ளிப் பார்... என்றான் சட்டென குறும்புக்குத் தாவியபடி.

போலியாய் அவன் முன் கை நீட்டி சிரித்தவனை மேலும் அதிசயமாய் கவிதா பார்த்தாள். அவனது ஸ்டைல் கண்ணாடியை மீறித் தெரிந்தர குண்டு குண்டான கருவிழிகள், முன்புற நெற்றியில் அலட்சியமாய் விழுந்து புரளும் கேசம், அடர்ந்த முறுக்கேறிய மீசை, சிவப்பான அந்த பளபளப்பு முகத்தில் உணர்ச்சிகளை சுடார் சுடாரென மாற்றி தாண்டவமாட விடும் அவனது அந்த லாவகம் எல்லாம் அவளைக் கவர்ந்தன. ஒரு



முதலாளிக்குரிய அத்தனை அம்சங்களும் ஒருசேரக் கொண்டுள்ள இவனை எப்படி கணிக்காமல் இருந்து விட்டோம்? என்ற வியப்பும் ஆழ்த்திற்று.

அவள் வியப்பை மேலும் ரசித்துவிட்டுச் சட்டென ராஜா முகம் மாறினான்.

எல்லாம் ஒரு காரணமாகத்தான் கவிதா.... என்றான்.

காரணமா? அப்படி என்ன காரணம் சார்?

சட்டென சார் மரியாதை காட்டிய அவளது குரலில் ஒலித்தது கேலியா நிஜமான முதலாளிப் பணிவா என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் ஒரு கணம் உற்று நோக்கி விட்டு ராஜா தொடர்ந்தான்.

கவிதா, எந்த ஒரு நிறுவனமும் சரி, அலுவலகமும் சரி வேலை பார்ப்போரின் திறமையை நம்பியே இருக்கிறது. அவர்களது உழைப்பே அந்த நிறுவனம் வெற்றி பெறவும் வீழ்ச்சி அடையவும் காரணமாய் அமைந்து விடும். அப்படி இருக்கும்போது சரியான பணியாளர்களைத் தேர்ந்தெடுக்காமல் ஒரு நிறுவனம் இயங்கினால் அதுவே அந்த நிறுவனத்திற்கு பாதகமாய் அமைந்துவிடும். மேலும் நாங்கள் நடத்துவது ஏற்றுமதி நிறுவனம். முக்கியமான டெண்டர்கள் எடுப்பது, பொருள்களின் தரம் பார்த்து உரிய நேரத்தில் ஆர்டர் செய்வது, சக கம்பெனிகளின் போட்டியைசச் சமாளிப்பது என எந்நேரமும் நாம் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டியது அவசியம். அதனாலே திறமையானவர்கள், வேலை நேரத்தில் வெட்டிப் பேச்சு செய்து வம்படிக்காதவர்களாய்ப் பார்த்து வேலை கொடுப்பதே எங்கள் வழக்கம். அதன் காரணமாகவே...

ராஜா வார்த்தைகளை முடிக்காமல் இழுத்தான் கவிதா அவன் சொல்ல வந்ததை முழுவதும் புரிந்து கொண்டவளாய், தொழிலாளி போல் நடித்து என் திறமையை, குணத்தைப் பரிட்சித்துப் பார்த்தீர்கள். அப்படித்தானே என்றாள் வெடுக்கென □ தன் திறமை மேல் அவன் சந்தேகப்பட்டது குற்றம்போல்.

அப்படியேதான். நன்றாகப் புரிந்து கொண்டாய்...

அப்படி நீங்கள் வைத்த டெஸ்ட்டில் நான் பாஸ் செய்து விட்டேனா என்று தெரிந்து கொள்ளலாமா் சார்?

இம்முறை சாரில் வேண்டுமென்றே கவிதா அழுத்தம் கொடுத்துவிட்டு பார்த்தாள்.

பாஸ்தான்! அதிலும் நூற்று நூறு மார்க்குகள்! மதிப்பெண்கள் போதுமா?

என்ன இருநூறா...?

ஆமாம் நூறு உன் திறமைக்கு... மற்றொரு நூறு உன் அழகுக்கு! நிஜமாகவே நீ அழகு ராணியல்லவா!

ராஜா இப்படிச் சொல்வானென்று கவிதா எதிர்பார்க்கவில்லை. சட்டென அவளது முகம் சிவந்து போயிற்று. அதை ஆர்வமாய்க் கவனித்த ராஜா பேச்சை முடிக்காமல், என்ன அழகு இருக்குமிடத்தில்தான் ஆபத்து என்பார்கள். அதுதான் சற்று பயமாயும் இருக்கிறது... என்றான் முகத்தை போலியாய் சுருக்கியபடி

நீங்கள் ஒன்றும் பயப்படத் தேவையில்லை... என்று கவிதா கூடவே அவசரமாய், மனதை அலைய விடாமல் வைத்திருந்தால் எந்த ஆபத்தும் உங்களை நெருங்காது சார் என்றாள் பவ்யமாய் போலிபீடிகையுடன்.

தன் பேச்சை வைத்து தன்னையே மடக்கப் பார்க்கும் அவளது புத்திசாலித்தனத்தை ராஜா மெச்சிக் கொண்டவனாய் ரசித்து கடகடவென சிரித்தான்.

கவிதா, நான் அலையவிடப் போவதில்லை. அடக்கப் போகிறேன்....

அடக்கப் போகிறீர்களா?

ஆமாம். அழகான திமிர் பிடித்த குதிரைகளை அடக்குவது எனக்கு ரொம்பப் பிடித்த விளையாட்டு. அதைத்தான் இனி செய்யப் போகிறேன்...

அவன் சொல்வது ஓரளவு புரிந்தாலும் புரியாதவள்போல் முகத்தை வைத்துக்கொண்டு கவிதா கேட்டாள்.

புரியவில்லை, விளக்கமாகச் சொல்லுங்கள் சார்...

சொல்கிறேன்... நான் அழகுக் குதிரை என்று சொல்வது வேறு யாரையுமல்ல. உன்னைத்தான்....

நானா?

ஆமாம் நீதான் அந்த அழகுக் குதிரை. உன்னைத்தான் அடக்கப் போகிறேன்...! என்றான் ராஜா-கர்ஜனைக் குரலில்.





# 4



கவிதா தன் வீட்டிற்கு வந்திருந்தாள். அவளுக்கு ஒரு கணம் நடந்தது ஒன்றும் புரியவில்லை. காலை வரை தன்னுடன் குமாஸ்தாவாய் வேலை பார்த்தவன் திடீரென முதலாளி என்கிறான். தன்னை அழகு ராணி, அழகு குதிரை என்றெல்லாம் சீண்டி விளையாடுகிறான். என்னதான் அப்படி இங்கு நடக்கிறது? என்று கவிதா குழம்பினாள்.

அவள் அப்படிக் குழப்பமாவதை எதிர் வீட்டிலிருந்து ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த மைதிலி சிரித்து விட்டாள்.

என்ன கவிதா குழம்பியாயிற்றா? என்றாள்.

ஆமாம் மைதிலி. இங்கு என்னதான் நடக்கிறது. நடப்பதெல்லாம்...

கவிதா வார்த்தையை முடிக்கவில்லை.

எல்லாம் ஒரு விளையாட்டுத்தான்...! என்று முடித்து வைத்தாள் மைதிலி.

விளையாட்டா...?

ஆமாம் முதலாளி தொழிலாளி விளையாட்டு முதலாளி தொழிலாளி போல் நடிப்பார். நமது திறமையைச் சோதிப்பார். அதில் பாஸ் செய்து விட்டால்தான் வேலை. எனக்கும் அப்படித்தான் வேலை கிடைத்தது...

என்ன, உன்னையும் ராஜா பரிசோதித்தாரா? நிஜம்மா? தன்னை மறந்து ஆவலாய்க் கேட்ட கவிதாவை ஆச்சரியமாய்ப் பார்த்தவாறே மைதிலி தலையசைத்தாள்.

அதுவும் சாதாரணப் பரிசோதனை அல்ல, விசேஷமானது....

விசேஷமானதா?

ஆமாம் முதலில், சக குமாஸ்தா போல் பேச்சுக் கொடுத்துப் பார்த்தார். நான் பேச்சில் ஆர்வம் காட்ட வில்லையென்றதும் காதல் வலை விசிப் பார்த்தார்...

என்ன காதல் வலையா..?

தன்னை மறந்து கவிதா திடுக்கிட அதைக் கவனியாதவளாய் மைதிலி தொடர்ந்தாள்.

காதல் வலைதான்... அதுவும் எப்படித் தெரியுமா?

எப்படி மைதிலி..?

பசப்பு வார்த்தைகள் காட்டி...

பசப்பு வார்த்தைகளா?

ஆமாம், இதோ பார் மைதிலி, நாம் இரண்டு பேரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்க்கிறோம். பேசாமல் நாம் இருவரும் காதலித்துக்கொண்டால்... கல்யாணம் செய்து கொண்டால் எவ்வளவு வசதியாயிருக்கும் என்றெல்லாம் ஆசை காட்டினார்....

அதற்கு நீ மயங்கவில்லையாக்கும்?

கவிதா குத்தலாய்க் கேட்கிறாளா என்பதை அறிய முடியாதவளாய் மைதிலி தொடர்ந்தாள்.

நிஜமாகவே நான் மயங்கவில்லை கவிதா. நான் மட்டும் அன்று மயங்கியிருந்தால் அவர் பேச்சை நம்பியிருந்தால், அதோ கதிதான்.. எனக்கு வேலையும் கிடைத்திருக்காது... மானமும் போயிருக்கும்...

மானம் போயிருக்குமா?

ஆமாம். காதல் உணர்வுகள் உன் மனதில் எழும்பியதாலே உனக்கு இங்கு வேலை கிடையாது என்ற பெரிய அவமானம் ஏற்பட்டிருக்கும்...

புரியவில்லை மைதிலி.....

கவிதா நான்தான் சொன்னேனே. இந்தக் காதல் வலை எனக்கு வைக்கப்பட்ட ஒரு பரீட்சை என்று. நான் மட்டும் அவர் பேச்சில் மயங்கி தலையாட்டியிருந்தால், உடனே நான் நிராகரிக்கப்பட்டிருப்பேன். காரணம் நம் கம்பெனியின் கொள்கை அப்படி....



கொள்கையா..?

ஆமாம், வேலை பார்ப்போர் யாரும் காதல் செய்யக்கூடாது. காதல் பற்றி பேசவும் கூடாது...

அட..... இது என்ன புதுக்கதை?

கவிதா வியக்க, அவளைப் பார்த்து உற்சாகமாய் மைதிலி கண் சிமிட்டினாள்.

கதைதான்! இதற்குப் பின்னணியில் நிச்சயம் ஒரு கதை இருக்கிறது சொல்லட்டுமா?

சொல்லு...

நம் முதலாளி ராஜா யாரையோ தீவிரமாய் காதலித்தாராம். அந்தப் பெண்ணும் அவரை விழுந்து விழுந்து காதலித்தாளாம். கடைசியில் திடீரென ஒரு நாள் இவருக்கு குட்பை சொல்லிவிட்டு வேறொருவரை மணந்து கொண்டாளாம்...

நிஜம்மாகவா?

நிஜம்தான்... கவிதா. அந்தக் கோபத்தில்தான் ராஜாவுக்கு காதல் என்றாலே யாரும் காதலித்தாலோ காதல் பற்றி பேசினாலோ பயங்கர கோபம் கொண்டு விடுவாராம்... நம் ஆபீஸின் ஹெட் கிளார்க் ரகசியமாய் என்னிடம் சொன்ன தகவல்கள் இது....

மைதிலி சொல்ல கவிதா நம்ப முடியாதவளாய் வாய் பிளக்கக் கேட்டுக் கொண்டிருந்தாள். என்ன ராஜா காதல் மீது வெறுப்பு உள்ள ஆசாமியா? காதலே அவருக்குப் பிடிக்காதா? காதல் செய்தால் கோபம் கொள்வாரா? என்ன ஒரு ஆச்சரியமாய் இருக்கிறது! கவிதாவால் நம்ப முடியவில்லை. அவளுக்கு உடனடியாக தெரிந்தாக வேண்டும். மைதிலி சொல்வதெல்லாம் உண்மையா என்பது புரிந்தாக வேண்டும்.

கவிதா இரண்டு நாள் பொறுமையாய்க் காத்திருந்தாள். மூன்றாம் நாள் ஏதோ ஒரு விஷயமாய் ராஜாவின் ரூமிற்குப்போக வேண்டியிருந்தது. அலுவலக விபரங்களைச் சொல்லிவிட்டு திரும்ப மனமில்லாதவளாய் அங்கேயே நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு எப்படியாவது அந்தக் காதல் விஷயம் பற்றி ராஜாவிடம் கேட்டு விடலாமா என்ற யோசனை உள்ளுக்குள் ஓடிக்கொண்டிருந்தது.

ராஜா முக்கிய குறிப்புகளை எழுதிக்கொண்டிருந்தவன் தற்செயலாய் நிமிர்ந்தபோது கவிதாவின் நிலையைக் கவனித்து விட்டான். அவள் எதையோ கேட்க தவிப்பதை அவள் முகக் குறிப்பில் கண்டுபிடித்து விட்டான்.

என்ன விஷயம் கவிதா? என்றான். ஆச்சரியமாய் குரலில் மென்மையைத் தடவியபடி.

ஒன்றுமில்லை. ஒரு விஷயம் உங்களிடம் கேட்க வேண்டும். கேட்கத் தயக்கமாய் இருக்கிறது... சார்.... கவிதா பீடிகையுடன் இழுத்தாள்.

தயக்கமா? என்னிடமா...? தாராளமாய்க் கேள்...! கைகளை விரித்தபடி ராஜா சிரித்தான்.

அது...அது...வந்து...

இந்த வந்து போயெல்லாம் வேண்டாம். நேரிடையாய் விஷயத்திற்கு வா... எனக்கு வேலை இருக்கிறது கவிதா... அவன் குரலில் உரிமையான மிரட்டல் இருந்தது.

நான் ஒன்று கேள்விப்பட்டேன்...

என்ன கேள்விப்பட்டாய்?

காதல்... காதல்... பற்றி....

தயக்கமாய் கவிதா இழுத்தாள். அவள் காதல் என்றதுமே சடக்கென மின்சாரம் பாய்ந்தது போல் ராஜழ நிமிர்ந்து கொண்டான். கண்களைக் கூர்மையாக்கி அவளைப் பார்வையால் துளைத்தான். அது சினிமா? ஆச்சரியமா? என்று அறிந்து கொள்ள முடியாதவளாய் கவிதா தவித்தாள்.

அதான் வந்து விட்டதே... வார்த்தைகளை முழுவதுமாய் கொட்டிவிடு.... ம்ம்...!

ராஜன் மறுபடி விரட்டவே....

அது வேறொன்றுமில்லை. காதல் உங்களுக்குப் பிடிக்காதாம். ஆபீஸில் யாரும் காதலிக்கக் கூடாதாம்... உண்மையா சார்?

ஒரே மூச்சில் படபடப்புடன் ஆவலாய்க் கேட்டுவிட்டு, அவன் முகக் குறிப்பை கவிதா ஆராய முயன்றாள். அதற்கு சந்தர்ப்பம் அளிக்காமல் ராஜா பார்வையைக் கூர்மையாக்கினான்.



அப்படி யார் உனக்குச் சொன்னாங்கள்? என்றான் அதே படபடப்பு வேகத்தில்.

மை... மைதிலி... சார்...

ராஜா சட்டென மௌனமாகிவ விட்டான். அவன் கண்கள் மட்டும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தன.

கவிதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் டக்கென உண்டு இல்லையென பதில் சொல்வான் என்று நினைத்தால் அவன் பாட்டுக்கு மௌனமாய் பார்த்துக்கொண்டு... என்னதான் நினைக்கிறான்? இமைகள் படபடக்க கண்களை விரித்துப் பார்த்தாள்.

ராஜா சலனமில்லாமல் பார்வையால் அவளை விழுங்கிக்கொண்டிருந்தான். அவன் மனதில் ஓடுகிற எண்ணத்தை கவிதாவால் படிக்க முடியவில்லை. அந்தத் திமிர் மௌனம் மேலும் மேலும் அவளைத் தவிக்க வைத்ததது.

ராஜா அந்தத் தவிப்பை ரசித்தவன் போல் குறும்புச் சிரிப்பை படர விட்டவன், உனக்கு அவசியம் உடனடி தெரிந்தாக வேண்டும் அப்படித்தானே?

அது.... தெரிந்தால் நல்லது. ஆபீசில் கொள்கை என்று வேறு மைதிலி சொன்னாள்... அதுதான் கேட்ட.... தவறாயிருந்தால் விட்டுவிடுங்கள் சார்...

இல்லை கவிதா, நான் அப்படி மைதிலியிடம் சொன்னது உண்மைதான். ஆனால் அதற்கான காரணம் தான் தவறு. வேறு ஒரு தற்காப்புக் காரணமாகத்தான் அதைச் சொன்னேன்....

புரியவில்லை, சார்....

புரியும்படி சொல்கிறேன். வேலைக்கு வருகிற பெண்கள் வந்தோமா வேலை பார்த்தோமா சம்பளம் வாங்கினோமா என்றுதான் இருக்கவேண்டும். அதை விட்டு விட்டு அலைகிற கேஸ் போல் முதலாளி ஷோக்காய் மூக்கு முழியுமாய் இருக்கிறானே, இவனுக்கு காதல் வலை வீசி மயக்கி விடலாமே என்றெல்லாம் விஷப் பரீட்சை செய்துவிடக் கூடாதல்லவா.. அதனாலே காதல் பிடிக்காது என்றொரு பொய்யைச் சொல்லி தன்னைத் தற்காத்துக் கொண்டேன்... மேலும்...

ராஜா ஒரு கணம் நிறுத்தி விட்டு ஆழமாய்ப் பார்த்தவன் தொடர்ந்தான். அன்று மைதிலியிடம் இருந்து தப்பித்து விட்டேன் ஆனால்

இப்போது உன் உருவில் ஆபத்து வரும்போல் தெரிகிறதே? எதற்கும் நான் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்... ராஜா அவனை விஷமமாய்ப் பார்த்தவாறு சொல்ல கோபத்தில் முகம் சுண்டிப் போனாள் கவிதா.

# 5

உன் உருவில் ஆபத்து வரும்போல் தெரிகிறதே? என்ற ராஜாவின் வார்த்தைகள் கவிதாவை பாடாய்ப் படுத்திவிட்டன. தன் உள் மனதை அவன் கண்டுபிடித்து விட்டானா.... என்ற பயம், தன்னை அவ்வளவு கேவலமாய் நினைத்து விட்டானா என்ற கோபம். அன்று முழுதும் அவளை தூங்க விடாமல் யோசிக்க வைத்தது. ராஜா அப்படிக் கேட்டதும் கவிதா ஒரு கணம் அவமானத்தில் அதிர்ந்து விட்டாள்.

அவள் ஒன்றும் பேசவும் இல்லை. அவளால் பேசவும் முடியவில்லை. விருட்டென சினம் பொங்கியவளாய், உதடு துடிக்க சூமை விட்டு வெளிவந்ததோடு சரி, ராஜாவும் அவளைத் தடுத்து நிறுத்தவில்லை. அவள் கோபப்படட்டும் என்று அப்படியே விட்டுவிட்டான்.

மேலும் கவிதாவுக்கு ராஜா பேச்சில் அலைகிற கேஸ் என்று சொல்லியது பயங்கர கோபத்தை உண்டு பண்ணியது. நான் என்ன அலைகிற கேஸா? என்னையும் அந்த அலைகிற கேஸ் லிஸ்டில்தான் அப்படி ராஜா சேர்த்திருக்கிறாரோ? என்ன ஒரு திமிர் அவருக்கு! என அடிக்கடி வெகுண்டு போனாள். கூடவே நாம் அப்படி காதல் பற்றி கேட்டது தப்புதான். எதுவாயிருந்தால் என்ன? நாம் உண்டு நம் வேலை உண்டு என இருந்தால் ஒரு பிரச்சனையும் வராதே? இப்படி வீணாய் சுடுசொற்கள் கேட்டு தவிக்க வேண்டாமே? எல்லாம் என் தப்பு!

தன்னைத்தானே கடிந்து கொண்டாள். மனதளவில் இனி வீணாய் வம்பு தும்புகளுக்கு இடம் கொடுக்காமல் வேலையில் முழுக் கவனத்தைச் செலுத்த வேண்டும் என உறுதியும் எடுத்துக் கொண்டாள்.

கவிதா தான் கொண்ட உறுதியை அடுத்த நாளே செயல்படுத்திவிட்டாள். தனது வேலைப் பணிகளிலே கண்ணும் கருத்துமாய் இருந்தாள். அவளுக்க அவ்வாரம் அலுவலகத்தில் வேலைப் பளு அதிகமாயிற்று.



அவர்கள் ஏஜண்டாய் பணிபுரியும் பன்னாட்டு நிறுவனத்திற்கு சொந்தமான மூன்று நான்கு கப்பல்களை சேர்ந்தாற் போல் துறைமுகத்திற்கு வந்துவிட்டன. நான்கு கப்பல்களிலும் அன்லோடிங் இருந்தது. நிறைய கன்டெய்னர்களை வெளியிறக்கி உடனடியாக முக்கியச் சரக்குகளை டெலிவரி செய்ய வேண்டிய நெருக்கடியான நிலை கூட ஏற்பட்டது.

ராஜா ஏறக்குறைய பம்பரமாய்த்தான் இருந்தான். ஏகப்பட்ட போன்கால்கள். நொடிக்கொரு தரம் வரும் பேக்ஸ் குறிப்புகள் எல்லாவற்றையும் கொஞ்சமும் பதட்டப் படாமல் அதே நேரம் வேலையில் விரைவு காட்டி அவன் செயல்படும் லாவகத்தைக் கண்டு கவிதாவே ஓரிரு முறை வியந்து அதிசயித்தாள். போதாக் குறைக்கு அவனுடன் அடிக்கடி காரில் துறைமுகம் செல்ல வேண்டியிருந்தது.

அன்லோடிங் ஸ்பாட்டில் சரக்குகள் சரியாக இருப்பதைக் குறிப்பெடுக்கும் வேலை அவளுக்கு. காரில் ஏறு கவிதா நேரமாயிற்று! என்று ராஜா அவசரமாய் அழைத்ததும், மின்னல் வேகத்தில் பைல்களுடன் ஏறி காரில் அமர்வது தான் அவளுக்குத் தெரியும். கண் மூடி கண் திறக்கும் நேரத்தில் துறைமுகத்தில் இருப்பாள். அப்படி நெரிசலான வீதிகளில் காரை சிட்டாய்ப் பறக்கவிட்டு ஓட்டும் ராஜாவை வியந்து பார்ப்பாள்.

அந்த பளபளப்பான சுருள சுருள கேசமும், அவனது குழி விழும் புஷ்டியான கன்னமும் அவளை ரொம்பவும் ரசிக்க வைக்கும். ஓரிரு சமயங்களில் ஆவலை அடக்க முடியாமல் அவளுக்க கிள்ளிப் பார்க்கக் கூட தோன்றும். அப்படி கிள்ளிப் பார்த்தால் ராஜா என்ன செய்வான்.. என்றெல்லாம் நினைப்பாள். மறுகணமே என்ன ஒரு விபரீத ஆசை! புத்தி ஏன் இப்படி அலைகிறது! என தன்னைத்தானே கடிந்து கொள்வாள்.

ஆனால் ராஜாவோ அவள் மனப் போராட்டங்களை கவனியாதவனாய் சாலையிலே கவனமாய் இருப்பான் ஓரிரு சமயங்களில் அவளை நோக்கித் திரும்பும் போது சின்னப் புன்முறுவலே அவளுக்கு தேவாமிர்தம்போல் இருக்கும். மறுபடி திரும்ப மாட்டானா தன்னை நோக்கி புன்னகைக்க மாட்டானா என்று அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருப்பாள்.

ஓரிரு சமயம் ராஜா திரும்புபவன். அவள் தன்னையே வைத்த கண் மாறாமல் பார்ப்பதைக் கண்டுபிடிக்கும் போது சட்டென கேள்வி கேட்பது போல் கவிதா முகபாவனையே மாற்றி விடுவாள். ஏதோ ஒரு உப்புச் சப்பில்லாத கேள்வியைக் கேட்டும் வைப்பாள். ராஜாவும் முகம்

சுளிக்காமல் பதில் சொல்வான். மறுபடி ஒரு புன்முறுவல். ஒரு சிரிப்பு அவ்வளவுதான்.

அன்று இரவு கவிதா வீட்டுக்கு வந்தால் ஒன்று ஓடாது. தூக்கமும் வராது. ராஜா முகம் தான் மறுபடி மறுபடி வரும் அந்த புன்முறுவல் சிரிப்பு அவளை ரொம்பவும் இம்சிக்கும். பயம் தன்னைத்தானே வாட்டும்.

ராஜாவை எதற்கு நினைக்க வேண்டும்? ஏன் திரும்பத் திரும்ப அவரைப் பற்றியே நினைத்துக் கொண்டு.. எனக்கு என்னதான் ஆயிற்று? என்னதான் நடக்கிறது? எதற்கு இந்த வீண் விபரீத ஆசைகள்?

மனதில் கேள்விகள் தாண்டவமாடும். மனதை அடக்கிப் பார்ப்பாள் கவிதா. தன் நிலை என்ன? தான் யார்? என்பது பற்றியெல்லாம் நினைப்பாள். எல்லாம் இரவோடு சரி. காலை எழுந்து விட்டால் எப்போது அலுவலகம் செல்வோம். எப்போது ராஜாவைப் பார்ப்போம் என்ற நினைப்பே படபடப்பாய் சிறகடிக்க ஆரம்பித்து விடும். அந்த படபடப்பு அவளை ஆசை தீர பார்த்த பின்னே அடங்கவும் செய்யும்.

ஓரிரு சமயங்களில் ராஜாவும் தன்னை கவனிப்பதைக் கொண்டு கவிதாவும் திடுக்கிட்டிருக்கிறாள். அவள் வேலையில் கவனமாய் இருக்கும்போது தற்செயலாய் நிமிர்ந்தவள், ராஜா தன்னையே வைத்த கண் வாங்காமல் நோக்குவது கண்டு சிவந்திருக்கிறாள். ஒரு வேளை ராஜாவிற்கும் மனதில் துளிர்க்கின்றதோ? இதயம் இனம் புரியாத படபடப்பை நம்மைப் போலவே அவருக்கும் ஏற்படுத்துகின்றதோ? என்றெல்லாம் நினைப்பாள்.

ஆனால் அடுத்த கணமே எவ்வித மனச் சலனமும் இல்லாமல் அவன் வேலை பார்ப்பது கண்டு ஏமாந்து போவாள். மைதிலி சொன்னதுதான் அவளுக்கு ஞாபகம் வந்தது.

ராஜாவைப் பற்றி பயப்படவேண்டாம். அவர் அதிகம் நெருங்க மாட்டார்.... அளவோடுதான் பழகுவார்....

நிஜமாகவா?

ஆமாம்... பெண்கள் என்றால் அவருக்கு அலர்ஜி...

அலர்ஜியா...?

ஆம்... அன்று அவர் காதல் தோல்வி கதையொன்று சொன்னேனே... அதிலிருந்து பெண்கள் அவருக்கு அலர்ஜியாகி விட்டார்கள்...



தோழி மைதிலி இப்படிச் சொன்னதும் கவிதாவுக்கு சிரிப்புதான் வந்துவிட்டது. அடக்கிக் கொண்டாள். காதலாம்.. கத்தரிக்காயாம்... ஏமாந்து விட்டாராம்... நன்றாக கதை விட்டிருக்கிறார். நீயும் ஏமாந்து விட்டாயே? என்று எண்ணிக் கொண்டாள்.

ராஜா சொன்ன தற்காப்புக் காரணம் அலைகிற கேஸ் போன்ற விஷயங்கள் அவ்வப்போது எழுந்து அவளை பயமுறுத்தின. எந்த கணத்திலும் தன் மனநிலையை அவன் கண்டுபிடித்து விடுவானோ... தன்னைச் சீப்பாய் சராசரி பெண்கள் லிஸ்ட்டில் சேர்த்து விடுவானோ.. என்ற பயம் விசுவரூபமெடுத்து ஆடியது.

ஆனால் அந்த வாரம் அவள் கொண்டிருந்த மனநிலைக்கேற்பவே ராஜா கூப்பிட்டு அந்த விஷயத்தைச் சொன்னதும் மகிழ்ச்சி தாண்டவமாடி விட்டது.

கவிதா இன்று மாலை நீ ப்ரீதானே? என்னுடன் வர முடியுமா?

எதற்கு சார்?

வீடு வரைக்கும்தான்...

வீட்டிற்கா?

ஆமாம். வீட்டில் அம்மாவிடம் உன்னைப் பற்றி சொல்லி இருந்தேன். அம்மாவிற்கு உன்னைப் பார்க்க வேண்டுமென ஆசை. ஒருநாள் வீட்டிற்கு அழைத்துவாயேன் என்று சொன்னார்கள். அதான் கேட்டேன்... வருகிறாயா?

வருகிறேன்... சார்...

காது மடல்கள் அதிர சிறு குழந்தைக்கு ஐஸ்க்ரீம் கிடைத்தது போல் உற்சாகமாய் தலையாட்டினாள் கவிதா.



## 6



வருகிறேன் சார்... என்று ராஜாவிடம் சொல்லிது முதல் கவிதாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. உற்சாகம் சந்தோஷமாய் பீறிட்டுக் கிளம்பியது. அப்படியே மேலும் கீழும் குதிக்க உடம்பே ஆடுவது போல் உணர்ந்தாள்.

ராஜா வீட்டிற்கு அழைக்கிறார். அவரது தாயார் பார்க்க வேண்டும் என்று சொன்னார்களாம்? எதற்காக? எதற்காக...?

தன்னைத்தானே கேட்டுப் பார்த்தாள். ராஜா சொல்லியதெல்லாம் நிஜம்தானே? நம்மிடம்தானே பேசினார். நம்மைத்தானே வீட்டிற்கு அழைத்தார்? என்றெல்லாம் எண்ணி தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். கண்கள் அவளையறியாமல் கடிகாரத்தையே நொடிக்கொரு தரம் பார்த்துக் கொண்டிருந்தன.

மணி ஐந்தை எட்ட வேண்டியதுதான்... ராஜாவுடன் கிளம்ப வேண்டியதுதான். உதடுகள் முணுமுணுக்க கவிதா சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

மணி ஐந்து. அவள் நினைப்பு போலவே எல்லாம் நடந்தது. ராஜா புன்முறுவலுடன் ரூமை விட்டு வந்து வருகிறாயா? எ;னறு கேட்டதும் குதி போட்டுக் கொண்டு கவிதா கிளம்பினாள்.

காரை வெளியெடுத்தது கவிதா ஏறியதும் சர்ரென பறக்க விட்டவன் சட்டென பிரேக்கைப் பிடித்து, கவிதா ஒரு முக்கியமான விஷயம்... என்றான்.

என்ன?

ஒரு நிபந்தனை...?

நிபந்தனையா?

ஆமாம். வீட்டில் அம்மாவிடம் பேசி முடித்து நானே திரும்பவும் காரில் உன்னை ட்ராப் செய்து விடுவேன்.... இதுதான் நிபந்தனை....

அவன் என்னவோ ஏதோ சொல்லப் போகிறான் என்று பயந்தவள் அவன் சட்டென இப்படிச் சொன்னதும் தன்னை மறந்து சிரித்து விட்டாள். பலமாக தலையாட்டினாள்.

அவள் குபீரென சிரித்ததை ராஜா வெகுவாய் ரசித்தான். கலகலவென மணிகளைச் சிதற விட்டது போல் முத்துப் பற்கள் வரிசையில் வெளிவந்த சிரிப்பில் அந்தக் குழிவிழும் பளபளப்புக் கன்னம், பரவசம் முழுவதையும் சட்டென கொண்டு வரும் அழகு முகம், எல்லாவற்றையும் ரசித்துப் பார்த்தவன், நிச்சயம் இவள் பேரழகிதான்! தனக்குள் உதடுகளுக்குள் முணுமுணத்துக் கொண்டான்.



அவன் மன ஓட்டத்தை அறியாதவளாய் கவிதா, அம்மா எப்படி இருப்பார்கள்? அவர்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அதிகரித்து விட்டது என்றாள் அசட்டுக் கேள்வி கேட்டபடி.

இம்முறை ராஜா சிரித்து விட்டான்.

அவர்களும் உன்னைப் போல் அழகிதான். சிறு வயதில் அழகாய் இருந்தவர்கள்தான், போதுமா?

ராஜா மறுபடி சிறித்தான்.

கவிதாவுக்கு சட்டென புதிராயிருந்தது. நாம் ஒன்று கேட்க அழகி அது இதுவென கேலி செய்கிறானா என்று கூட கோபம் தோன்றியது. மறு கணமே அவன் தன்னை ஊடுருவிப் பார்த்த ஆழ்மான பார்வை அவன் விளையாடவில்லை என்பதை உணர்த்தியது. உன்னைப் போல் அழகி என்ற வார்த்தை காதில் ரீங்காரமிட்டு அவளை ஒரு ஆட்டு ஆட்டியது. ராஜா தன்னைச் சந்தர்ப்பங்களில் அடிக்கடி கவனிக்கிறான். தான் கவனியாதபோது தன்னை வெகுவாய் ரசிக்கிறான் என்கிற உண்மை சந்தோஷ நீரூற்றாய் அவளுள் பாய ஆரம்பித்தது.

கண்கள் படபடக்க அவனைப் பார்த்தாள். ராஜாவோ முகம் மாறி சீரியஸாக காரைச் செலுத்திக் கொண்டிருந்தான். விர்ரென அடித்த தென்றலில் அவனது சுருள் கேசம் சற்றே கலைந்து முன் நெற்றியில் லாவகமாய் விழுந்திருக்க... அகன்ற நெற்றி, நீண்ட நேரான நாசி, எதிராளியை விழுங்கித துளைக்கும் விழிகள்.... செதுக்கினாற் போல் முகவாய்... வனப்புடன் உறுதியான உடற் கட்டும் சீரான உயரம்... சிவப்பு நிறம்.

சந்தேகமில்லை. இவனும அழகன்தான். மெய் மறந்து அவனையே ரசித்த கவிதா கூடவே இளமையை மீறிய பொறுப்புணர்ச்சியும் உறுதியான ஸ்திரத் தன்மையும் அவனது ஒவ்வொரு செய்கையிலும் இழைந்திருப்பதை வியந்து கவனித்தாள்.

அதற்குள் கார் ராஜாவின் பங்களாவை நெருங்கிவிட்டது. அந்தப் பெரிய க்ரில் கேட்டை கார் நெருங்கும் முன் கூர்க்கா அவசரமாய்த் திறந்து விட சர்ரென உள்ளே நுழைந்தபடி, இதுதான் நான் வசிக்கும் குடில் கவிதா! என்ற ராஜாவை அதிசயமாய்ப் பார்த்தாள்.

குடிலா? பங்களா போல் அல்லவா காட்சி தருகிறது...?

உள்ளுக்குள் வியந்தவளுக்கு அவன் குடில் என்று சொன்னதின் அர்த்தம் சற்று நேரத்திலே புரிந்தது. பங்களாவைச் சுற்றிலும் விஸ்தாரமான

இடம். அழகிய பச்சைப் பசேல் புல்வெளிகள். தோட்டப் பகுதியில் வேலி போடப்பட்டு வகை வகையான செடிகள், வண்ண வண்ணமாய் வழி நெடுக பூத்துக் குலுங்கும் உற்சாக மலர்கள், நிழல் சேர்க்கும் பெரிய பெரிய மரங்கள். எல்லாமே ஒரு அழகிய சோலை வனத்தில் நுழைந்த உணர்வையே அவளுள் ஏற்படுத்தியது.

எல்லா அம்மாவின் கை வண்ணம். அவர்களது முக்கியப் பணியே இவைகளைப் பராமரிப்பதுதான்!

அவள் வியப்பதைப் பார்த்து ராஜா சொல்லியபடி பங்களாவினுள் அழைத்துச் சென்றான். கவிதா பங்களாவை அளவெடுத்தவாறே உள்ளே நுழைந்தாள். பளபளப்பான பளிங்குக் கற்கள், விசாலமான நீள நீள அறைகள், முன் அறையை அடைத்தபடி பெரிய பியானோ, சான்லியர் விளக்குகள் புராதன சிற்பங்கள், காலரியில் வாங்கப்பட்ட மாடர்ன் பெயிண்ட்டிங்குகள். புத்தக அலமாரிகள் எல்லாமே கவிதாவை வியக்க வைத்தன. ராஜா வித்தியாசமான ரசிகர் போலும் என எண்ணிக் கொண்டாள்.

ர்ஜா மாடிப்படியேறி பெரிய ஹாலுக்குள் நுழைந்தான். அந்த விஸ்தாரமான ஹாலின் ஓரமாய் சிறிய நாற்காலி ஒன்றில் அமர்ந்தபடி சற்றே வயதான பெண்மணி ஒருவர் மூக்குக் கண்ணாடி உதவியுடன் ஊசியும் நூலுமாய் எதையோ கவனமாய்ப் பின்னிக் கொண்டிருக்க, இவர்கள்தான் என் அம்மா. சும்மா இருக்க மாட்டார்கள். எப்போதும் எதையாவது செய்து கொண்டிருப்பார்கள்...

ராஜா காட்டியபடி புன்னகையுடன் நெருங்கினான். ஆள் அரவம கேட்டு அந்தப் பெண்மணியும் நிமிர்ந்து பார்த்தார். அவர் ராஜாவின் தாயார் அன்னபூரணி.



## 7



எனக்கு பொண்ணும் பார்த்து விட்டார்கள். இனி கல்யாணம் நடக்க வேண்டியதுதான் பாக்கி...! பங்களாவை விட்டு கிளம்பி சாதாரணமாய் சொல்லிவிட்டு அவளை வீட்டில் இறக்கிச் சென்று விட்டான் ராஜா. கவிதாவிற்கோ இடி விழுந்தாற்போல் இருந்தது. அன்று முழுவதும் ராஜா



வீட்டிற்குப் போனது அவரது தாயாரைச் சந்தித்தது என்றெல்லாம் குதூகலித்த அவளது மொத்த சந்தோஷமும் வெடித்துச் சிதறியது.

பெண் பார்த்துவிட்டார்கள் என்றால் யார், யார் அந்தப் பெண்? ராஜாவிற்கு மனைவியாக வரப் போகும் அந்த அழகு மங்கை யார்? ராஜா சொல்வதைப் பார்த்தால் ஏற்கனவே பார்த்து முடிவெல்லாம் செய்து விட்டாற் போல் அல்லவா தெரிகிறது. அப்படியானால்... அப்படியானால்.. நிச்சயமாய் அந்தப் பெண் நானாய் இருக்க வாய்ப்பில்லையே!

கவிதா அப்படி சிந்தித்தாள். அந்த நினைப்பே அவளைக் கண் கலங்க வைத்துவிட்டது. இவ்வளவு மணி நேரமும் ராஜாவின் அருகில் இருந்தது. மெய்மறந்த அவனை ரசித்து மகிழ்ந்தது. இப்படிப்பட்டவனுடன் பழக சந்தர்ப்பம் கிடைத்த தான் பாக்கியசாலிதான் என்று நினைத்துக் கொண்டது எல்லாமே திடீரென சூன்யமாய் பகல் கனவாய் மாறிவிட்டது கண்டு திடுக்கிட்டாள் கவிதா.

சோர்வாய் வீட்டிற்குள் நுழைந்தவளைக் கண்டு போளி மாமியும் திடுக்கிட்டாள். என்னாயிற்று குழந்தே? என்று ஆவலாய்க் கேட்டவளிடம் ஒன்றுமில்லை. சற்றுத் தலைவலிதான் அம்மா. தூங்கினால் சரியாகிவிடும் என சமாளித்தாள்.

அந்நிலையிலும் மாமி தடுத்தும் மறுநாள் போளிக்குத் தேவையான கடலைப்பருப்பை அளவு பார்த்து எடுத்து நீரில் ஊறப் போட்டாள். காலையில் கிளற வேண்டிய வெல்லப் பாகிற்கான வெல்லக் கட்டிகளை எடுத்து வைத்தாள். பாத்திரங்கள் ஒன்று விடாமல் கழுவி வைத்து வரிசையாய் அடுக்கினாள்.

வேலைகளை முடித்துவிட்டு தூங்கச் சென்றவளுக்கு தூக்கம் வரவில்லை. ராஜாவின் வார்த்தைகள் தீயாய் சுட்டன. எனக்கப் பெண் பாரத்துவிட்டார்கள்... என்ற அந்த வார்த்தைகளை மட்டும் கொட்டாமல் ராஜா சென்றிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

இன்று எவ்வளவு சந்தோஷப்பட்டேன்? எப்படியெல்லாம் மகிழ்ந்தேன். எல்லாவற்றையும் ஒரே வார்த்தையால் பொசுக்கி விட்டாரே? கவிதாவால் தாங்க முடியவில்லை. இழக்கக் கூடாத ஒன்றை இழந்து விட்டாற் போல வருந்தினாள். நெடுநேரம் தூக்கம் வராமல் புரண்டவள் அப்படியே தூங்கியும் போனாள்.

காலை கண் விழித்தவளை மாமி நெருங்கி, தலைவலி சரியாயிற்றா குழந்தே? என்று கேட்டதும்தான் சுய நினைவுககு வந்தாள். தற்செயலாக

நெற்றியில் கை வைத்தவள் திடுக்கிட்டாள். நெற்றி முழுவதும் பரபரவென்று தைலம் போல் சருகுகளாய் காய்ந்திருந்தது.

பயப்படாதே குழந்தை.. தலைவலின்னு சொன்னியே... அதான் நான் இஞ்சிச் சாரையும் பூண்டையுமீ நுணுக்கி தைலமாய் இரவு தேய்த்து விட்டேன். தலைவலி சரியாயிற்றா...? மாமி மறுபடியும் வினவ மாமியின் அன்பைக் கண்டு ஒரு கணம் நெகிழ்ந்து போனவளாய் இறுக மாமியைக் கட்டிக் கொண்டாள். எல்லாம் சரியாயிற்று அம்மா! என்றபடி மாமியின் தோளில் புதைந்து கொண்டாள்.

அவளுக்கு அக்கணம் மாமிதான் சகலமும் என்று தோன்றியது. தானும் மாமியும் மட்டும் போதும். வேறு யாரும் வேண்டாம். வீணாய் மனதை அலைய விட்டு ஆசை வைத்து மனதைக் கெடுப்பானேன்? இறுக்கமாய் ஒரு கணம் நினைத்துக் கொண்டாலும் மறுகணமே ராஜாவின் முகம் மனதில் எழும்பி தள்ளாட வைத்தது.

குழப்பமான மன நிலையிலே அன்று அலுவலகத்திற்குக் கிளம்பினாள். நேற்று முதலாளியுடன் வீட்டிற்குச் சென்றிருந்தாயாமே? ஆவலாய் தோழி மைதிலி விசாரித்தபோது கூட கவிதா சுரத்தில்லாமல் தலையை மட்டும் ஆட்டினாள். புரியாமல் மைதிலி அகன்றாள்.

மனம் முழுவதையும் வேலையில் திருப்பி பாரம் அகன்று ஆழ்ந்து விடலாம் என்றுதான் கவிதா பார்த்தாள். ஆனால் அதற்கும் முடியவில்லை. அன்று பார்த்து லோட்க்ளியரிங் எதுவும் இல்லாததால் அவளுக்கு சுத்தமாய் வேலையும் இல்லை. பழைய பைல்களை 'வேண்டுமென்றே இழுத்துப் போட்டு கணக்குகளை டேலி செய்து விடுவோம் என்று நினைத்தாள். பைல் ரூமிற்குள் நுழைந்து அவளது செக்ஷன் பைல்கள் முழுவதையும் தூக்க முடியாத குறையாய் எடுத்து வந்தாள். தூசி தட்டி அவற்றைப் பிரிக்க ஆரம்பித்திருப்பாள்.

இண்டர்காம் கிணுகிணுத்தது.

அவசரமாய் எடுத்தவளின் காதுகளில் கவிதா ஒரு முக்கியமான விஷயம், ஒரு நிமிடம் வருகிறாயா? என்றது ராஜாவின் குரல்.

ராஜாவின் குரலைக் கேட்டதுமே டக்கென ஒரு சிலிர்ப்பு உடம்பினுள் ஓடியது. இந்த சிலிர்ப்பு படபடப்பு எல்லாம் அனாவசியம் என்று தன்னைத் தானே கடிந்து அடக்கிக் கொண்டாள். முடுக்கிவிட்ட இயந்திரம் போல் இயந்திர கதியாய் வேறு எந்த நினைவுகளையும் அண்ட



விடாமல் கவிதா ராஜா முன் போய் நின்றபோது, அவளை ஊடுருவிப் பார்த்த ராஜுழ அடக்க முடியாமல் சிரித்து விட்டான்.

என்னாயிற்று உனக்கு? என்று கேள்வியையும் ராஜா வீசினான்.

கவிதா எல்லாவற்றையும் அவன் கண்டுபிடித்து விட்டானா? என்ற ஆச்சரியத்தில் மிரள மிரள விழித்தவள், எனக்கா... எனக்கா.. ஒன்றும் ஆகவில்லை சார்! என்றாள் சமாளித்தபடி.

இல்லை. உனக்கு என்னமோ ஆகிவிட்டது. நேற்று என் வீட்டிற்கு வந்து சென்றது முதல் எதையோ பறி கொடுத்தது போல் ஆகிவிட்டாய். உன் அழகிய முகம் வாடி விட்டது. உன் தலைக்கு வலி வேறு வந்துவிட்டது. அப்படி என்னதான் நடந்து விட்டது உனக்கு?

ஒன்று... மில்லை... ஆமா... எனக்குத் தலைவலி என்று உங்களுக்கு.... யார் யார் சொன்னது? திக்கித் திணறி கேட்டவளைச் சிரிப்புடன் கூர்மையாய்ப் பார்த்தான்.

மாமி சொன்னார்கள்.. வரும் வழியில் பார்த்தேன். எல்லா விஷயமும் தெரிந்து விட்டது. நான் சொன்ன ஒரு வார்த்தை உன்னை இப்படி பாடாய் படுத்தி விட்டது. அப்படித்தானே... சொல் கவிதா?

ஸார்... என்ன சொல்கிறீர்கள்? வெடுக்கென கவிதா கேட்டாலும் உள்ளுக்குள் அவன் தன்னை நன்றாகக் கண்டுபிடித்து விட்டானே என்ற உணர்வு பலமாய் வாட்டியது.

ராஜாவோ அவளை ஊடுருவும் பார்வை பார்த்தபடியே பேசினான். கவிதா எல்லாம் எனக்குத் தெரியும். உன் மனதை வாட்டிய விஷயம் எதுவென்று கண்டுபிடித்து விட்டேன். ஆனால் அது உண்மையல்ல!

உண்மையில்லையா? என்ன... சொல்கிறீர்கள் ஸார்? எனக்கு ஒன்றும் புரியவில்லை....

ராஜா புருவங்களை உயர்த்தியவன், இன்னுமா புரியவில்லை? சரி புரியும்படியே சொல்கிறேன். எனக்குப் பெண் பார்த்து விட்டார்கள் என்று சொன்னது பொய். பெண் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதனால்தான் ஒவ்வொரு பெண்ணாய் அம்மாவிடம் காட்டி செலக்ஷன் வேலை நடந்து வருகிறது. நேற்று உன்னை வீட்டிற்கு கூட்டிப்

போனதும் அதற்குத்தான்... என்றவன் நிறுத்தி இப்போது எல்லாம் புரிகிறதா? என்றபடி ராஜா கண் சிமிட்டினான்.

குங்குமமாய்ச் சிவந்து போனாள் கவிதா.



# 8



சீட்டிற்கு வந்த கவிதாவிற்கு ஒன்றும் ஓடவில்லை. ராஜா சொன்னது மீண்டும் மீண்டும் ஒலித்தது. இது உண்மையா? இல்லை ராஜா விளையாடுகிறாரா? எப்படி என் உள் மனதை மனக் கலகத்தை கண்டுபிடித்தார். எது என்னைக் காட்டிக் கொடுத்தது? நடப்பதெல்லாம் நிஜமா? நிஜமான சொற்கள்தான் ராஜாவிடம் இருந்து வந்ததா?

ஒருபுறம், நம்ப முடியாமல் உணர்ச்சிகள் அவளை அலைக்கழித்தன. மறுபுறம் தான் வகையாய் ராஜாவிடம் அகப்பட்டுக் கொண்டோம். தான் விரும்புவதை ராஜா நன்றாக உணர்ந்து விட்டார் என்ற பயம் கலந்த உணர்ச்சி பூதாகரமாய் கிளம்பி அவளைத் தாக்கியது. நேற்று ராஜா ஒரு பொய்யைச் சொன்னதும் தான் வாடிய மலர் போல ஆனதும் இன்று தன் நிலையைக் கண்டுபிடித்து உண்மையைச் சொன்னதும் தான் மலர்ந்து போனதும் தன்னை வகையாய்க் காட்டிக் கொடுத்து விட்டது என்பதை கவிதா புரிந்து கொண்டாள்.

மைதிலி அவள் நெடுநேரம் வெறித்துக் கொண்டிருப்பதைக் கண்டு தோளைத் தட்டி, பகல் கனவா? நன்றாக கனவு காண்கிறாய்? என்றபோதுதான் கவிதா நினைவுக்கு வந்தாள். அசட்டுச் சிரிப்புடன், இரவு தலைவலி, நெடுநேரம் தூங்கவில்லை. அதான் இப்படி! சமாளித்து வேலையில் ஆழ்ந்தாள்.

ஆனாலும் அவளையறியாமல் மனதில் சந்தோஷம் நீரூற்றாய் கிளம்பிக் கொண்டிருந்தது. ராஜ்ழ தன்னைத் துப்பறிந்து கண்டுபிடித்தார். ஆனால் அதற்காக கடிந்து கொள்ளவில்லையே என நினைத்தாள். முன்பு வேலைக்குச் சேர்ந்த புதிதில் பணியாட்களை மனதைக் கண்டபடி அலைய விடக் கூடாது என்று மைதிலிக்கு ராஜா எச்சரித்த விஷயமெல்லாம் அவளுக்கு ஞாபகமாயிற்று. ராஜ்ழ அப்படி நம் மனதைக் கண்டுபிடித்தமைக்கு தன்னிடம் கோபம் கொள்ளாததே... தன்னிடம்



சம்மதம் சொன்னதற்காக அர்த்தமாயிருக்குமோ? என்றெல்லாம் மனம் கேள்வி மேல் கேள் எழுப்பி அவளைத் திணறடித்தது.

திணறிக் கொண்டிருந்த கவிதாவின் சிந்தனை மறுபடி தடைப்பட்டது. மறுபடி இண்டர்காம் ஒலி. எடுத்தவளை ரிசப்ஷனிஸ்டின் குரல் அதிரச் செய்தது.

உங்களைத் தேடி... விடுதித் தலைவியாம்... ரங்கமணி அம்மாள் என்று சொல்கிறார்கள்... பார்க்க வருகிறீர்களா?

ரங்கமணி அம்மாள் என்ற பெயரைக் கேட்டதும்தான் ஷாக்கடித்தது போல் உணர்வுக்கு வந்தாள். அடாடா! அம்மாவை மறந்தே போய்விட்டோமே? என்று வீராப்பாய் விடுதியை விட்டுக் கிளம்பியது. வேலை தேடு தேடென்று தேடியது. வாழ்க்கையை வெறுத்து முடித்துக் கொள்ள நினைத்து. போனி மாமி உதவிக் கரம் நீட்டி அவளுக்க அபயம் அளித்தது. எல்லாம் அவள் நினைவில் ஓடியது. நிலைமை இப்படியிருக்க எப்படி ரங்கமணி அ;மாவை மறந்து போனேன்? அவர்களுக்கு போனி மாமி வீட்டில் இருப்பது... வேலை தேடியிருப்பது... போன்ற தகவல்கள் கூட தெரிவிக்கவில்லையே? எவ்வளவு பெரிய முட்டாள் தனம்?

அதற்குள், இதுநாள் வரை வளர்த்து உருவாக்கிய இடத்தை மறந்து விட்டாள். உதாசீனப்படுத்தி விட்டாள் என்ற அவப் பெயரக்கு ஆளாகி விட்டேனே?

பதறித் துடித்துப் போனவளாய் விறுவிறுவென எழுந்து ரிசப்ஷனுக்கு ஓடி வந்தாள் கவிதா. தன்னுடைய பழைய மூக்குக் கண்ணாடியை இடுக்கியவாறு தன்னை ஆவலாய் எதிர்நோக்கிக் கொண்டிருந்த ரங்கமணி அம்மாவைக் கண்டதும் உணர்ச்சிகளைத் தாங்க முடியாமல் அவர்களை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டாள் கவிதா.

என்னை மன்னித்து விடுங்கள் அம்மா. உங்களை ரொம்பவும் சிரமப்படுத்தி விட்டேன்... என்று சிறு குழந்தை போல் தன் தோளில் முகம் புதைத்து தேம்பிய கவிதாவைக் கண்டு ரங்கமணி அம்மாளும் நெகிழ்ந்துதான் போனாள்.

கண்கலங்க அவளது தலை நிமிர்த்தி பரிவுடன் வாரி விட்டவள், எனக்கு எல்லாம் தெரியும், குழந்தே. எல்லாவற்றையும் மறுநாளே வந்து மாமி சொல்லிவிட்டார்கள். ஆனாலும் எங்களையெல்லாம் பிரிந்து இப்படி எங்களைத் துடிக்க வைத்துவிட்டாயே அம்மா... என்ற போது கவிதாவால் அழுகையை அடக்க முடியவில்லை.

சேயிடம் தஞ்சமடைந்த குஞ்சுப் பறவை போல் ரங்கமணி அம்மாளோடு அப்படியே ஒட்டிக் கொண்டாள். ரங்கமணி அம்மாள்தான் அவளைத் தேற்றினாள். கவலைப்படாதே கவிதா. எல்லாம் நல்லபடியாகத்தான் நடந்திருக்கிறது. உனக்கு நல்ல இடத்தில் வேலை கிடைத்திருக்கிறது. எனக்கு மகிழ்ச்சிதான்! என்றாள்.

ரங்கமணி அம்மாளின் பேச்சு அவளை ஆறுதல்படுத்தியது. அவள் வேலை பார்க்கும் அலுவலகம் பற்றி அவளது முதலாளிகள் பற்றி எனக்கு நன்கு தெரியும். அவர்கள் ரொம்பவும் நல்லவர்கள். நீ வரவேண்டிய இடத்திற்குத்தான் வந்திருக்கிறாய். எனக்கு ரொம்பவும் நிம்மதியாய் இருக்கிறது... என்ற ரங்கமணி அம்மாளின் பேச்சு கவிதாவை மகிழ்ச்சியுறச் செய்தது.

ரங்கமணி அம்மாள் அது இதுவென பேசிவிட்டு, கடைசியில் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல 'வேண்டும் கவிதா என் விஷயத்திற்கு வந்தாள்.

அப்படி என்ன முக்கியமான விஷயம் அம்மா? என்றபடி கவிதாவும் கன்னத்தில் கை வைத்தவாறு ஆவலாய்ப் பார்த்தாள்.

ரங்கமணி அம்மாளுக்கு அந்த விஷயத்தைச் சொல்ல சங்கடமாய்த்தான் இருந்தது. ஆனாலும், அவள் நிலையில் சொல்லியாக வேண்டுமே? வேறு வழியும் அவளுக்கு இல்லையே!

ரங்கமணி அம்மாள் மெல்ல மெல்ல அந்த விஷயத்தை கவிதாவிடம் சொல்ல ஆரம்பித்தாள். கவிதாவின் முகமும் மெல்ல மெல்ல மாறி பேயறைந்தது போல் ஆயிற்று.



## 9



கவிதாவின் முகம் பேயறைந்தது போல்தான் ஆகிவிட்டது. அவளது வாழ்க்கையில் அந்த அளவிற்கு அவளது முகம் வெளிறியதும் இல்லை. விஷ கஷாயத்தைச் சாப்பிட்டவள் போல்தான் துடித்தாள்.

ரங்கமணி அம்மாள் சொல்லும் விஷயமும் நம்பும் படியாகவா இருக்கிறது? கவிதா அவர்களது அனாதை இல்லத்தில் வளர்ந்ததற்கு முக்கிய



காரணமாக ஒருவர் இருக்கிறாராம். அந்த பெரிய மனதும் தாராள குணமும் கொண்ட பெரியவர்தான் கவிதாவின் செலவுகளை சிறு வயதிலிருந்து பராமரித்து வருகிறாராம். சிறு வயது முதல் அவள் கல்லூரி மாணவியாய் தேர்ச்சி பெற்று ஆனது வரை தேவைப்பட்ட அத்தனை செலவையும் அவர்தான் ஏற்றுக்கொண்டாராம். அவளது செலவுகளுக்கு கொடுக்கப்பட்டவை அனைத்தும் அவர் கொடுத்த பணத்தில் இருந்துதானாம்.

சொல்லப் போனால் இப்படி நெடுநெடு என கவிதா உருவாகி இருப்பதற்கு காரணமே அவர்தானாம். ஆக டி.வி.யில் நிகழ்ச்சிகளுக்கு ஸ்பான்சர் பண்ணும் கம்பெனிகளைப் போல அவளது வாழ்க்கைக்கு ஸ்பான்சர் பண்ணியவர் அந்தப் பெரியவர். அந்தப் பெரியவரைப் பற்றிதான் ரங்கமணி அம்மாள் கதை கதையாய் சொல்லி முடிக்க கவிதா வியப்பின் உச்சிக்கே சென்று விட்டாள்.

நீங்கள் சொல்வதெல்லாம் நிஜமா அம்மா? நான் அவரைப் பார்த்தது இல்லையே? இதையெல்லாம் என்னால் நம்பவும் முடியவில்லையே?

அப்பாவியாய் விழித்தவளின் தலைக் கேசத்தை ஆதரவாய் கோதியவாறு எல்லாம் உண்மைதான் கவிதா என்றாள் ரங்கமணி அம்மாள் உறுதியான குரலில். உன்னிடம் இவ்வளவு நாள் இதைச் சொல்லாததற்குக் காரணமும் இருக்கிறது.

என்ன காரணம் அம்மா?

அது... அந்தப் பெரியவர் விரும்பாததுதான்... நான் தான் பணம் கொடுத்து வளர்க்கிறேன். என்னால்தான் நீ வளர்கிறாய்... என்றெல்லாம் அவர் தம்பட்டமோ தற்பெருமை கொள்வதையோ அந்தப் பெரியவர் விரும்பவில்லை. மேலும்...

சொல்லுங்கள் அம்மா...

உனக்குத்தான் தெரியுமே கவிதா, நம் விடுதியைப் பராமரிக்க போதுமான நிதி வசதியில்லாமல் நான் திணறிக்கொண்டிருக்கிறேன் என்று... அதனால் இதுபோன்று சமூகத்து பெரிய மனிதர்கள் உதவும் போது மனமுவந்து ஏற்றுக் கொள்கிறேன். இப்போது அந்தப் பெரிய மனிதரைப் பற்றிச் சொல்லட்டுமா?

நிறுத்திவிட்டு ரங்கமணி அம்மாள் பார்க்க கவிதா மேலும் உன்னிப்பாக தன்னை ஆக்கிக் கொண்டாள்.

அவர் பெயர் முருகதாசர். பெயருக்கேற்றாற் போல் தீவிர முருகபக்தர். பரம்பரை பணக்காரர். ஏகப்பட்ட நில புலன்களுக்குச் சொந்தக்காரர். அவர்தான் பதினெட்டு வருடங்களுக்க முன் நம் விடுதிடிக்கு வந்தார். அப்போது நீ சுட்டி குழந்தையாய் துறுதுறு சிறுமியாய் இருந்தாய். சுறுசுறுப்பான உன்னைப் பார்த்துமே அவருக்குப் பிடித்துப் போயிற்று. அதனாலே உடன் உனது படிப்பு மற்றும் பராமரிப்புச் செலவுகள் அனைத்தையும் தான் ஏற்றுக் கொள்ளப் போவதாய் உறுதியுடன் சொல்லிவிட்டார். நானும் மகிழ்ச்சியோடு சம்மதித்து விட்டேன். அது முதல் உனக்குத் தேவையான செலவுகளுக்கு மாதந் தவறாமல் பணம் அனுப்புவார். அடிக்கடி வந்து உன்னைப் பார்ப்பார்...

என்னைப் பார்ப்பாரா? நான் அவர்களைப் பார்த்ததே இல்லையே அம்மா?

வியந்து போய் கேட்ட கவிதாவைக் கண்டு ரங்கமணி அம்மாள் அடக்க முடியாமல் சிரித்தாள்.

அதற்கும் காரணமிருக்கிறது கவிதா. நான் சொன்னேனே, அவர் புகழைச் சிறிதும் விரும்பாதவர் என்று. அதனாலே அவர் தன்னை உன்னிடம் காட்டிக் கொள்ள விரும்பியதில்லை. மேலும் நீ மற்ற பெண்களோடு பெண்களாய் வளர்வதையே விரும்பினார். உன்னை நீ அறியா வண்ணம் பலமுறை பார்த்துச் சென்றிருக்கிறார். நானே அவருக்கு அடிக்கடி காட்டியிருகிறேன். நல்ல பெண்ணாய் நீ வளர்கிறாய் என்று அவர் சந்தோப் பட்டதும் உண்டு.

சொல்லியவாறு அந்த ரங்கமணி அம்மாள் பெருமூச்சொன்றை விட்டு இளைப்பாறியவாறு பேச்சை நிறுத்டதினாள். கதை போல் காது மடல்கள் அதிர தலையாட்டிக் கேட்டுக்கொண்டிருந்த கவிதாவையே உற்றுப் பார்த்தாள்.

கவிதா, நான் இன்னும் விஷயத்திற்கே வரவில்லை. இனிமேல்தான் வரப் போகிறேன். உன்னிடம் அதைச்சொல்ல தயக்கமாகவும், இருக்கிறது. நீ சந்தோஷம் கொள்வாயா மாட்டாயா என்று பயமாகவும் இருக்கிறது...

பீடிகையுடன் நிறுத்திய ரங்கமணி அம்மாளை அவசரமாய்க் குறுக்கிட்டு, எதுவானாலும் தயங்காமல் சொல்லுங்கள் அம்மா... என்று தயக்கம் நீக்கினாள் கவிதா.



ரங்கமணி அம்மாள் தனது பெருத்த உடம்பைச் சிலுப்பிக் கொண்டாள்.

கவிதா, நான் அன்று விடுதியில் உன்னிடம, நீ படித்து முடித்து விட்டாய். இனி உன் சொந்தக் காலில் நின்று கொள்ள வேண்டும். விடுதிக்குச் சிரமம் வைக்கக் கூடாது. விடுதியின் பொருளாதார நிலைமை அப்படி என்றெல்லாம் சொன்னேனே.... ஞாபகமிருக்கிறதா உனக்கு?

ஞாபகமிருக்கிறது அம்மா....

அதனால்தானே... நீயும் ரோஷம் கொண்டவளாய் பெட்டியும் கையுமாய் சொல்லாமல் கொள்ளாமல் உடனே கிளம்பி விட்டாய்...

கவிதா பலஹீனமாய் தலையசைக்க ரங்கமணி அம்மாள் தொடர்ந்தாள்.

ஆனால்... நான் சொல்ல வந்தது வேறு... நீ சொந்தக் காலில் நின்று கொள்ள வேண்டும். இனி விடுதிக்கு சிரமம் வைக்கக் கூடாது என்று சொன்னதின் அர்த்தம் வேறு.... நீதான் தவறாகப் புரிந்து கொண்டாய்....

என்ன தவறாகப் புரிந்து கொண்டேனா?

ஆமாம் தவறாகப் புரிந்து கொண்டாய். நான் அப்படி நீ சொந்தக் காலில் நின்று கொள் என்று சொன்னது, நீ வேலை தேடிச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் அல்ல..

பின் எதற்காக அம்மா?

இரு சொல்கிறேன் கவிதா. நான் சொன்னேனே பெரிய மனிதர் முருகதாசர் □ அவருக்கு... இப்போது ரொம்பவும் வயதாகி விட்டது. அவருக்கு உற்றார் உறவினர் என யாரும் அவ்வளவு இல்லை. ஒரே ஒரு அடங்காப் பிடாரி மகன் மட்டும்தான்...

அடங்காப்பிடாரி மகனா....?

ஆமாம்... அவன் சொன்ன பேச்சைக் கொஞ்சமும் கேளாதவன். அவர் கிழித்த கோட்டை தாண்டி எல்லா கெட்ட பழக்கங்களிலும் தன்னை ஆழ்த்திக் கொண்டவன். கொஞ்சமும் பொறுப்பு என்பதே அவனுக்குக் கிடையாது இதனாலே முருகதாசர் ரொம்ப மனமுடைந்து விட்டார். தனது பிஸினஸையும் சரி, சொத்தையும் சரி, இவன் ஒருவனே பாழாக்கி சீரழித்து விடுவான் என்கிற பயம் அவரைக் குடைய ஆரம்பித்துவிட்டது. அதனாலே

அப்படி ஒரு முடிவிற்கு அவர் வந்தார். என்னைச் சந்தித்து அவரது முடிவையும் சொன்னார்....

என்ன முடிவு அம்மா?

அவரது கம்பெனியையும், சொத்தையும் நிர்வகித்து காப்பாற்ற ஒரு பொறுப்பான ஆள் தேவை. அது வேறு யாருமல்ல, நீ தான் என்ற முடிவிற்குத்தான் அவர் வந்திருந்தார். அதை சந்தர்ப்பம் வரும்போது உன்னிடம் சொல்லி உன் சம்மதத்தைப் பெறவே என்னையும் பணித்திருந்தார். ஆனால்... நீயோ... நான் சொன்னதைத் தவறாக அர்த்தம் செய்து உடன் கிளம்பி விட்டாய்... இப்போது எல்லாம் புரிகிறதா?

ரங்கமணி அம்மாள் பெருமூச்சுடன் தனது பேச்சை நிறுத்தினாள். கவிதாவிற்கு மூச்சு வாங்கியது.

என்ன நானா? நானா அவரது பொறுப்புக்களை எல்லாம் பார்த்துக் கொள்வது? என் மீது அவ்வளவு நம்பிக்கையா?

விழிகள் விரிய ஆச்சரியம் படர அதிசயமாய்க் கேட்டவளை சாந்தமாய் பார்த்தாள் ரங்கமணி அம்மாள்.

அவரது கணிப்பு மட்டுமல்ல, எனது கணிப்பும் அதுதான் கவிதா. பெரியவர் எவ்வளவோ உதவிகள் நமக்குச் செய்திருக்கிறார். அவருக்கு தகுந்த கைமாறு செய்ய இதுதான் நல்ல சமயம் நல்ல சந்தர்ப்பம் என நானும் எண்ணுகிறேன். நீ என்ன நினைக்கிறாய் கவிதா?

கவிதாவால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. திடீரென அவள் தலையில் பெரும் பாரத்தை ஏற்றி அவளை ஓடச் சொல்வது போலவே உணர்ந்தாள். கண்களை மூடி அமைதியாய் சிந்தித்துப் பார்க்கவும் ஆரம்பித்தாள்.



## 10



கவிதாவால் நம்ப முடியவில்லை. அடுத்து வந்த சில வாரங்களில் மின்னல் போல் பல காரியங்கள் நடைபெற்றன. ரங்கமணி அம்மாளுடன் அந்தப் பெரிய மனிதர் முருகதாசரைச் சந்தித்தபோது அவள் அசைந்துதான் போனாள்.



பெரும் பக்திமானாய் மனமுருகப் பேசும் அவரது குரலும், அமைதியான அந்த கம்பீரமும அவளுள் மரியாதையைக் கூட்டின. கோடிக்கணக்கான சொத்துக்கள் இருந்தும் எளிமையாய் அந்த வயதிலும் தளர்வில்லா சுறுசுறுப்புடன் இருந்த அவரைக் கண்டு பிரமிக்கத்தான் செய்தாள்.

முருகதாசர் கனிவுடன் பேசினார். தனது நிலையைப் பொறுமையாய் விளக்கினார். கவிதா வந்து பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டால்தான் சந்தோஷம் கொள்வதாகவும், அவளைப் போன்று அனாதை இல்லத்தில் பொறுப்பாய் வளர்ந்தவர்களால் தான் தனது நிர்வாகப் பொறுப்பை சரிவர கையாள முடியும் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

ஏனோ, நன்றிக் கடனோ எதுவோ கவிதாவால் அவரது பேச்சைத் தட்ட முடியவில்லை. ஓரிரு தினங்கள் சிந்திப்பதற்கு அவகாசம் கேட்டு திரும்பி வந்தாள். நன்கு சிந்தித்தாள். கடைசியில் ஒருமனதாய் முடிவெடுத்தாள். ராஜாவிடம் போய் சொன்னபோது, அதிர்ஷ்டம் உன்னைத் தேடி வந்திடிருக்கிறது. தாராளமாய் அணைத்துக் கொள்! என்றான் குறும்புச் சிரிப்புடன்.

கவிதா பதில் பேசாது அவனது கண்களையே ஊடுருவினாள். நிஜமாகவே அவனுக்கு நாம் இங்கிருந்து போவதில் வருத்தமில்லையா என அறிய முயன்றாள்.

அவள் நினைப்பை ராஜா ஊகித்தானோ என்னவோ, அதற்கேற்றாற்போல் ஒரு நல்ல திறமைசாலி இங்கிருந்து போவதை நினைத்தால் எனக்கு வருத்தமாய்த்தான் இருக்கிறது. ஆனால் என்ன செய்ய? உன் மீது எனக்கு நிறைய அக்கறை உண்டு. உன் முன்னேற்றத்திடிற்கு நான் தடையாய் இருந்துவிடக் கூடாது. தாராளமாய் போய் வா... கவிதா...

ராஜா மனமுவந்து விடை கொடுத்தான். கவிதா கரம் கூப்பி நன்றி சார்! என்றாள். உன் மீது எனக்கு அக்கறை உண்டு என்ற அவனது வார்த்தைகள் அவளை ரொம்பவும் நெகிழச் செய்தது.

ஆனாலும் ராஜாவின் நினைவு அவளை வாட்டியது. மறுபடியும் சிந்தித்தாள். தடுமாறினாள். நாம் எடுக்கும் முடிவு சரிதானா? ராஜாவை விட்டுப் போக வேண்டுமா? ராஜாவைப் பிரிந்து நம்மால் இருக்க முடியுமா? என்றெல்லாம் நினைத்து அலைக்கழிந்தாள். ராஜாவின் முகம் மீண்டும் மீண்டும் அவளுள் தோன்றி மனதைச் சிறகடிக்க வைத்தது. சிரமத்துடன் மனதைக் கட்டுப்படுத்திக் வைத்தது. சிரமத்துடன் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். வேறு வழியில்லை. இவ்வளவு வருடம் பரிவு காட்டி நம்மை

வளர்த்த அந்த பெரியவருக்கு நன்றிக் கடனாகவாவது இதைச் செய்தாக வேண்டும் என உறுதியும் எடுத்துக் கொண்டாள்.

மறுநாளே புதுப் பெண் போல் புதுப் பொலிவுடன் முருகதாசர் முன் போய் நின்றபோது பெரியவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ரொம்பவும் சந்தோஷமாயிருக்கிறது அம்மா, எங்கே நான் நினைத்தது எல்லாம் கைகூடாமல் போய்விடுமோ என்று பயந்தே போய் விட்டேன். இனி என் கவலை எல்லாம் பறந்து விட்டது வா. ஒரே வாரத்தில் உனக்க அலுவலகப் பொறுப்புகள் எல்லாம் கற்றுக் கொடுக்கிறேன்!

உற்சாகமாய் பெரியவர் எழுந்ததைப் பார்த்ததும் கவிதாவிற்கும் ஆச்சரியமாக இருந்தது. என்ன ஒரே வாரத்திலா? என வியந்தவளாய் அவரை விழிகள் விரியப் பார்த்தாள்.

ஆமாம் ஒரே வாரத்தில்தான்...! நீ நினைப்பது போல் கஷ்டமில்லை. ரொம்பவும் சுலுதான் அம்மா! அதிலும் நீ புத்திசாலிப் பெண். உடனே கற்றுக் கொள்வாய். எனக்கு நம்பிக்கை இருக்கிறது...

முருகதாசர் அவளை ரொம்பவும் உற்சாகப்படுத்தினார். தாமதியாமல் அன்றே அவளது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். பெரிய நாலு மாடிக் கட்டிடமாய் இருந்தது. எம்.எம்.டவர்ஸ். அதுதான் அவரது அலுவலகம். டவர்ஸின் கீழ்ப்புறம் முழுவதையும் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் என கடைகளுக்கு வாடகைக்கு விடப்பட்டிருக்க, மேல்புறத்தில் ஆபீஸ்.

எம்.எம். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற பளபளப்புடன் ஆபீஸின் முகப்பு போர்டு. முற்றிலும் குளிரூட்டப்பட்ட அலுவலக அறைகள், கம்ப்யூட்டர், பேக்ஸ் மிஷின்கள் என சகல நவீனத்துடன் படு பந்தாவாக இருந்த ஆபீஸைக் கண்டு கவிதாவே ஒரு கணம் அரண்டு விட்டாள்.

முருகதாசர் தனது பிரத்யே ரூமிற்கு அவளைப் கூட்டிப் போனார். ஆபீஸ் பணியாளர்களை எல்லாம் அவளுக்கு அறிமுகப்படுத்தினார். ஆபீஸின் செயல்பாடுகள், இருபது வருட அசுர வளர்ச்சி பற்றியெல்லாம் அவளுக்க விரிவாய் விளக்கினார்.

நமது முக்கியப் பணி கட்டுமானத் தொழில்தான் அம்மா. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பணியைத் திறம்பட செய்து கொடுப்பதுதான் நமது முக்கிய சிறப்பான அம்சம். அத்தகைய சிறப்பான திறமை படைத்த வல்லுநர்கள் நம்மிடம் வேலை செய்கிறார்கள். அவர்களை நல்லவிதமாக உபயோகித்து உற்சாகப்படுத்தி வேலை வாங்கியதாலே



என்னால் கம்பெனியை இவ்வளவு உயரத்திற்கு கொண்டுவர முடிந்தது. எம்.எம்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்றாலே பலரும் துணிந்து தங்களது காண்டிராக்டுகளை தரும் அளவுக்கு கட்டுமானச் சந்தையில் நமது பெயர் நிலைத்திருக்கிறது. ஆனால், இப்போது என்னால் தொழிலை உடல் நலம் காரணமாகச் சரிவரக் கவனிக்க முடியவில்லை. இனிமேல் நீதான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்ள வேண்டும்...

காது தொங்கட்டான் அதிர கவிதா பலமாய் தலையாட்டினாள். இது சாதாரண பொறுப்பு அல்லவே. அவர் நினைப்பதுபோல் கொஞ்ச நாளில் கற்றுக் கொஞ்ச நாளிலே முழு நிர்வாகத்தையும் சீர்படுத்தி விடலாம் என்ற கணக்கு பொய்யாகி விடுமோ என மலைத்தாள்.

அவள் நினைப்பதைப் புரிந்து கொண்டவர் போல், கவிதா இதில் உன்னுடைய பணியைப் பற்றிச் சொல்லி விடுகிறேன் என்றவர், அம்மா, இரண்டு வருடமாய் கம்பெனியின் கணக்குகள், வரவு செலவுகள், வரவேண்டிய பாக்கித் தொகைகளை உடனே வசூல் செய்ய தேவையான நடவடிக்கைள் எடுத்தாக வேண்டும். இதெல்லாம் நாம் உடனடியாக செய்ய வேண்டிய பணிகள். இப்படிச் செய்வதன் மூலம் தான் நம் கம்பெனியைப் பெரும் ஆபத்திலிருந்து காப்பாற்ற முடியும். புரிகிறதா அம்மா?

முருகதாசர் கேள்விக்கு கவிதா மறுபடி பலமாய் தலையாட்டினாள். அவளுக்கு இருக்கையைக் காட்டி உட்கார வைத்தார் முருகதாசர். ஒன்றும் அவசரமில்லை. இன்று ஓய்வெடுத்துக் கொண்டு நாளையில் இருந்து பணியை ஆரம்பித்தால் போதும் அம்மா... என்ற அவரின் வார்த்தைகளுக்க நன்றி கலந்த மறுப்பு தெரிவித்து விட்டு அன்றே வேலையை ஆரம்பித்து விட்டாள் கவிதா.

இடையில் ஆடிட்டர் ஒருவரிடம் உதவியாளராக கொஞ்சநாள் பணியாற்றிய அனுபவம் அவளுக்கு ரொம்பவும் கை கொடுத்தது. பாங்க் பேலன்ஸ், பில் கிளியரிங், கிரெடிட் செக்குகள், லேபர் டீலிங்ஸ், பெண்டிங் கேஸஸ் என வந்த முதல் நாளே அனைத்து பிரிவிலும் கவனம் செலுத்த ஆரம்பித்து விட்டாள்.

முருகதாசரும் சிறிது நேரம் துடிப்பாய் அவள் வேலை செய்வதை, பணியாளர்களைக் கூப்பிட்டுத் தனக்குத் தெரியாத விபரங்களை எல்லாம் தெரிந்து கொள்வதை ஆர்வமாய்க் கவனித்தவர் திருப்தி அடைந்தவராய் கிளம்ப ஆரம்பித்தார். கிளம்புவதற்கு முன், அம்மா மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்து விடு. டிரைவர் உன்னை அழைத்து வருவான் என தனது

புது பளபள எஸ்டீம் காரைக் காட்டியவாறு அகல கவிதாவிற்கு குழப்பமாய் போயிற்று.

பெரியவர் சொல்வதைப் பார்த்தால் தன்னை அவருடன் பங்களாவிலேயே தங்கி இருக்கச் சொல்வார் போல் தெரிகிறதே? மேலும் பெரியவர் தனது பொறுப்புகளை ஒப்படைத்து நான் முதலாளியாகவே பொறுப்பேற்றுக் கொண்டது போல் அல்லவா நினைத்துக் கொண்டார்.

அவரிடம் எப்படி தெரிவிப்பது? நாம் உதவுவதற்காக மட்டும்தான் பொறுப்புகளை ஏற்றிருக்கிறோம். தான் காட்டும் நன்றிக் கடனாய் அவருக்கு சேவை செய்ய மட்டும் தான் இங்கிருக்கிறோம் என்பதை எப்படி அவருக்கு உணர்த்துவது? தான் பழைய கவிதாதான். பணக்கார கவிதா அல்ல. தான் தங்கப்போவதும் பெரியவரின் பங்களா அல்ல. போளி மாமியுடன் அவர்களது வீட்டில்தான். இதையெல்லாம் உடனடியாக பெரியவரிடம் விளக்க வேண்டும்.

தனக்குத்தானே முடிவெடுத்துக் கொண்டு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்திருப்பாள் கவிதா. சட்டென வேகமாய் படீர் வேகத்துடன் திறக்கப்பட்டது அவளது அறைக் கதவு. திடுக்கிட்டுப் பார்த்த கவிதாவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன. கலைந்த தலையும் அடர்ந்த தாடியுமாய் தடித்த தேகத்துடன் ஒருவன் அனாயாசமாய் நுழைந்து அவளைக் கொஞ்சமும் சட்டை செய்யாது எதிர் சேரில் சட்டென கால் நீட்டி அலட்சியமாய் அமர்ந்து கொண்டு படபடவென அழைப்பு மணியை அழுத்தினான். பதட்டமாய் ஓடி வந்த பணியாளைப் பார்த்து, யார் இந்த பொட்டச்சி? என்றான் அகம்பாவக் குரலில் கர்ஜனை பொங்க.



# 11



கவிதாவால் ஒரு கணம் தன் கண் முன் நடப்பதை நம்பமுடியவில்லை. திடீரென தாடியும் தொப்பையுமாய் தடித்த ஒருவன் நுழைவதும் அலட்சியமாய் தன் எதிரே கால் நீட்டி அமர்வதும், அகம்பாவமாய் அழைப்பு மணியை அடித்து அந்த பணியாளிடம் யார்



இந்தப் பொட்டச்சி? என கேவலமாய்ப் பேசியதையும் அவளால் நம்பத்தான் முடியவில்லை.

ஆனால் உள்ளே பதறி வந்த பணியாள், சின்ன அய்யா, நீங்க வந்துட்டீங்களா? என்று திடுக்கிட்டு ஆச்சரியப்பட்டதும் அவளுக்கு சகலமும் புரிந்தது. கவிதாவுக்கு எல்லாம் விளங்கிற்று.

பெரியவருக்கு அடங்காப்பிடாரி என்ற அடைமொழிக்கேற்ப ஒரு மகன் இருப்பதாய் சொன்னார்களே... அது இவன்தானா? என வியந்தாள். சரியான பெயர்தான். பார்த்தாலே இவனது திமிர்த்தனம் தெரிகிறதே... என அவள் அதிசயபட்டுக் கொண்டிருக்கும்போதே பணியாள் கவிதாவைப் பற்றி பெரியவர் கம்பெனிப் பொறுப்புகளை கவனிக்க அவளை நியமனம் செய்தது பற்றியெல்லாம் கூறி முடித்திருக்க அந்த திமிர்க்காரன் ஆவேசம் கொஞ்சமும் குறையாமல் கவிதாவை நோக்கித் திரும்பினான்.

முதலில் சீட்டை விட்டு எழுந்திரு. எவ்வளவு தைரியம் உனக்கு என்றான், மறுபடி கர்ஜனைக் குரலோடு.

கவிதா கொஞ்சமும் கலவரப்படவில்லை. கொண்டிருந்த பதட்டம் முழுவதையும் விலக்கியவளாய் அமைதியுடன் அவனைப் பார்த்தாள். அவள் அப்படி சிறிதும் பதட்டமடையாமல் பார்த்தது அவனது ஆத்திரத்தை பயங்கரமாய்க் கிளப்பியிருக்க வேண்டும்.

கோபம் பொங்கி வெடித்தவன் போல் படீரென எழுந்தவன் ஆவேசமாக, அவள் கைகளை டக்கென இழுத்து விட்டான். முதலில் எழுடி.. சீட்டை விட்டு! என்று அப்படியே அவளைத் தள்ளவும் போனான்.

கவிதா கை மட்டும் என்ன பூப்பறிக்கவா செய்யும்? அவளுக்கு வந்த ஆத்திரமே தனி! அன்னியன் ஒருவன் தன்னைத் தொட்டு விட்டது... தன்னை அடிமைத்தனமாய் டி போட்டு பேசியது... பலவந்தமாய் சீட்டை விட்டுத் தள்ள முயற்சித்தது எல்லாம் அவளது கோபத் தீயை எரிமலையாக்கி இருக்க அவளும் வந்த ஆவேசதை கொஞ்சமும் குறைக்காமல் தன்னைத் தீண்டியவனின் கையை ஓங்கி உதறியவள் அதே வேகத்தில் அவனது செவிட்டில் படபடவென மாறி மாறி அடிக்கவும் செய்தாள்.

இரண்டு மூன்று அடிகள் விழுந்திருக்கும். எதிர்பாராத அடியால் நிலை குலைந்து போனான் அவன். வாழ்க்கையில் முதல் முறையாக அடி வாங்கியிருப்பது... அதுவும் ஒரு பெண்ணிடம் அடிபட்டிருப்பது... இது இங்கு

நடப்பது கனவா? நிஜமா? நம்ப முடியாதவனாய் ஒரு கணம் மிரள மிரள அவளைப் பார்த்தான்.

சிவந்த முகமும் துடித்த உதடுகளுமாய் நின்றவளைப் பார்த்ததும் அவனுக்கு இவள் நாம் நினைப்பது போல் சாதாரணப் பெண்ணில்லை.. இவளிடம் விளையாடுவது ஆபத்து என்ற உணர்வு எழுந்ததோ, இல்லை கவிதா அடித்த அடியில் அவனது அகம்பாவ மூளை பழுதுபட்டுப் போனதோ என்னவோ டக்கென ஒரு எட்டு பின் வாங்கினான். அடுத்த என்ன செய்ய? என்று குழம்பியவனுக்கு நடப்பதையெல்லாம் கவினத்துக் கொண்டிருந்த பணியாள் மேலும் பதறியவாறு, ஐயா எதுவானாலும் பெரிய அய்யாவிடம் பேசிக் கொள்ளுங்கள். இங்கிருந்து சென்று விடுங்கள் ஐயா! என்று சொன்னது ரொம்பவும் வாகாய்ப் போயிற்று.

இரு உன்னைக் கவனித்துக் கொள்கிறேன். என்னைக் கை நீட்டி அடித்துவிட்டு, உன்னை... உன்னை... அடிபட்ட புலியாய் குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டாதவனாய் கண்ணை உருட்டி கர்ஜித்தவன் பின்வாங்கிய வேகத்தில் படீரென கதவைத் திறந்து வந்தபடியே மறைந்தும் போனான்.

துஷ்டக் காற்று அகன்று போனது போல் இழுத்துப் பெருமூச்சு விட்டவளை அதிசயமாய்ப் பார்த்த பணியாள், அம்மா அவர்தான் அசோக்குமார். பெரியவரின் ஒரே பிள்ளை. எதற்கும் அடங்க மாட்டார். சின்ன முதலாளி என்றால் ஆபீஸில் உள்ள எல்லோருக்கும் நடுக்கம்தான்... என்று கூறியபோதுதான் கவிதாவும் சீறிக் கொண்டு எழுந்த வேங்கையாய் இருந்தவள் சட்டென தனது இயல்பு நிலைக்குத் திரும்பியிருந்தாள்.

அசோக்குமார்.. சின்ன முதலாளி... பெரியவரின் மகன்.... என் உண்மை உறுதியாய் அவளுள் உரைத்த போதுதான் நிலைமையின் தீவிரமும் அவளுக்கு உறைத்தது. ஐயோ... பெரியவரின் மகனை அடித்து விட்டோம்? என்ன நடக்கப் போகிறதோ? பெரியவர் என்ன நினைப்பார்? என்றெல்லாம் பயம் அழுத்திற்று.

ஆனாலும் கொஞ்சம் கூட இங்கிதம் மரியாதை இல்லாமல் நடந்து கொள்ளும் இதுபோன்ற காட்டுமிராண்டிகளுக்க இதுபோன்ற அதிரடி அடி நடவடிக்கைகள்தான் சரி. கொஞ்சமாவது புத்தி வரும் என எண்ணினாள். பெரியவரிடம் நடந்தவைகளை விரிவாய் எடுத்துச் சொன்னால் அவர் புரிந்து கொள்வார்தானே? ஒரு பெண்ணிடம் தன் வீரத்தைக் காட்டி அவளை அவமானப்படுத்த முயல்வது எவ்வளவு பெரிய இழி செயல்? அதை எப்படி பெரியவர் பொறுத்துக் கொள்வார்?



கவிதா இப்படி எண்ணுகையில் விஷயம் ஆபீஸ் முழுக்கத் தெரிந்து விட்டிருந்தது. அலுவலகப் பணியாளர்கள் உலக அதிசயமாய் கண்ணாடி வழியாய் அவளை கவனித்து விட்டு வியந்து செல்வதை சிரிப்பு தோன்ற கவிதா பார்த்தாள்.

பணியாளர்களும் ஆள் பார்க்கச் சாதாரணமாய் இருந்தாலும், சரியான ஆள்தான். பெரிய அய்யா சும்மாவா இவ்வளவு பொறுப்புகளையும் தூக்கி ஒப்படைத்திடிருக்கிறார்? சரியான பெண்ணைத் தேர்ந்தெடுத்துதான் பொறுப்புகள் அத்தனையும் கொடுத்திருக்கிறார்,... என்று கிசுகிசுத்து அவளுக்கு சர்டிபிகேட் வேறு கொடுத்தனர்.

கவிதா அன்று மாலை ஆறு மணிக்கு வேலை முடிந்து பெரியவரைச் சந்திக்க கிளம்பினாள். பெரியவரைச் சந்தித்த போது அவளுக்கு ஆச்சரியமே படர்ந்தது. பெரியவருக்கு சுத்தமாய் விஷயம் தெரியவில்லை. அசோக்கை அவள் அடித்து விட்ட கதை அவரது காதுகளை எட்டவில்லை என்ன ஆச்சரியம்? அந்த அசோக்குமார் அடிபட்ட புலியாய், இரு உன்னை கவனித்துக் கொள்கிறேன் என்று கர்ஜித்து விட்டுச் சென்றவன் சொல்லவில்லையா?

ஆனாலும் கவிதாவிற்கு பெரியவரிடம் அந்த விஷயத்தைச் சொல்ல சங்கடமாய்த்தான் இருந்தது. பெற்ற தகப்பனிடம் போய் உன் பிள்ளையை நான் அடித்து விட்டேன் என்று எப்படிச் சொல்ல முடியும்?

அதுவும் பெரியவர் யார்? அவளைப் படிக்க வைத்து ஆளாக்கி வாழ்வளித்தவராயிற்றே! அவருடைய பிள்ளையைக் கொஞ்சமும் நன்றியுணர்வு இல்லாமல் அடித்துவ விட்டு... கவிதா தனக்கு எழுந்த குற்ற உணர்ச்சிகளை அடக்க சிரமப்பட்டாள். வார்த்தைகள் கோர்வையாய் வெளிவராமல் தவித்தாள்.

ஒரு வழியாய் தயங்கி விழுங்கி விஷயம் முழுவதையும் சொல்லி முடித்துவிட்டு பெரியவரின் முகத்தைப் பார்த்தவளுக்கு வியப்பே மிஞ்சியது.

பெரியவரின் முகத்தில் இருந்த புன்னகை சிறிதும் மாறவில்லை. கடுஞ்சினத்தை எதிர்பார்த்தவளுக்கு கருணை சிறிதும் குறையாமல் அமைதியாய் அவர் இருந்தது அதிசயமாகவே பட்டது.

தன்னை என்ன சொல்லப் போகிறார் என்று பயந்தபடி கண்கள் படபடக்க பார்த்த கவிதாவை பெரியவர் மேலும் கனிவாய்ப் பார்த்தார்.

என்னை மன்னித்து விடம்மா... என்னுடைய தப்புதான். அவனைப் பற்றி முன்பே உன்னிடம் சொல்லி வைத்திருக்க வேண்டும். சொல்லாமல் விட்டது என்னுடைய தவறுதான். என்னை மன்னித்துவிடம்மா...!

பெரியவர் இப்படிச் சொன்னதும் கவிதா ஒரு கணம் ஆடிப் போனாள். பதறியவளாய் பதட்டம் குறையாதவளாய், ஐயோ, நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும். நான்தான் அவசரப்பட்டு கை நீட்டி விட்டேன். என்ன இருந்தாலும் ஒரு ஆண் பிள்ளையை நான் அப்படி அடித்திருக்கக் கூடாது... குற்ற உணர்ச்சி பொங்க கூறியவளை மறுப்பாய் தலையசைத்தவாறு பெரியவர் பார்த்தார்.

இல்லையம்மா, நீ செய்தது சரியானதுதான். அப்படி அடித்து உரைத்தால்தான் அவனுக்கு கொஞ்சமாவது புத்திவரும். நீ எந்தவித குற்ற உணர்வும் கொள்ளத் தேவையில்லை...

பெரியவர் திரும்பத் திரும்பச் சொல்லி சமாதானப் படுத்தியது அவளுக்கு கொஞ்சம் ஆறுதலாகவும் இருந்தது. அடித்தது சரியா? தவறா? என எவ்வளவு நேரம் ஆர்ப்பரித்து தவிக்க வைத்த மனதிற்கு இதமான வருடலாகவும் இருந்தது பெரியவரின் பேச்சு.

பெரியவர் பேச்சை மாற்றினார். அலுவலக விபரங்களை சமாச்சாரங்களை விசாரிக்க ஆரம்பித்தார். கவிதாவும் ஞாபகமாய் தான் கொண்டு சென்ற ஆபீஸ் குறிப்புகளைக் காட்டினாள். தனக்கேற்பட்ட சந்தேகங்களை எடுத்துரைத்து விளக்கமும் பெற்றுக்கொண்டாள்.

இறுதியில் பெரியவர் பங்களாவில் தங்கும்படி எவ்வளவோ வற்புறுத்தியும் அன்போடு மறுத்து அவரிடம் விடைபெற்று வீட்டிற்குக் கிளம்பினாள்.

வீட்டை நெருங்கும்போதுதான் போனி மாமி கவலையோடு வாசலில் அமர்ந்து தெருவையே நோக்கிக் கொண்டிருப்பது அவளைத் துணுக்குறச் செய்தது. மாமிக்கு கவிதாவைக் கண்டதும்தான் உயிரே வந்தது போல் உற்சாகம் பொங்க எழுந்து கொண்டாள்.

இன்னும் வரவில்லையே... நீ பெரியவருடனே தங்கி விட்டாயோ? தகவல் இல்லையே? என்ன செய்ய... ஏது? என்று பயந்து கொண்டிருந்தேன் குழந்தே அப்பாவியாய் படபடத்த மாமியை அப்படியே அன்பொழுகக் கட்டிக் கொண்டாள் கவிதா.



இல்லை அம்மா... உங்களை விட்டு நான் என்றும் பிரியமாட்டேன். உங்களுடன்தான் எப்போதும் இருப்பேன்... சிறு குழந்தை போல் கட்டிக்கொண்டு மாமியின் தோளோடு முகம் சாய்த்துக் கொண்டாள் கவிதா.

அன்றைய பொழுது மாமியிடம் அலுவலகத்தைப் பற்றி பெரியவரைப் பற்றி கதை கதையாய் சொல்வதிலே நேரம் போயிற்று. இரவு உணவு முடித்து விட்டு படுத்தவளுக்குத் தூங்க முடியவில்லை. சட்டென ராஜாவின் நினைப்பு வந்துவிட்டது. ராஜாவை நினைத்ததுமே இனம்புரியா மகிழ்ச்சியொன்று பீறிட்டுக் கிளம்புவதை அவளால் உணர முடிந்தது.

உடனடியாக அவன் வீட்டுக்குப் போய் கதவைத்தட்டி அவனைப் பார்க்க வேண்டும். இன்று அவள் சந்தித்தவைகள் நடந்த விஷயங்கள் பற்றியெல்லாம் விலாவாரியாய் அவனிடம் சொல்ல வேண்டும் போல் ஆவல் துடித்தது அவளுக்கு. அந்தக் கனிவுப் பார்வை குறும்புச் சிரிப்பு பொங்க அவன் அதை எப்படியெல்லாம் ரசிப்பான் என்றெல்லாம் கூட அவள் கற்பனை பண்ணிப் பார்த்தாள்.

ரொம்ப நேரம் தூங்காமல் அவ்வாறே சிந்தித்துக் கொண்டிருந்தவள் தற்செயலாய் சின்ன டைம்பீஸில் மணியைப் பார்த்தபோது அதிர்ந்துதான் போனாள். இரண்டு மணி. சரிதான் இன்னமும் தூங்காமல் சிந்தித்துக் கொண்டிருந்தால் கிறுக்குதான் பிடிக்கப் போகிறது நொந்து கொண்டவாறு கள்ளச் சிரிப்பு பொங்க தூங்க ஆரம்பித்தாள் கவிதா.



## 12



மறுநாள் எம்.எம். கன்ஸ்ட்ரக்ஷனில் கவிதாவிற்கு நிறைய ஆச்சரியங்கள் காத்திருந்தன. அன்று வழக்கம் போல் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தவள் பணியாள் வந்து அம்மா உங்களைப் பார்க்க ராஜா என்பவர் வந்திருக்கிறார்! என்றதும் மின்சாரம் பாய்ந்தது போல் நிமிர்ந்து விட்டாள்.

என்ன ராஜாவா? கண்கள் படபடத்து அகல விரித்தவள் ஒருநொடி தாமதிக்காமல் உடனே சீட்டை விட்டு எழுந்து முன்புறம் ஓடினாள். அறைக்கதவைத் திறந்து அலுவலகத்தைச் சுற்றும் முற்றும் திரும்பி பராக்கு

பார்த்துக் கொண்டிருந்தவனை, உள்ளே வாங்க ராஜா சார் என உற்சாகமாய் வரவேற்றாள்.

தனது பெயரைக் கேட்டதும் ஓடோடி வந்து விட்டாள் என்பதை உணர்ந்தபோது ராஜாவின் முகத்திலும் பரவசம் ஓடியது. அதை வெளிக்காட்டாதவனாய் இன்னும் நீ பழைய முதலாளியை ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாயே... அதற்கு ரொம்பவும் நன்றி என்று சொல்லி குறும்புச் சிரிப்பு சிரித்தவனை பதிலுக்கு சிரித்து அமரச் சொன்னாள்.

என்ன விஷயம் சார்? என்றாள் ஆவலாய்.

ஏன் நான் வரக் கூடாதா? விஷயம் இருந்தால்தான் வரவேண்டுமா?

அவன் அப்படி மடக்கியதும் திடுக்கென அதிரடியாய் கவிதாவிற்கு சங்கடமாய்ப் போயிற்று. அது இல்லை சார்.. சொல்லிவிட்டால் நானே உங்களை வந்து பார்த்திருப்பேன். எதற்கு உங்களுக்கு வீண் சிரமம்....

ராஜா அவள் தயக்கத்தை மேலும் விலக்கியவனாய் கடகடவென சிரித்தான்.

சிரமமாவது.. மண்ணாங்கட்டியாவது.. கண்மணியைப் பார்க்க வேண்டுமென்று தோன்றிவிட்டால் வேறு ஏது சிந்தனை... அதான் ஓடோடி வந்து விட்டேன் என்று, மேலும் அவளை நெகிழ வைத்தான். சரி அலுவலகம் எப்படி இருக்கிறது.? வேலை பிடித்திருக்கிறதா? எல்லாவற்றையும் கற்றுக்கொண்டாயா? என்றான் சீரியசான குரலில்.

கவிதாவும் இமைக்காமல் அவன் தலையை அசைத்து அசைத்துப் பேசும் அழகை மெய்மறந்து பார்த்துக்கொண்டிருந்தவள் உணர்வுக்கு வந்தவளாய் ஆமாம் சார்! அது ஒன்றும் பிரமாதமில்லை. எல்லாவற்றுக்கும் தனித்தனி பணியாளர்கள் இருக்கிறார்கள். கணக்கு வழக்குகளும் லெட்ஜரில் கிடையாது. கம்ப்யூட்டர் ப்ளாப்பியில்தான். பட்டனைத் தட்டி விட்டால் அத்தனை வருட கணக்குகளும் கம்ப்யூட்டரில் ஓட ஆரம்பித்து விடும். சொல்லப் போனால் ரொம்பவும் சுலுவான வேலைதான்.

மூச்சு வாங்க பேசி முடித்தவளை வைத்த கண் வாங்காமல் ராஜா பார்த்தான். கவிதா அப்போதுதான் ஞாபகம் வந்தவளாய், பதறிப் போய், நீங்க முதல் முறையாய் அலுவலகத்திற்கு வந்திருக்கிறீர்கள்... உங்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் வெறுமனே பேச வைத்துக்கொண்டே இருக்கிறேனே? எனத் தன்னைத்தானே நொந்து கொண்டவளாய்,



அவசரமாய் பணியாளை அழைத்து ராஜா தடுத்தும் குளிர்பானம் கொண்டுவரச் சொன்னாள்.

குடித்து முடித்ததும் இருவரும் கொஞ்ச நேரம் ஆபீஸ் விஷயங்கள் பேசினார்கள். கவிதா தனக்க அலுவலக சந்தேகங்கள் சிலவற்றைக் கேட்டு விளக்கம் பெற்றுக்கொண்டாள்.

விடைபெற்றுக் கிளம்புவது போல் ராஜா எழுந்து கொண்டான். என்ன அதற்குள் கிளம்பி விட்டீர்கள் சார்? என்றாள் கவிதாவும் அவனைப் பிரிகின்ற கவலையில்.

ராஜா என்ன நினைத்தானோ தன்னையே இமைக்காமல் பார்த்து நெருங்கி வந்தவளின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான்.

என்ன செய்ய? கடமை என்று ஒன்று இருக்கிறதே கண்மணி? அது மட்டும் இல்லையென்றால் அப்படியே உட்கார்ந்து உன்னைப் பார்த்துக் கொண்டே பொழுதைக் கழித்து விடுவேனே?

சொல்லியவாறு உரிமையோடு அவளது தோள்களைப் பற்றி மெல்ல அவள் நாணிய முகத்தை தன் மகம் நோக்கி நிமிர்த்தினான். அவன் கரங்களில் அப்படியே தன் வசம் இழந்தவளாய் கவிதா துவண்டு கொண்டிருந்தாள். குங்குமமாய் சிவந்த அவளது முகத்தில் யோசனைக் கீற்றுகள் ஓடின.

நிஜமாகவே என்னைப் பார்க்கத்தான் வந்தீர்களா சார்? என்றாள் நம்ப முடியாதவளாய்.

ராஜா சிரித்தவன், உன் அலுவலகம் உன் வேலை பற்றியெல்லாம் தெரிந்து கொள்ளும் ஆசையில்தான் உன்னைப் பார்க்க வந்தேன். ஆனால்....?

ஆனால் என்ன ஸார்...? என்று பதறியவளை அப்படியே தன் நெஞ்சில் சாய்த்து இறுக்கிக்கொண்டவன், இப்படி இறுக அணைத்துக் கொண்டு இருக்கலாம் என்றால் தாமதித்திருக்க மாட்டேட. நேற்றே வந்திருப்பேன்... என்று சொன்னதும் கவிதா தன்னை மறந்து சிரித்து விட்டாள். அந்த முத்துப்பல் சிரிப்பை ராஜா வெகுவாய் ரசித்தான். அவள் உதடுகளை நோக்கி குனிந்து, இன்றும் காலம் தாழ்த்தாதே கண்மணி. என்னால் காத்திருக்க முடியவில்லை! என்றான் உணர்ச்சியான குரலில்.

எதற்கு? என்றாள் கவிதா புரியாதவள் போல்.

இந்தப் பாசாங்கு எல்லாம் என்னிடம் வேண்டாம். நான் எல்லாவற்றையும் எப்போதோ கண்டுபிடித்துவிட்டேன்..

கண்டுபிடித்து விட்டீர்களா? எப்படி என்ன கண்டு பிடித்தீர்கள்? விடாமல் கவிதா கேட்கவும் அப்படியே அவளை ஊடுருவுவது போல் பார்த்தான் ராஜா. அப்படி அவன் பார்க்க பார்க்க விடாது அவளும் கண்களை விரித்துப் படபடக்க அவனைப் பார்த்தாள்.

இதே கண்கள்தான்... இதே படபடப்புதான். இவைதான் அந்த ரகசியத்தைச் சொல்லிற்று..

ரகசியமா?

அமாம்.. நான் உன்னை விரும்புகிறேன். உன்னை எனக்கு பிடித்திருக்கிறது.. என்கிற பொல்லாத ரகசியத்தை.

நிஜமாகவா? என்று புருவங்கள் உயர வியந்தவளை, அதில் இன்னும் உனக்குச் சந்தேகமா? என்றபடி ராஜா இறுக்கியவன் மெல்ல மென்மையாக. அவள் சிவந்த கன்னங்களில் தனது உதடுகளைப் பதிக்கவும் சிலிர்த்துத்தான் போனாள். அப்படியே அவனது நெஞ்சில் கண்கள் சொருக மயக்கத்துடன் சாய்ந்தும் கொண்டாள்.

காதல் அணைப்பில் கட்டுண்டு இருந்தால் சகலமும் மறந்துதானே போகும். ஆனால் நேரம், சூழ்நிலை என்று ஒன்று இருக்கிறதே? அதை முதலில் ராஜாதான் உணர்ந்து சுதாரித்தவனாய் இறுக அவளைப் பற்றியிருந்த தனது பிடிகளைத் தளர்த்தினான்.

இது அலுவலகம் கண்மணி. யாரும் வந்துவிடக்கூடும் மெல்ல பிடிகளைத் தளர்த்தி அவள் காதில் கிசுகிசுத்த போதுதான் கவிதாவுக்கு உணர்வே வந்தது. ஒரு கணம் காதல் மயக்கத்தில் கிறங்கித் துவண்டு போய் இருக்கும் தன் நிலை கண்டு சிவந்துதான் போனாள். எப்படி நினைவிழந்து போனேன் என தன்னைத்தானே கடிந்து கொண்டவளாய் விலகியவள் அவசரமாய் தன் உடைகளை சரி செய்துக் கொண்டாள்.

அவர்களை மேலும் சிந்திக்கவிடாது பணியாள் கதவு மணியை அழுத்தியபோது, இருவரும் இயல்பு நிலைக்கு முற்றிலும் மாறியிருந்தனர். கவிதாவிற்கு ஏனோ ராஜாவின் முகத்தை நிமிர்ந்து கூடப் பார்க்க முடியவில்லை. மணப் பெண் போல் அவள் நாணிக் குனிந்திருப்பதை ராஜா ஓரக்கண்ணால் வெகுவாய் ரசித்தவன் அவளை மேலும் சங்கடப்படுத்த விரும்பாமல் அவசரமாக வருகிறேன், பிறகு சந்திப்போம், கவிதா என்று விடைபெற்றும் கிளம்பினான்.



ராஜா விடைபெற்றுச் சென்ற சிறிது நேரத்தில் கவிதா சகஜ நிலைக்கு திரும்பி வேலைகளில் ஆழ்ந்திருந்தாள். மணி பதினொன்று அடித்து ஓய்ந்திருக்கும். ரூமின் ஸ்ப்ரிங் கதவைத் திறந்தவாறு பய பக்தியோடு பவ்யமாய் நுழைந்தவனைக் கண்டு திடுக்கிட்டாள். எங்கோ இந்த முகத்தைப் பார்த்திருக்கிறோமே? என்று அவள் சிந்தித்துக் கொண்டிருக்கும் போதே, நான் உட்காரலாமா? என்று அனுமதி கேட்டு எதிர் இருக்கையில் அமைதியாக உட்கார்ந்து கொண்டான்.

அடையாளம் தெரியாமல் திணறும் கவிதாவின் திகைப்புப் பார்வையை வெகுவாக ரசித்தவன், என்னைத் தெரியவில்லையா? நான்தான் பெரியவரின் பிள்ளை அசோக்குமார் என்றான் அமைதியாக.

## 13

என்ன....அசோக் குமாரா? கவிதாவால் ஒரு கணம் நம்பவே முடியவில்லை. படபடத்துப் போன கண்களுடன் அவனை ஆழமாய்ப் பார்த்தாள். சடைபோல் இருபுறமும் தொங்கிக் கொண்டிருந்த முடியைக் கச்சிதமாய் கிராப் வைத்து வெட்டி, அடர்ந்த தாடி சுத்தமாய் எடுத்துவிட்டு.. படிய வாரிய தலையுடன் புது உருவமாய் புதுப் பையன் போல்... அது அசோக்குமாரேதான்..!

என்ன பார்க்கிறீர்கள்? நேற்று உங்களிடம் அகம்பாவமாய் பேசி ஆணமாய் நடந்து கொண்ட அதே அசோக்குமார்தான்... என்று அவளது சந்தேகத்தைத் தெளிவாய்ப் போக்கியவன், அதற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்டுச் செல்லத்தான் வந்திருக்கிறேன்... என்றான் பவ்யம் பொங்க.

கவிதாவிற்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. நேற்று உடம்பு முழுக்க திமிராய் ஆடிய அந்த அசோக்குமார் எங்கே? இன்று இப்படி பவ்யமாய் அமைதி தவழும் இந்த அசோக்குமார் எங்கே? என்ன இது ஆச்சரியம்? எப்படி... எப்படி.... இது நடந்தது?

அவள் திகைப்புப் புரிந்தவன் போல், எல்லாவற்றுக்கும் காரணம் நீங்கள்தான். உங்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்... என்றான் அசோக்குமார் விடாப்பிடியாக.

நானா...? என்ன சொல்கிறீர்கள்? கவிதா புரியாமல் ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

அசோக்குமார் கொஞ்சம் நாணியவன், நேற்று அப்படி நீங்கள்... நீங்கள்... அடித்த அடிதான் என்னை பவமாய் சிந்திக்க வைத்தது. ஒன்றும் தோன்றாதவனாய் நேற்று முழுவதும் சிந்தித்தேன். எல்லாம் புரிய ஆரம்பித்தது. எவ்வளவு கேவலமாய் சமூகத்தில் நடமாடிக்கொண்டிருக்கிறேன் என்பது நன்றாய் உறைத்தது. தெளிவடைந்தவனாய் எனது கெட்ட பழக்கங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டேன்.. இன்று புது மனிதனாய் புது அசோக்குமாராய் உங்கள் முன் நிற்கிறேன்.... பிரசங்கமாய் சொல்லிவிட்டு கவிதாவின் முகத்தையே உற்றுப் பார்த்தான் அசோக்குமார்.

கவிதாவிற்கு ஆச்சரியமும் நம்ப முடியாத திகைப்பும் விலகியபாடில்லை. ஒரே நாளில்... ஒரே அடியில் முற்றிலும் திருந்தி விட்டானா? இதுவரை பெரியவரின் எவ்வளவோ புத்திமதிகளுக்கு செவிசாய்க்காதவன்... எப்படி நம் அடிக்குக் கட்டுப்பட்டான்? எதனால் இந்த மாற்றம் நிகழ்ந்தது?

கேள்வி மேல் கேள்வியெழுந்து கவிதாவை வியக்க வைக்க, அசோக்குமாரோ அவளை மேலும் வியப்பா;கி உச்சிக்கு கொண்டு சென்றான். பவ்யமாய் எழுந்தவன் இருகரத்தையும் கூப்பி கெஞ்சலாய்ப் பார்த்து முதலில் நேற்று நடந்து கொண்டதற்கு என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும். அப்போதுதான் என் மனதுக்கு ஆறுதல் ஏற்படும்... எனக் கூறியது கவிதாவுக்கு மேலும் சங்கடமாய்ப் போயிற்று.

அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்கு உங்கள் மீது எந்தக் கோபமும் இல்லை... என்று அவசரமாய் கவிதா மறுத்து அவனை உட்காரச் சொன்னாள்.

அசோக்குமார் திருப்தியடைந்தவனாய் உட்கார்ந்தவன், நான் ரொம்பவும் மாறி விட்டேன். இனி பொறுப்பாய் நடந்து கொள்வேன். இந்த விஷயத்தை அப்பாவிடம் உடனே சொல்லவேண்டும். அவர் ரொம்பவும் சந்தோஷப்படுவார். நான் வரட்டுமா? என்று விடைபெற்றுக் கிளம்பும் போது கவிதாவும் பலமாய் தலையாட்டி அவனுக்கு விடைகொடுத்தாள்.

அசோக்குமார் சென்றதும் கவிதாவால் நடந்தவைகளைக் கொஞ்சமும் நம்ப முடியவில்லை. அழைத்து வந்த பணியாளும், அம்மா நம் சின்ன முதலாளி இப்படி அடியோடு மாறிவிட்டாரே! என்று தன் பங்குக்கு வியப்பு தெரிவித்தான்.



கவிதாவிற்கு ஒரு புறம் சிந்தனையில் தன் பிரச்சினைகள் எல்லாம் இளகுவது போல் தோன்றியது. அசோக்குமார் திருந்தி விட்டான். இனி இப்படியே நல்ல பிள்ளையாய் அவர் அலுவலகம் வர ஆரம்பித்து விட்டால்... அலுவலகப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு விட்டால்.... அதுவே போதும். பெரியவருக்கு பெரும் நிம்மதி ஏற்படும். தனக்கும் எவ்வித கவலையும் இருக்காது. கம்பெனிப் பொறுப்புகளை எல்லாம் திருந்திய அசோக்குமாரிடம் ஒப்படைத்து விட்டு நிம்மதியாய் கடமைகளை முடித்து விட்ட திருப்தியுடன் ராஜாவின் நெஞ்சில் போய் சாய்ந்து கொள்ளலாம்..

கவிதா மனக் கணக்குப் போட்டு மகிழ்ந்து கொண்டிருந்தவள் அன்று மாலை பெரியவரைச் சந்தித்தபோதுதான் விஷயம் வேறு திசையில் போய்க் கொண்டிருப்பதை அவளாலே உணர முடிந்தது.

பெரியவர் ரொம்பவும் சந்தோஷத்திலிருந்தார். அசோக்குமாரின் திடீர் மாற்றம் அவரை மிகவும் மகிழ்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. எல்லாம் நீ வந்த நேரம்தான் கவிதா. இருபது வருடங்களால் என் சொல்லைக் கேளாதவன் ஒரே நாளில் மாறி விட்டான். என் காலடியில் பணிவாய் உட்காரந்து, சொல்லுங்கள் அப்பா. இனி உங்கள் சொல்படி நடக்கிறேன் என்கிறான் பவ்யமாய். என்னால் நம்பவே முடியவில்லை. அப்படி என்ன அவனுக்குச் சொக்குப்பொடிட போட்டாய்? ஒரே நாளில் இப்படி மாறிவிட்டான். மனம் திருந்தி நல்லவனாகி விட்டான்... பெரியவர் வியப்பு அடங்காமல் சொல்லி கவிதாவைப் பார்க்க, கவிதாவும் அதையே ஆமோதித்தவளாய் தனது ஆச்சரியத்தையும் வெளிப்படுத்தினாள்.

பெரியவர் கொஞ்ச நேரம் அமைதியாய் சிந்தித்தவர், எனக்கு ஒன்று புரிகிறது கவிதா? என்றார்.

அசோக்குமாரை நீ ரொம்பவும் பாதித்திருக்கிறாய். உன் செய்கை அவனை ரொம்பவும் மாற்றி விட்டது. நீ எப்போதும் அவனுக்கு பக்க பலமாய் இருந்து திருத்தவேண்டும்.

பெரியவர் சொல்லிக் கொண்டே போக, அவர் எந்த யுகத்திடில் எதை மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியாதவளாய் கவிதா திகைப்பாய்க் கேட்டுக் கொண்டிருந்தவள், இறுதியில் பெரியவரிடம் விடைபெற்றுக் கிளம்பினாள்.

வீட்டிற்கு வந்ததும் அவளுக்கு சகலமும் மறந்து போயிற்று. திரும்பவும் ராஜா ஞாபகம் வந்து தொற்றிக்கொண்டது.

காலையில் ராஜாவைச் சந்தித்தது. பேசியது அவனது நெஞ்சத்தில் இறுக்கமான அணைப்பில் மெய்மறந்து கிடந்தது எல்லாம் நினைவிலிருந்து உயிர்ப் பெற்று திரும்பவும் அவளுள் ஓடியது. பரவசத்துடன் சிலிர்ப்படைந்தவளாய் அதே நினைவில் கட்டிய சேலையைக் கூட மாற்றாமல் அப்படியே விட்டுத் திண்ணைப்படியில் உட்கார்ந்து விட்டாள். கனாக் காண ஆரம்பித்து விட்டாள்.

மாமிதான் அவளை நெடுநேரம் கவனித்து உலுக்கினாள். என்ன குழந்தே, அப்படியே உட்கார்ந்துட்டே? என்ன விஷயம்? என்றபோதுதான் நினைவுக்கு வந்தாள்.

ஒண்ணுமில்லை அம்மா...! என்றபடி அவசரமாய் எழுந்து கொண்டாள். தன்நிலையை எண்ணி பொங்கிய சிரிப்பை மருதாணி விரல்களால் வாய் பொத்தி தடுத்டதும் கொண்டாள். காதல் பேய் பிடித்துவிட்டது. இனி தலையை விரித்துப் போட்டுக் கொண்டு ராஜாவை நினைத்து ஆடாத குறைதான்! தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டு காரியங்களை கவனிக்க ஆரம்பித்தாள் கவிதா.



## 14



மறுநாள் கவிதா அலுவலகத்தில் நுழைந்தவள் தனக்கு முன்பே அசோக்குமார் வந்திருப்பது கண்டு ஆச்சரியம் கொண்டாள்.

அதைவிட அவளை ஆச்சரியப்படுத்தியது அவன் நிர்வாக அறையையோ, சேர்மனுக்குரிய தனித்த அறையிலோ உட்காராமல் ஊழியர்களோடு ஊழியர்களாய் உட்கார்ந்து வேலை பார்த்துக் கொண்டிருந்ததுதான். என்ன இது? நீங்கள் இங்கு உட்கார்ந்து... கம்பெனி முதலாளி நீங்கள்... என்று பதற்றத்துடன் வார்த்தைகளை ஆரம்பித்த கவிதாவை அவசரமாய்த் தடுத்தான் அசோக்குமார்.

ஓ... நீங்களா? குட்மார்னிங்...! வாருங்கள்...! முதலில் பதற்றம் வேண்டா... என்றவன் ஒரு வண்டிப் புன்னகையை முகத்தில் கொண்டு வந்து நான் அலுவலகத்தில் கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது... இதுதான் ஆரம்பம். இங்கிருந்து கற்றுக்கொள்கிறேன்....



அதற்குப் பின் கவிதா எவ்வளவோ வற்புறுத்தியும் அசோக்குமார் கேட்கவில்லை. கவிதாவிற்குத்தான் சங்கடமாயிருந்தது. முதலாளி புழுக்கத்தில் சாதாரணமாய் உட்கார்ந்திருக்க தனக்கு மட்டும் ஏஸி அறையா? என கவலைப்பட்டாளட... கூடவே அசோக்குமாருக்கு இப்போதாவது பொறுப்பு வந்ததே என்ற நிம்மதியும் எழுந்தது.

அசோக்குமாரின் திடீர் தடாலடி மாற்றம் ஆபீஸில் பலவேரை மூக்கில் விரல் வைக்குமளவுக்கு ஆச்சரியப்படுத்தியது. வயதான மூக்குக் கண்ணாடி மேனேஜர் கூட என்னால் நம்பவே முடியவில்லையம்மா.... நீ வந்ததும் பெட்டிப் பாம்பாய் அல்லவா அடங்கி விட்டான். பெரியவர் எவ்வளவோ புத்தி சொல்லியும் கேட்காதவன் உன் பேச்சிற்கு உடனே கட்டுப்பட்டு விட்டானே? என வியந்து போனார்.

கவிதாவிற்கும் அசோக்குமாரின் திடீர் மாற்ற சூட்சமம் புரியவில்லை. இப்படித் திடீரென யாராவது மனதை புத்தியை மாற்றிக் கொள்வார்களா? இல்லை மாற்றத்தான் முடியுமா? எதனால் அசோக்குமார் திடீரென மாறினார்? என்ன காரணம்?

நிச்சயம் எதுவோ காரணமிருக்கும் என்று கவிதா நினைத:து அத்தோடு மறந்தும் போனள். இரண்டு மூன்று நாட்கள் அப்படியே தொடர்ந்தது. ஒவ்வொரு நாளும் அவளுக்கு முன்பே அசோக்குமார் அலுவலகம் வந்து விடுவதும், பணியாளோடு பணியாளாய் உட்காரந்து வேலைகளைச் சிரத்தையாய் கவனிப்பதும் கவிதா பதறியபோதெல்லாம், நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம். நான் அடிப்படையில் இருந்தே வேலைகளைக் கற்றுக் கொள்கிறேன்... என்று மறுத்டது அலுவலகத்தின் ஒவ்வொரு வேலைகளாய் இழுத்துப் போட்டுப் பார்ப்பதுமாய் நகர்ந்தது.

அசோக்குமார் அப்படி சிரத்தையாய் வேலை பார்க்கும் விஷயம் கேள்விப்பட்டதும் பெரியவருக்கத்தான் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஆனந்தக் கூத்தே ஆடினார். ஆவலை அடக்க முடியாதவராய் ஓரிரு சமயம் நேரிலே வந்து அசோக்குமார் வேலை பார்க்கும் அழகைக் கண்குளிரப் பார்த்தார்.

அவரக்கு சந்தோஷம் பிடிபடவில்லை

கவிதாவைத்தான் பாராட்டு மழையால் குளிர்வித்தார். நிஜமாகவே நீ மகாலட்சுமிதான்ம்மா. நீ இங்கு வந்ததும் என்னவெல்லாம் அதிசயங்கள் நடந்து விட்டன. எத்தனை எத்தனை அற்புதங்கள் நடந்து விட்டன...!

உனக்கு எனது மனமார்ந்த நன்றிகளம்மா...! என்று அடிக்கடி நன்றிகள் கூறி அவளை சங்கடப்படவும வைத்தார்.

அந்த வாரம் முழுவதும் அலுவலகத்தில் முக்கியமான கட்டுமானப் பணி ஒன்றிற்கான காண்டிராக்ட் எடுப்பதிலே கவனம் செலுத்த வேண்டியிருந்தது. அதற்கான எஸ்ட்டிமேட்டுகள், குறைந்த செலவில் முடித்துக் கொடுக்கும் பட்ஜெட்டை உருவாக்குவது கவிதாவன் வேலையாயிற்று. கவிதாவும் முதல் முறையாய் முயற்சி செய்கிறோம். இந்டத காண்டிராக்ட் எப்படியும் கிடைத்துவிட வேண்டும்... என சிரத்தையாய் வேலை செய்தாள்.

அப்படி ஒரு வாரம் அவள் வேலையில் முழு ஈடுபாடு காட்டியதாலோ என்னவோ அந்த ஒரு வாரமும் அவள் ராஜாவைப் பார்க்கவே இல்லை. ஓரிரு முறை ராஜாவின் நம்பருக்கு போன் செய்தும் பார்த்தாள். லைன் கிடைக்க வில்லை. கேபிள் ரிப்பேராய் இருக்கவேண்டும்.

என்ன செய்ய? ராஜாவாவது வந்து பார்த்தால் என்ன? ஒரு வாரமாயிற்றே? என்ற கவலை கூட அவளை வாட்டிற்று. அன்று அலுவலகம் வந்தவள் காலையிலே தீர்மானம் கூட எடுத்துக்கொண்டாள்.

இன்று வேலை முடிந்ததும் எப்படியும் ராஜா அலுவலகம் சென்று சந்தித்தாக வேண்டும் என உறுதியும் எடுத்துக் கொண்டாள். அந்த நினைப்பே அவளுக்கு சந்தோஷத்தை உண்டாக்கிற்று. அப்படி அவள் குஷியுடன் வேலை பார்த்துக் கொண்டிருந்த போதுதான் அசோக்குமார் கதவு தட்டி பவ்யமாய் உள்ளே நுழைந்தான். கவிதா, உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும் என்றான் தயக்கமாய்.

என்ன விஷயம் சொல்லுங்கள்? என்றபடி உற்சாகமாய் புருவம் விரிய நிமிர்ந்த கவிதா அவன் கையில் ஒரு ரோஜாபூ மலரைப் பிடித்தபடி நிற்பதைப் பார்த்ததும் லேசாக கலவரமடைந்தாள். அப்படியே சீட்டை விட்டு எழுந்தும் விட்டாள்.

அசோக்குமார் பெரிய ரோமியோ போல் கூன் போட்டு பவ்யமாய் ரோஜா மலரை அவளிடம் நீட்டினான். முதலில் இதை வாங்கிக் கொள்ளுங்கள்.... என்றான்.

கவிதா குழம்பினாள். இது.... எ...த...ற்....கு... எதற்கு.... நீங்கள் கொடுக்....க.... வேண்...? வார்த்தைகள் வரமுடியாமல் திக்கித் திணறின.



முதலில் இதை வாங்கிக் கொள்ளுங்கள். விஷயத்தைச் சொல்கிறேன் கவிதா....

அசோக்குமார் விடாப்பிடியாய் வற்புறுத்தவும் கவிதாவுகட்கு வேறு வழியில்லாமல் போயிற்று. வேண்டா வெறுப்பாய் வாங்கிக் கொண்டு, விஷயத்தைச் சொல்லுங்கள் என்றாள்.

அசோக்குமார் மிடறு விழுங்கினான். விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்தான்.

ஆனால் அந்த நேரத்தில் பார்த்தா.... ராஜுமு கதவைத் திறந்து நுழைய வேண்டும்? அசோக்குமார் கவிதாவிடம், நான் உங்களை நேசிக்கிறேன். மனமார காதலிக்கிறேன்.... என்று காதல் வசனம் பேசும் சரியான நேரத்தில் ராஜா உள்ளே நுழைந்தான்.

கவிதா கையில் ரோஜாவைப் படித்தபடி நிற்பதையும் அசோக்குமார் காதல் வசனம் பேசுவதையும் கேட்டவன் அப்படியே முகம் சிவந்தும் போனான்.

## 15

திடுதிப்பென்று உள்ளே நுழைந்த ராஜாவை எதிர்பாராமல் பார்த்ததும் கவிதாவும் அசந்துதான் போனாள். ஒரு வாரமாய் அவனைப் பார்க்காத தவிப்பு அவனாகவே தன்னைப் பார்க்க ஓடி வந்திருப்பது எல்லாம் அவளை குஷிப்படுத்தியிருந்தாலும் அவள் இருந்த நிலை?

கையில் ரோஜாபூவைப் பிடித்துக் கொண்டு சினிமாக் கதாநாயகி போல் அவள் நிற்க, எதிரே காதல் வசனம் பேசியபடி அசோக்குமார். தனது நிலையை நினைத்து ஒரு கணம் கூனிக் குறுகிப் போனாள் கவிதா. அசோக்குமார் அப்படித் திடீரென காதல் வசனம் பேசுவான் என்று அவள் நினைக்கவில்லை.

ஆக... இரண்டு மூன்று நாட்களாய் அசோக்குமாரன் நடவடிக்கைகளை கவனித்தவள் எது நடக்கக் கூடாது... எப்படி நடந்து விடக் கூடாது... என்று நினைத்து பயந்தாளோ அது நடந்து விட்டது. அதுவும் ராஜாவின் முன்னிலையில்.

நிமிர்ந்து பார்த்தவள் சிவந்த முகத்துடன் அவளை எரித்து விடுவதைப் போல் ராஜா பார்ப்பதைக் கண்டு துடித்துதான் போனாள். ஐயோ! அதற்குள் தப்பாகப் புரிந்து கொண்டீர்களே...? ஆனாலும் சூழ்நிலை!

ஒரு புறம் தனது காதல் மனதைத் திறந்து காட்டியபடி நிற்கும் முதலாளி, மறுபுறம் எரித்து விடும் பார்வையுடன் நிற்கும் காதலன், யாரைப் பார்ப்பது... யாரைச் சமாதானப் படுத்துவது?

அவள் இருவரையும் பார்த்தபடி செய்வதறியாமல் குழம்ப, அசோக்குமார் அப்போதுதான் திரும்;பி ராஜாவைப் பார்த்தான். அவன் உரிமையாய் கவிதாவை விழித்துப் பார்ப்பதையும் கவிதா தடுமாறுவதையும் கண்டு கவிதாவுக்கு இவன் தெரிந்தவன் தான் என்பதை நொடியில் யுகித்தவன் மேற்கொண்டு தன் காதல் பற்றி கவிதாவிடம் பேச இது நேரமில்லை என்பதையும் உணர்ந்து கொண்டான்.

பிறகு வருகிறேன், உங்களைத் தேடி யாரோ வந்திருக்கிறார்கள்... என்று ராஜாவை காட்டிவிட்டு அங்கிருந்து மின்னலாய்.. விடைபெற்று வெளியேறவும் செய்தான்.

அசோக்குமார் சென்றாகி விட்டது. ரூமில் ராஜாவும் கவிதாவும் மட்டும்தான். ஆனால் ராஜா... ராஜாவின் பார்வை? இரைக்குக் கிடைத்த புள்ளிமானை வேட்டையாடப் போகும் சிங்கம் போல் அல்லவா அவளை எரித்துக் கொண்டிருந்தான்.?

அவன் பார்வை சட்டென மாறி மாறி அவள் கையில் தாவும் போதுதான் அசட்டுத்தனமாய் தான் இன்னமும் அந்த ரோஜா இதழைக் காதலி போல் பிடித்துக் கொண்டிருப்பதை உணர்ந்து அதை டக்கென கீழே போட்டாள். அத்தோடு நிறுத்தாமல் அசட்டுத்தனமாய் தான் என்ன பேசுகிறோம் என்றே உணராமல், என்னை மன்னித்து விடுங்கள்... என்றாள் ராஜாவை நோக்கி.

எரியும் தீயில் எண்ணெயை ஊற்றி அணைந்துவிடாமல் ஊதியும் விடுகிறாளே... அது போதாதா ராஜாவிற்கு? சிவந்த தணலாய் அவளை முறைத்தவன். பார்வையின் சூட்டைக் குறைக்காமலே, மன்னிப்பு எதற்கு? இதுவரை உன் காதல் நாடகத்தைப் பார்க்காமல் போனதற்கா? இல்லை இப்போது பார்த்து விட்டதற்கா...? என்று அவன் வினவியபோதுதான் தான் அவசரப்பட்டு எலிப் பொறியில் சிக்கிக் கொண்டதை உணர்ந்தாள்.

ஐயோ! அப்படியெல்லாம் இல்லை, நீங்கள்...



எது இல்லை? வசதியான ஆள், பெரிய கம்பெனிக்கு அதிபதி. கார் பங்களா என சகல வசதிகளும்... நீயும் சராசரி பெண் தானே? அதான் வளைத்து போட்டுவிட்டாய்... சே...!

ராஜூம அருவருப்பாய் முகம் சுழிக்க, அதைவிட அதிகம் முகம் சுழித்தாள் கவிதா. உங்களது அசிங்கமான கற்பனைகளைக் கொஞ்சம் நிறுத்துகிறீர்களா? என்றாள் ஆவேசமாய் மூச்சு வாங்கியபடி.

ராஜாவும் விடவில்லை. கேலி பொங்க அவளைப் பார்த்தவன், சரி நான் சொல்லவில்லை. அந்த அசிங்கத்தை... நீ... நீயாகவே சொல்லி விடுகிறாயா... ம்ம்... சொல்! சொல்! பார்ப்போம்...? எங்கிருந்து ஆரம்பிக்கப் போகிறாய்? முத்தத்தில் இருந்தா இலலை நேராய் படுக்கையில் இருந்தா...? என்று அவன் வினவவும், கவிதா தீப்பிழம்பாகி விட்டாள். உதடு துடிக்க அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

ஆனால் ராஜாவோ அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தாதவனாய், நெற்றிக் கண்ணைத் திறக்கிறாயா? ஆனாலும் குற்றம் குற்றம்தான்! நல்ல வேளை! எல்லாவற்றையும் கண்களால் நேரிடையாய் பார்த்துவிட்டேன். இல்லாவிட்டால் வழக்கம் போல் உன் பசப்பு வார்த்தைகளில் ஏமாந்திருப்பேன்... எனவும கண்களால் காண்பதும பொய், தீர விசாரிப்பதே மெய் என நீங்கள் பழமொழி கேள்விப்பட்டதில்லையா? என்றாள் கவிதா சிறிதும் ஆத்திரம் குறையாதவளாய்.

அடுத்த நந்தினி மாத நாவலில்

அகிலாகோவிந்த் எழுதும்

“மைவிழி ராணி...!”



அட்டகாசமான நாவல்..! படிக்க தவறாதீர்கள்..!

ராஜாவும் சளைக்கவில்லை. அதற்கு பதிலடி கொடுப்பவனாய், கேள்விப்பட்டிருக்கிறேன். அது மட்டுமல்ல, இன்னொரு பழமொழியும் கூட பொம்பளை சிரிச்சாப் போச்சு, புடவையை விரிச்சாப் போச்சு... என்று! அக நீ அவனைப் பார்த்துச் சிரித்து விட்டாய். இனி அவனுக்குப் புடவை விரிக்க வேண்டியதுதான் பாக்கி..! எனவும், கவிதா அடைந்த சினத்திற்கு அளவே இல்லை.

முதலில் இங்கிருந்து வெளியே போங்கள். நீங்களும் உங்கள் அசிங்கமான கற்பனைகளும்... போங்கள் வெளியே..! என பெருஞ்சினமெடுத்து அதட்டும் குரலில் கவிதா பேசவும்... ராஜாவே இதை எதிர்பார்க்கவில்லை.

ஆனாலும் மீசையில் மண் ஒட்டாத குறையாய் அலட்சியமாய் தோள்களைக் குலுக்கிக் கொண்டவன், கோபப்பட்டால்... போதுமா? எல்லாம் சரியாகி விடுமா? குற்றம்தான்! உனக்கு ஒருபோதும் மன்னிப்பு கிடையாது...! என்றபடி வெளியேறவும ;கவிதாவும நிலை குத்திய பார்வையோடு பொத்தென சோர்ந்து போனவளாய்.. சீட்டில் வேதனை பொங்க விழுந்தாள். ஆனாலும் அவளுக்க சினம் குறைந்தபாடில்லை. மன்னிப்பா? எனக்கா? என்னை மன்னிக்க யார் இவர்? அந்த உரிமையை யார் இவருக்குக் கொடுத்தார்கள்? என்றெல்லாம் சினம் தணியாதவளாய் மீண்டும் நினைத்து மனம் குமுறிக் கொண்டிருந்தாள் கவிதா



## 16



ராஜாவும் வேகத்தில் பேசிவிட்டானே தவிர, கவிதாவின் ரூமை விட்டு வெளி வந்ததும் அவன் கோபமெல்லாம் பஞ்சாகிப் போனது போல் ஆயிற்று. ஆயினும் அவள் தன்னிடம் அந்த முதலாளியைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்ற கோபமே தன்னை கவிதா மேல் சந்தேகம் கொள்ள வைத்துவிட்டது என தனது நினைப்பை நியாயப்படுத்தியும் கொண்டான்.

விருட்டென காரில் ஏறி விரைவாய் கிளம்பி அலுவலகத்தை விட்டு வெளியேற... கவிதா ரூமிலிருந்து சினம் கொண்டவளாய் வெளியேறிய ராஜாவை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அசோக்குமாரும் நொடியில் எல்லாவற்றையும் புரிந்து கொண்டான்.



ஆக... அவன் யுகித்தது சரி. இந்த ராஜா கவிதாவிற்கு ஏற்கனவே அறிமுகமானவன். பழக்கமானவன். இருவருக்குமிடையே... காதல் போன்று ஒன்று இருந்திருக்கிறது. அது... காயாகி... பழமாய் பழுப்பதற்குள் ராஜா கவிதா கையில் ரோஜாவுடன் நிற்பதைப் பார்த்ததும் ராஜா கவிதா மீது சந்தேகப்பட்டு விட்டான். கோபமாய் சண்டை போட்டு வெளியேறி விட்டான்.

இததான் நடந்திருக்கிறது. என்ன ஒரு அரிய சந்தர்ப்பம்? வந்த ஆபத்து வந்த வேகத்தில் விலகுகிறதே? அசோக் குமார் தன் நினைப்புகளுடன் திருப்தி அடைந்தவனாய் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

ஆனாலும் கவிதாவைப் போய் பார்க்க வேண்டும் என்ற ஆவலை அடக்கிக் கொண்டான். அதற்கு இது சமயமல்ல... கவிதா நிச்சயம் கோபத்தில் இருப்பாள். இப்போது போனால் அந்தக் கோபம் முழுதும் தன் மீது திரும்பி விடும். வேறு வினையே வேண்டாம்... என யோசித்தவன், கவிதாவை□ கவிதாவின் பார்வையை தன் பக்கத் திருப்ப வேண்டும். அதற்கு என்ன வழி? எனவும் யோசிக்க ஆரம்பித்தான்.

கவிதாவின் நிலையும் பரிதாபமாய்த்தான் இருந்தது. ஒருபுறம் ராஜா தன்மேல் அத்தனை ஆத்திரப்பட்டு கோபம் கொண்டது பெரும் அதிர்ச்சியை உண்டு பண்ணியிருந்தாலும் மறுபுறம் பெரியவரின் மகன் அசோக்குமார் நல்லவனாய் திருந்தி வேலைகளை கவனிக்க ஆரம்பித்துவிட்டானே... என்ற அவளது சந்தோஷ நினைப்பில் மண் விழுவது போல் நான் உங்களைக் காதலிக்கிறேன் என்று சொல்லிவிட்டானே! இது எங்கு போய் முடியப்போகிறது?

பிரச்சினைகள் அத்தனையும் சுளுவாகி விலகி விட்டது என்று நினைத்தால்... மீண்டும் மீண்டும் சிக்க விடுகிறானே? அவனுக்கு எப்படி புரிய வைப்பது? நான் உன்னைக் காதலிக்கவில்லை. வேறொருவரை விரும்புகிறேன் என்கிற உண்மையை எப்படி தெரிய வைப்பது? என்றெல்லாம் நினைத்து பலவாறாய் குழம்ப ஆரம்பித்தாள் கவிதா.

அடுத்து வந்த சில நாட்கள் ஒன்றும் நடைபெறாமல் அமைதியாகவே கழிந்தன. கவிதா வழக்கம் போல் வந்து வேலைகளைச் செய்தாள். ஆனால் அவளது நடையிலும் சரி, செயலிலும் சரி, ஒருவித செயற்கையாய் முடுக்கிவிட்ட இயந்திரத்தனம்தான் தெரிந்தது.

மனதில் பாறாங்கல்லை வைத்துக் கொண்டு அவளால் எப்படி சிரிக்க முடியும்? இரவு விழித்து யோசித்தாள். பட படக்கும் அவளது அழகிய விழிகள் கூட தூக்கமில்லாமல் சிவந்து போயிற்று. எதிலும் பற்றற்றவளாய் எதிலுமே லயிப்பில்லாமல் வந்து போய்க் கொண்டிருந்தாள்.

அசோக்குமாரும் அவளது நடவடிக்கைகளை கவனித்தவன் மனதில் சில கணக்குகளைப் போட்டு அதன்படி வாலைச் சுருட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவள் பார்வையில் படாமல் கூடுமானவரை நழுவினான். காதல் தோல்வி அவளை பாதித்திருக்கிறதாம். அந்தப் புண் ஆறவேண்டுமாம். அதற்காக காத்திருக்கிறானாம். தனக்குத் தானே கற்பனைகளும் சமாதானங்களும் செய்து கொண்டு அசோக்குமார் ஒதுங்கியிருந்தான்.

கவிதாவிற்கும் அது பெரும் நிம்மதியாய் இருந்தது. மத்தளத்திற்கு இருபுறமும் இடி என்பதுபோல் இல்லாமல் ஏதோ இவனாவது தொல்லைப்படுத்தாமல் இருக்கிறானே என பெருமூச்சு விட்டுக் கொண்டாள். எப்போது பார்த்தாலும் எதை நினைத்தாலும் ராஜாவின் நினைப்பே அடிக்கடி அவளுள் தோன்றியது. அந்த குறும்புச் சிரிப்பும், அவனது கருத்த மீசையும், அகன்ற நெற்றி நேரான நாசியுடன் துருவித் துளைக்கும் விழிகளுடன் மீண்டும் மீ;டும் அவன் மனத்திரையில் தோன்றியபோது கவிதா ரொம்பவும் அவஸ்தைப்பட்டாள்.

மறுகணமே எதற்கு இந்டத பொல்லாத நினைப்பு? என்னவெல்லாம் பேசிவிட்டார்? எப்படியெல்லாம் சந்தேகப்பட்டு விட்டார்? நான் சிரித்து விட்டேனாம். முதலாளியின் பணத்தைப் பார்த்ததும் மதி மயங்கி புடவையை விரித்து விட்டேனாம்? எவ்வளவு சீப்பாய் இளக்காரமாய் நினைத்து விட்டார் என்றெல்லாம் ராஜாவின்மீது அலை அலையாய் கோபம் பொங்கியது.

இனி அவர் நினைப்பே கூடாது. ராஜாவை மறந்துவிடவேண்டும். இப்படியொரு ஸ்திரமில்லாத சந்தேக புத்தி ஆளை எப்படி அவளால் மனதார நினைக்க முடியும? அப்படியே நினைத்து அவனுக்காக உருகி காதலனாய் கண்கண்ட கணவனாய்.. தான் கற்பனை பண்ணியதெல்லாம் எவ்வளவு பெரிய முட்டாள்தனம்? தன்னைத்தானே நொந்து கொள்ள ஆரம்பித்தாள் கவிதா.

கூடவே அசோக்குமார் மீது தாங்க முடியாத எரிச்சல் பெருகியது. அன்று இவன் மட்டும் ரோஜமு இதழைக்கொடுத்து காதல் கீதல் என்று தத்துப் பித்தாய் உளறாமல் இருந்தால் இந்த பிரச்சனை வந்திருக்குமா?



ராஜாதான் இப்படி சந்தேகம் கொண்டிருப்பாரா? இருந்தாலும் அவள் மனம் ஆறவில்லை.

என்னதான் இருந்தாலும் ராஜா ஒரு சராசரி ஆண்போல் நடந்து கொண்டாரே? சூழ்நிலையை வைத்து நம்மைச் சந்தேகப்பட்டு விட்டாரே? என்றெல்லாம் கவலை கொண்டவளாய் பொழுதை ஓட்டினாள். எவ்வித சுரத்தில்லாமல் வேலைகளை கவனித்தாள்.

அன்று மாலை அவளுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. வேலை முடிந்து அலுவலகத்தை விட்டு பஸ் ஸ்டாப் நோக்கி நடந்து கொண்டிருந்தாள். அம்பாசிடர் காரரென்று ஓரமாய் ஒதுங்கி சரக்கென அவள் பக்கம் பிரேக் போட்டு நிற்க... திடுக்கிட்டுப் பார்த்தாள் கவிதா.

உள்ளே ராஜாவின் தாயார் அன்னபூரணி அம்மாள் சிரித்தபடி அவளை நோக்கி கையசைத்ததைப் பார்த்ததும் அவளுக்கு உயிர் வந்ததுபோல் இருந்தது. அன்னபூரணி அம்மாள் உற்சாகமாய் கவிதாவை அழைத்து காரில் ஏற்றிக் கொண்டவள், கவிதா உன்னைப் பார்த்து எவ்வளவு நாளாயிற்று? உன்னிடம் நிறைய பேச வேண்டும்... வீட்டிற்கு வருகிறாயா? என்று கேட்டதும் அவளால் ஒன்றையும் யோசிக் முடியவில்லை. பும் பும் மாடு போல் தலையாட்டத்தான் முடிந்தது.



## 17



ராஜாவின் தாயார் அன்னபூரணி அம்மாள் கவிதாவைப் பிடித்து இழுக்காத குறையாய் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். கவிதாவிற்கும் வேறு வழியில்லை. தனது நிலைக்கு இது பெரிதும் ஆறுதலாய் இருக்கும் என்றுதான் நினைத்தாள்.

ஆனாலும் பயம் ராஜா உருவில் வந்தது. வீட்டில் ராஜா மட்டும் இருந்துவிட்டால் அவ்வளவுதானே? அவளைக் கேள்விகளால் குத்திக் குதறி கிழித்து விடுவானே?

நல்லவேளை... ராஜா அங்கு இல்லை. அவனா? சதா ஆபீஸ்... ஆபீஸ்... என்றுதான் அலைவான். வீட்டில் இருந்தால்தான் அதிசயம்... என்று அன்னபூரணி சொன்னது அவளை ரொம்பவும் ஆறுதல் படுத்தியது.

அன்னபூரணி அம்மாள் முகமலர அவளை வரவேற்று பங்களாவிற்குள் அழைத்துச் சென்றாள். கவிதாவுக்கு என்னவோ போல்தான் இருந்தது. இன்னமும் இவர்களுக்கு விஷயம் தெரியாதோ? ராஜா அன்று நடந்த சண்டையைப் பற்றி இவர்களிடம் சொல்லவில்லையோ? என நினைத்தவள் மறுகணமே, இதையெல்லாம் போய் சொல்வார்களா? சொல்லக்கூடிய விஷயமா இது? ஆனால் ராஜா செய்வாரே? என்மீது அத்தனை சேற்றையும் வாரியிறைத்து ஆனந்தப் பட்டாரே! அவர் ஏன் செய்ய மாட்டார்? என்றும் நினைத்தாள்.

ஆனால் அன்னபூரணி அம்மாளோ எவ்வித சஞ்சலமும் இல்லாமல் அவளிடம் விழுந்து விழுந்து பேசினாள். பெற்ற மகள் போல் உரிமையுடன் அவள் கைபற்றி வாஞ்சையுடன் அவள் தலையைக் கோதியபடி பேசியபோது கவிதாவுக்கு தாய் உணர்வே ஏற்பட்டது. தன்னிடம் எவ்வளவு அன்பாக இருக்கிறார்கள் என்று நெகிழ்ந்து போனாள்.

கூடவே இந்த அன்பு, பாசம் ராஜாவிடம் இல்லாமல் போயிற்றே என வருந்தினாள். அப்படி அடிக்கடி அவள் முகம் வாடி விடுவதை அன்னபூரணி அம்மாள் கவனிதது விட்டாளோ என்னவோ. என்னம்மா குழந்தே, ஏன் ஒரு மாதிரியா இருக்கே? என வினவவும் செய்தாள்.

கவிதாவுக்கு சங்கடமாய் போயிற்று. இருந்தும் சமாளிக்க விரும்பியவளாய், ஒன்றுமில்லை. லேசான தலைவலி தான் அம்மா... என்று வழக்கமான பொய்யைச்ட சொன்னாள். அன்னபூரணி அம்மாள் அதைக் கேட்டவள் சும்மா இருக்கவில்லை. இரு... என்னிடம் ஒரு தைலம் இருக்கிறது. தேய்த்து விட்டால் தலைவலி பறந்து விடும்... என்றபடி எழுந்து உள் ரூமிற்குச் சென்று எடுக்கப் போக... அந்த சமயத்திலா ராஜா வரவேண்டும்?

விறுவிறுவென சும்பீரமாய் உள்ளே நுழைந்தவன் தனது விட்டினுள் கவிதாவைப் பார்த்து அப்படியே திகைத்து நின்றான். கவிதாவும் அவனைப் பார்த்துவிட்டாள். யார் பார்வையில் படாமல் அங்கிருந்து சீக்கிரம் விடைபெற்றுச் சென்று விடலாம் என்று நினைத்தாளோ... அது முடியாமல் சிங்கத்தின் வாயிலே அகப்பட்டது போல் வசமாய் சிக்கிக்கொண்டு...

அவனது பார்வையைச் சகிக்க முடியாமல் நிலை கொள்ளாமல் தவித்தாள் கவிதா. அவன் தன்னையே உறுத்து துளைத்து விடும் குறுகுறுப்பு பார்வை பார்த்துக்கொண்டிருப்பது அவளுக்குத் தெரிந்தது. ராஜாவும் விடவில்லை.



மெல்ல அதே குறுகுறுப்புப் பார்வையுடன் அவளை நெருங்கியவன், வீட்டிற்கு வந்து அம்மாவிடம் பேசினால் எல்லாம் சரியாகிவிடும். நன்றாகத்தான் கணக்கு போட்டிருக்கிறாய்... என கேலி பொங்க பேசவும் சினந்து போனாள்.

நான் ஒன்றும்... நான் நானாக வரவில்லை. அம்மாதான் கூட்டி வந்தார்கள்... அவளது ரோஷமான பதிலை ராஜழ கொஞ்சமும் காதில் விழுந்ததாய்க் காட்டிக் கொள்ளாமல் அவளைப் பார்த்தான்.

உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? நீ பலே நாடகக்காரி ஆயிற்றே... நன்றாக நடிக்கிறாய்..! அவன் கூறியதற்கு ஆக்ரோஷமாய்ப் பதிலடி கொடுத்துப் போனவள் எதிர்ரூமிலிருந்து அன்னபூரணி அம்மாள் தைலத்துடன் வருவதைப் பார்த்ததும் சட்டென வாயை மூடிக்கொண்டாள்.

அன்னபூரணி அம்மாள் ராஜா நிற்பதைப் பார்த்து சந்தோஷம் கொண்டவள், அட, வந்து விட்டாயா? நல்ல சமயத்தில் வந்தாய். இவளுக்கு தலைவலி என்றாள். தைலம் எடுக்கப் போனேன்... என்றவாறு தைலப் புட்டியை சிறுபிள்ளை போல் அவனிடம் காட்டினாள்.

தலைவலியா? இவளுக்கா...? ராஜா திரும்பவும் ஒரு குதர்க்கப் பார்வை பார்த்டதும் பதிலுக்கு எரித்து விடுபவள் போல் கவிதாவும் பார்த்தாள்.

அதைக் கொஞ்சமம் உணராதவளாய் அன்னபூரணி அம்மாள் தைலப் புட்டியை ராஜாவிடமே கொடுத்தாள். நீதான் நன்றாகத் தேய்த்து விடுவாயே, நீயே அவளுக்குத் தேய்துவிடு.. என்றபடி கவிதாவைப் பார்த்து ராஜாதான் எனக்குத் தலைவலிக்குத் தேய்த்து விடுவான். அரை நிமிடத்தில் வலி சிட்டாய்ப் பறந்து விடும் எனச் சொல்லவும் கவிதாவுக்கு சங்கடமாய்ப் போயிற்று.

இங்கு தலைவலியே அவன்தானே? அவனாவது... வந்து தைலத்தை தேய்த்து விடுவதாவது... ? சினந்து செய்வதறியாமல் கவிதா திகைக்க, ராஜாவோ எவ்வித சலனமுமில்லாமல் அவளை நெருங்கினான்.

உன் தலையைக் காட்டு தேய்த்து விடுகிறேன்.. என கிண்டல் குரலில் அவன் வினவவும் பதிலுக்கு சளைக்காதவளாய் ஏன்... பார்த்தால்.. தலை தெரியலையாக்கும்? என்றாள் அதே கிண்டல் குரலைத் திருப்பியபடி.

தலை தெரிகிறது. ஆனால் மூளைதான் தெரியவில்லை. இருந்தால்தானே தெரிவதற்கு? என்று கிசுகிசுப்பாய்ப் பேசிவிட்டு அவளது

சினப் பார்வையைக் கொஞ்சமம் பொருட்படுத்தாமல் உரிமையுடன் தைலத்தை அவள் நெற்றியில் மென்மையாகத் தடவி விட்டான்.

எரிமலையாய் சினம் கொண்டடிருந்தவள் அவன் கை பட்டதாலோ என்னவோ சட்டென குளிர்ந்து போனாள். அவனது விரல்களில் தீண்டல் ஸ்பரிசம் அவளை என்னவோ செய்தது. சட்டென கண்கள் சொருகியவளாய் மோனத்தின் மயக்க நிலைக்குப் போனவள் அப்படியே அவன் மீது சாய்ந்தும் விட்டாள்.



# 18



ராஜாவின் விரல் ஸ்பரிசத்திடில் அப்படியே கிறங்கிப் போனவளாய் மெய்மறந்து அவன் மீது சாய்ந்து விட்டாள் கவிதா. நல்லவேளை! அந்த சமயம்அன்னபூரணி அம்மாள் இல்லை. அதுவரை அங்கு நின்று கொண்டிருந்தவள் ஏதோ ஓ்ன்றை எடுத்து வருவதற்காக திரும்பவும் உள்ளே சென்று விட்டாள்.

ராஜாவும் தன் கை பட்டதும் அவள் சினம் தணிந்து பெட்டிப் பாம்பாகி விடுவாள் என்பதை முன்பே அறிந்திருந்தவன் போல் அவனும் அவளை விடாது இறுக கட்டி அணைத்துக் கொண்டான். அவனது கைகள் அப்படியே அவளைச் சுற்றி இறுக்கிக் கொண்டன. கவிதா சுயநினைவு முற்றிலும் இழந்தாள். மெய்மறந்தவளாய்... அழுது அடம் பிடித்த குழந்தைக்கு ஆசைப்பட்டது கிடைத்துவிட்டது போல் அவன் கரங்களில் துவண்டாள்.

ராஜாவுடம் விடவில்லை. அவளை அப்படியே இழுத்தணைத்துத் தன்னோடு ஐக்கியப்படுத்தினான். அவள் மலர் முகத்தை மெல்ல நிமிர்த்தி முகத்தோடு முகம் உரசவும் ஆரம்பித்தான். அவனது உதடுகள் படபடக்கும் அவளது ரோஜா இதழ்களைத் தேட ஆரம்பித்துவிட்டன. அப்படி அவன் தேடிக் கண்டுபிடித்து அழுத்தமாக உதடுகளில் முத்தமிட்ட போதுதான் கவிதாவுக்கு கொஞ்சம் கொஞ்சமாய் சுயநினைவு வர ஆரம்பித்தது.

மெல்ல மெல்ல தன் சுய உணர்வுக்குத் திரும்பியவள் தன் நிலையைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.



காதல் ரசம் சொட்டச் சொட்ட... இறுக்கமாய் காதல்ன அணைப்பில் மெய்மறந்து கொண்டு... அவன் என்ன காதலனா? என்னதான் நடக்கிறது இங்கு? சினமாய் எண்ணம் தோன்ற சுதாரித்தாள். தன் நிலைக்கு வந்தாள். படபடவென அவனது கரங்களை விலக்கினாள். தன்னை பலமுடன் அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டாள்.

ராஜாவும் அவள் நினைவு திரும்பியது கண்டு, பிடிகளைத் தளர்த்தி விடுவித்தவன் குறும்புச் சிரிப்பு குறையாதவனாய், அட... இதற்குத்தானா தலைவலி... இப்போது தீர்ந்துவிட்டிருக்குமே? எனவும். கவிதா வெட்கம் பிடுங்க தலைகுனிந்து கொண்டாள். ஒரு கணம் உணர்ச்சிகளில் தவித்து தன் வசம் இழந்து விட்டோமே... என்று குறுகிக் கொண்டாள்.

அவள் அப்படி தவித்து வருந்துவதை ராஜா வெகுவாய் ரசித்தவன், வருந்தாதே கவிதா, நடந்தது எல்லாம் சரிதான்..! மெல்லிய குரலில் அவள் தோள்களைப் பற்றியபடி சமாதானம் சொல்ல மேலும் சிவந்து போனாள் கவிதா.

டக்கென அவள் தோளைப் பற்றிய அவனது கரங்களைத் தட்டி விட்டாள். கோபச் சிலிர்ப்புடன் அகன்று திரும்பவும் சினமாய் அவனைப் பார்க்க... ராஜா சிரிப்பை விடாமல் குறும்பு தொனிக்கப் பார்த்தான். இது... நல்ல... நியாயம் தான்... நீ மட்டும் தேவையெனில்... அணைத்துக் கொள்ளலாம்.... நான் மட்டும் உன்னைத் தொடக்கூடாது.. அப்படித்தானே?

திரும்பவும குத்தலாய் அவன் பேசியதற்கு மறுப்பு பேசமுடியாமல் கவிதா தவிக்க அவளை மேலும் தவிக்க விடாது உள்ளிருந்து அன்னபூரணி அம்மாள் வந்துவிட்டாள். அப்பாடா! இவனிடமிருந்து தப்பித்தோமே..! கவிதா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். நடந்தது எதுவுமே புரியாத அன்னபூரணி திரும்பவும் தனைக் கிளறியவளாய், என்னப்பா தைலத்தை நன்கு தேய்த்து விட்டாயா? என்றாள் அப்பாவிப் பார்வையுடன்.

ஓ! தேய்த்து விட்டேனே...! ஆனால்.. தலைவலி... இது சாதாரண தலைவலி அல்ல... பயங்கர தலைவலி... இதற்கு அடிக்கடி பக்கத்தில் நானிருக்க வேண்டும். அப்படியானால் தான் சரியாகும்! கேலிக் குரலில் கவிதாவை ஓரக் கண்ணால் பார்த்தபடி ராஜா கண்ணடித்துச் சொல்லவும் திரும்பவும் தவித்துதான் போனாள்.

அவளை மேலும் சங்கடப்படுத்த வேண்டாமென்று நினைத்தானோ என்னவோ ராஜா விறுவிறுவென அங்கிருந்து அகன்று தன் ரூமிற்குச் சென்று

விட்டான். அப்பாடா! தலைவலி தீர்ந்தது! கவிதா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

அதற்குப் பின் அன்னபூரணி அம்மாள் வழக்கம் போல் அது இதுவென ஊர்க் கதைகள் பேச ஆரம்பித்து விட்டாள், கவிதாவோ நேரம் ஆவதை உணர்ந்து அடிக்கடி வாட்ச்சையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு வழியாக அன்னபூரணி அம்மாள் பேச்சை முடித்தபோது கவிதா பயந்தபடியே நடந்தது. நேரமாகி விட்டது. ராஜாவை உன் வீட்டில் கொண்டு விடச் சொல்கிறேன் அம்மா... என்று அன்னபூரணி சொன்னபோது கவிதாவுக்கு திக்கென்றிருந்தது. அவசரமாய், அவர் எதற்கு டிரைவர் போதுமே? என்று மறுத்துரைக்கையில் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தானோ என்னவோ ராஜா அங்கு ஆஜராகிவிட்டான்.

நானும் நல்ல டிரைவர்தான். உன்னை பத்திரமாக வீட்டில் சேர்த்து விடுவேன், வருகிறாயா? என்று கேலி பொங்க அன்னபூரணி அம்மாள் முன் அழைத்தபோது, கவிதாவுக்கு வேறு வழியில்லாது போயிற்று.

அன்னபூரணியுடன் விடைபெற்று காரில் கிளம்பினாள். கிளம்பும் போது காரின் முன் சீட்டில் ஏறுவதா பின் சீட்டில் அமர்வதா என்று அவள் குழம்பும் போது ராஜாவே பின் சீட்டின் கதவைத் திறந்து உட்காரச் சொன்னான். அப்பாடா... பெரிய பிரச்சினை தீர்ந்தது... என்று அவள் பெருமூச்சு விட்டபோது, முன் சீட்டில் நீ உட்காரலாம். ஆனால் எனக்குப் பயமாய் இருக்கிறது என்று அவன் சொன்னது அவளுள் ஆச்சரியத்தை உண்டுபண்ணியது.

பயமா? என்னிடமா? அவள் வினவியதற்கு ராஜா குறும்பு பொங்க பார்த்தான்.

பின் இருக்காதா? ஆண்களின் ஸ்பரிசம் பட்டாலே திடீர் திடீரென்று இறுக கட்டிப் பிடித்து விடுவாய். பின் காரைச் செலுத்துவது ஆபத்தாகி விடும்...

கவிதாவின் முகம் டக்கென சிவந்து போனது. ஆரம்பித்துவிட்டான். திரும்பவும் அந்த ஒரு நிகழ்ச்சியைக் கூறியே நம்மைக் குத்திக் குதறி கிழித்து விடுவான். எப்படித்தான் இவனிடமிருந்து தப்புவது? என பயமாய் கவிதா சிந்திக்க அந்த மௌனம் ராஜாவிற்கு வசதியாய் போனது.

கவிதா எனக்கு ஒரு சந்தேகம்... என்றபடி ராஜா இழுத்தான்.

கேளுங்கள்... என்றாள் கவிதா உணர்ச்சியற்ற குரலில்.



ஆனால்.... நீ கோபிக்கக் கூடாது... என்று அவன் பீடிகை போட்டபோதே அவனது பார்வை விஷமமாய் மாறுவதைக் கண்டு கவிதா அச்சமும் அதை முற்றிலும் மெய்யாக்கியபடி ராஜா கேள்வியை வீசினான்.ஷ

ஆபீஸில் அதாவது உன் அலுவலகத்தில் நீ உன்னுடைய இந்த உணர்ச்சிகளை எப்படி சமாளிக்கிறாய்? கையில் அகப்படும் கண்களில் தென்படும் ஆண்களை இறுக கட்டி அணைத்து தணித்துக் கொள்வாயோ?

நாக்கில் நரம்பில்லாமல் அவன் கேட்டதும் கண்மண் தெரியாமல் கையை வீசிவிடத்தான் கவிதாவின் உணர்வுகள் ஆக்ரோஷத்துடன் துடித்தது. ஆனாலும் சிரமப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். நிஜமாகவே தன்னைச் சந்தேகப்பட்டு கேட்கிறானா? இல்லை தன்னைச் சீண்டி விளையாடி ரசிக்கிறானா? என்று அவளால் அவனைப் புரிந்து கொள்ள முடியாத பட்சத்தில் மௌனமாய் இருப்பதே மேல் என்று நினைத்தாள்.

இனி அவன் என்ன கேள்வியைக் கேட்டாலும் எத்தனை இடிகளைப் போட்டாலும் வாயைத் திறக்க மட்டும் கூடாது என்ற உறுதியில் முகத்தில் எந்த உணர்ச்சியும் காட்டாது இறுக்கமாய் உட்கார்ந்திருந்தாள்.

அவளது இறுக்கத்தை ராஜா புரிந்து கொண்டானோ என்னவோ, சரி உனக்கு மூட் இல்லை போலும். இன்னொரு நாள் உன்னுடைய அந்த உணர்ச்சிகளைப் பற்றி விலாவாரியாய்த் தெரிந்து கொண்டால் போயிற்று... கேலி பொங்க முணுமுணுத்து விடடு காரை செலுத்த ஆரம்பித்தான்.

அதற்குப் பின் ராஜழ ஒன்றும் பேசவில்லை. கவிதாவுக்கு பெரும் நிம்மதி. அவள் தான் அடிக்கடி யதேச்சையாய் திரும்புவது போல் அவனை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவனது பளபளப்பான சிகையைப் பார்த்தவளுக்கு அதில் ஓங்கி குட்டு வைக்கலாம் போல் கூட ஆசை எழும்பியது. இந்தத் தலைதானே அவளைப் பற்றி தாறுமாறாய் சிந்திக்கிறது? தன்னைப் படு மட்டாய் கேவலப்படுத்தி ரசிக்கிறதே? அப்படி என்னதான் மன்மத நினைப்பு மனசுக்குள் ஓடுகிறதோ? என நினைத்துக் கொண்டாள்.

அவள் அப்படி நினைத்து முடிக்கவும் வாயில் என்ன கொழுக்கட்டையா போட்டிருக்கிறாய்? என்றபடி காரை ராஜா நிறுத்தவும் சரியாயிருந்தது.

எ... என்ன... கேட்டீர்கள்?

திக்கித் திணறி கேட்டவாறே அவள் வெளியே பார்த்தபோதுதான் வீடு வந்திருப்பது தெரிந்தது...

மூன்று நான்கு முறை கேட்டுவிட்டேன். வீடு வந்துவிட்டது. இதுதானே? என்று நீயோ பதில் சொல்லாமல் வெறித்துக் கொண்டிருக்கிறாய்?

கவிதா தனது சிந்தனை தப்பிப் போனதற்கு தன்னைக் கடிந்து கொண்டவள், வருத்தம் தொனித்த குரலில், மன்னித்துக் கொள்ளுங்கள். ஏதோ சிந்தனையில் இருந்து விட்டேன்.... என்றவாறே காரிலிருந்து இறங்கிக் கொண்டாள்.

சிந்தனையா? அதுபற்றிதானே? இரவு முழுவதும் நன்றாகக் கொட்டக் கொட்ட விழித்து யார் யாரை விரும்புகிறாயோ, அவர்களையெல்லாம் கட்டிப் பிடித்து சிந்தனை செய்யலாமே?

கிளம்பும்போதும் நக்கலாய்ப் பேசி அவளை ஒரு கணம் வாடச் செய்துவிட்டு காரைக் கிளப்பினான் ராஜா.

## 19

அதற்குப் பின் வந்த மூன்று நாட்கள் கவிதாவிற்கு எந்தவித தொந்தரவுமில்லாமல் கழிந்தன. நான்காம் நாள் அசோக்குமார் உருவில் பிரச்சனை யொன்று ஆரம்பமாகிது.

அன்று காலையிலே அசோக்குமார் கவிதாவைத் தேடி வந்தவன், கவிதா மறுக்கக் கூடாது. இன்று மாலை என்னுடன் நீங்கள் ரெஸ்டாரெண்டுக்கு வரவேண்டும்.... என்றான் கெஞ்சும் குரலில்.

கவிதா, இது என்ன புதுத் தலைவலி என வந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு எதற்காக நான் வர வேண்டும்? என்றாள் அதையாக.

உங்களிடம் நிறைய பேச வேண்டும்.

என்ன பேச வேண்டும்?



பயப்படாதீர்கள்... அன்ற பேசியது போல் அசட்டுத் தனமாக எதுவும் பேச மாட்டேன். இது வேறு ஒன்று. இதைப் பற்றி நான் உங்களிடம் பேசியே ஆகவேண்டும்....

அசோக்குமார் மறுபடி மறுபடி கெஞ்ச, கவிதாவிற்கு வேறு வழியில்லாது போயிற்று. சங்கடத்தடுடன் தலையசைத்தாள். அன்றுபோல் ரோஜா மலருடன் ரோமியோ வசனம் பேசாமல் இருந்தாலே சரி என நிம்மதியுடன்ஒத்துக் கொண்டாள்.

சாயங்காலம் ஐந்து மணிக்கு சொல்லி வைத்தாற்போல் டாணென்று அசோக்குமார் அவளை எதிர் கொண்டான். போகலாமா? என்றபடி காரைக் காட்டினான். கவிதா வழியில்லாது ஏறிக் கொண்டாள்.

கார் அங்கிருந்து கிளம்பிய சில மணி நேரத்தில் நகரின் பிரபல ரெஸ்ட்டாரெண்ட் முன் நின்றது. இறங்கிக் கொண்டார்கள். திறந்தவெளி ரெஸ்ட்டாரண்ட் அது. வழி நெடுக்க பூந்தொட்டிகள், செடிகள், வண்ண வண்ண மலர்கள் நிரம்பியிருக்க... ஓரமான இருக்கையொன்றில் எதிர் எதிராக இருவரும் அமர்ந்து கொண்டார்கள்.

அசோக்குமார் அவளிடம் டிபன் அயிட்டங்களைக் கேட்டு ஆர்டர் செய்துவிட்டு, அவளையே கூர்ந்த பார்த்தான். கவிதாவிற்கு எரிச்சலாயிருந்தது. எப்படா அங்கிருந்து போவோம்... இவனுடன் வந்தது சரியா? என்றெல்லாம் நினைப்பு ஓடிற்று.

எது எப்படியோ? இன்று தெள்ளத் தெளிவாய் கூறி விடுவோம். வீணான ஆசைகள் வேண்டாம்... என்னால் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது என முகத்திலடித்தாற்போல் விஷயம் முழுவதையும் உடைத்து விட வேண்டியதுதான் என எண்ணிக் கொண்டாள்.

முதலில் அவன் என்ன பேசப் போகிறான் என்பதை அறிந்து கொள்ள விரும்பியவளாய், என்ன விஷயம் பேச வேண்டும் சொல்லுங்கள் என்றாள் அவளை வியந்து நோக்கியபடி.

அசோக்குமார் பேச்சு வராதவன் போல் மிடறு விழுங்கிக் கொண்டான். கவிதா, அன்று ரோஜா மலரைக் கொடுத்து உங்கள் மனதைப் புரந்து கொள்ளாமல் காதல் வசனம் பேசிவிட்டேன். உங்களை ரொம்பவும் சங்கடப்படுத்தி விட்டேன். முதலில் அதற்காக என்னை மன்னித்து விடுங்கள் என்றவன் கவிதா மௌனம் சாதிக்கவும் அவனே பேச்சைத் தொடர்ந்தான்.

அன்று ஒரு விஷயத்தைப் புரிந்து கொண்டேன். நீங்கள் ஒருவரை விரும்பி வருவதையும் தெரிந்து கொண்டேன். அதனாலே என் மனதையும் மாற்றிக் கொண்டேன்... அடுக்கு மொழியாய் அசோக்குமார் வசனம் பேசியதும் கவிதா திடுக்கிட்டு விட்டாள்.

நீங்கள்... நீங்கள்... என்ன சொல்கிறீர்கள்? என்றாள் அவசரமாக.

அசோக்குமார் அதற்குப் பெருஞ்சிரிப்பு சிரித்தவன், எனக்கு எல்லாம் தெரியும் கவிதா. நான் எல்லாவற்றையும் கவனித்து விட்டேன். நீங்கள் ராஜாவை விரும்புகிற விஷயம் காதலிக்கிற விஷயம் எனக்குப் புரியாதா? அவ்வளவு மடையனாநான்? எனவும் கவிதாவிற்கு வேறு வழியில்லாது போயிற்று.

முகம் சிவக்க ஒரு கணம் குனிந்து கொண்டாள். தன்னை ராஜாவுடன் இணைத்துப் பேசுவதை உணர்ந்த போதே அவளையறியாமல் வெட்கமான சிலிர்பொன்று உடம்பில் ஓடியது. ஆனாலும் முன்னால் இருப்பது அந்நியனாயிற்றே? இவனுக்குப் பதில் ராஜா இந்த இடத்தில் இருந்து இந்த வார்த்தைகளைச் சொன்னால் அவளுக்கு எவ்வளவு இதமாய் இருந்திருக்கும்? என்றெல்லாம் நினைத்தவள் உணர்ச்சிகளை சுத்தமாய் மறைத்தவாறு நிமிர்ந்தாள்.

அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன் கவிதா! என்று அசோக்குமார் புதிரோடு சொல்ல அவனையே ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

உங்கள் இருவரையும் சேர்த்து வைப்பதுதான் என்னுடைய முதல் வேலை. என்னுடைய கடமையும் கூகூட....

அசோக்குமார் சொல்ல நிஜமாகவா? என நம்ப முடியாமல் பார்த்தாள்.

நிஜம்தான். நம்புங்கள் கவிதா... நான் அனுமார் போல் தூதுவராய் செயல்பட்டு உங்கள் இருவரையும் சேர்த்து வைக்கப் போகிறேன். உங்கள் இருவருக்கும் இடையே உள்ள ஊடலைத் தீர்த்து வைக்கப் போகிறேன்...

ஏற்றி இறக்கி அசோக்குமார் சொல்வதைக்கேட்டு கவிதா அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்தாள். அசோக்குமாரும் பெரிய ஹாஸ்யத்தைக் கண்டவன் போல் சிரிக்க ஆரம்பித்தான். அவர்கள் இருவரும் தங்களை மறந்து அடக்க முடியாமல் அப்படிச் சிரிக்கும்போது ரெஸ்ட்டாரண்டினுள் நுழைந்து கொண்டிருந்தான் ராஜா.



ராஜா ரெஸ்ட்டாரண்டினுள் நுழைந்தவன் கண்களில் நேராய் அந்தக் காட்சி தெரிந்தது. மேஜையைத் தட்டியபடி சிரிக்கும் அசோக்குமாரும் எதிரே அடக்க முடியாமல் சிரிக்கும் கவிதாவும்! முகம் அப்படியே தணலாகி சிவந்துபோயிற்று. உதடு துடிக்க கண்களால் எரித்தான். நேராய் கவிதாவின் தலைமுடியை ஓங்கிப் பற்றி செவிட்டில் அறையலாம் போல் இருந்தது.

அடக்கிக் கொண்டான் ராஜா. இனி நடக்கும் கூத்தையும் பார்க்க விரும்பியவன் போல் அவர்கள் கண்ணில் படாத ஓரஸீட் ஒன்றில் உட்கார்ந்து கொண்டு அவர்களையே நோட்டமிட ஆரம்பித்தான்.



## 20



கவிதா ராஜா வந்ததைக் கொஞ்சமும் உணரவில்லை. அசோக்குமார், தனக்கும் ராஜாவிற்கும் இடையே குறுக்கே வந்தவன் சட்டென மனம் மாறிப் பேசியது அவளை ரொம்பவும் குளிரச் செய்தது. பெரிய ஆபத்தொன்று விலகியது போல் பெருமூச்சு விட்டாள். ஆனந்தம் உடம்பு முழுவதும் சிறகடித்து அவளைத் திணறடித்தது.

அவளது அந்த குஷியை அசோக்குமார் புரிந்து கொண்டானோ என்னவோ அதற்கேற்றாற்போலவே காரியமாய் நானே இன்று ராஜாவிடம் போய் எல்லா விஷயத்தையும் பேசப் போகிறேன். உங்களுக்கு சம்மதம்தானே? எனவும் கவிதா பலமாய் தலையாட்டினாள்.

அவனுக்கு ராஜாவிடம் அசோக்குமாரே போய் சொன்னதால் உண்மையை புரிந்து கொள்வார். தன்மீது கொண்டுள்ள ஐயத்தை நீக்குமவார் என நினைப்பு ஓடியது. நம்மை ராஜா என்னவெல்லாம் சந்தேகப்பட்டு விட்டார்? இந்த அசோக்குமாருடன் சம்பந்தப்படுத்தி எப்படியெல்லாம் நோகடித்து விட்டார்? என்றெல்லாம் கவிதா நினைத்தாள்.

அசோக்குமார் சுதாரித்தவனாய் நேரமாயிற்று, கிளம்புவோம், கவிதா! என்றபடி அவசரப்படுத்த, பதிடில் பேசாமல் கவிதா கிளம்பினாள். திரும்பவும் காரில் ஏறிக் கொண்டார்கள். அசோக்குமார் அவளை ஓரக்கண்ணால் பார்த்டதபடி வண்டியைக் கிளப்பினான். அவனது கறுப்பு முகத்தில் விஷமமாய் ஒரு புன்னகை ஓட ஆரம்பித்தது.

கவிதா காரில் ஏறி உட்கார்ந்ததும் சரி, எல்லாவற்றையும் மறந்து விட்டாள். ராஜாவும் அவளும் மட்டும் தனித்திருக்கும் கனவுகளில் சஞ்சரிக்க பூக்கள் அப்போதுதான் மொட்டவிழ்த்து சுகமான நறுமணத்தைப் பரப்பும் மலர்கள். அந்த நந்தவனத்தின் பெரிய மர நிழல் ஒன்றில் இளவரசிபோல் பளபளப்பான ராஜ உடைகளுடன் கவிதா காத்திருக்கிறாள். சிறிதுநேரத்தில் குதிரையின் குளம்பொலி கேட்க ஆவலாய் நிமிர்கிறாள். எதிரே உறுதியான நெஞ்சும் திடமான புஜமுமாய் கம்பீரமாய் குதிரையில் ராஜா. அப்படியே சிலிர்த்துப் போய் கவிதா எழுந்துவிட.... சிரித்தபடியே ராஜா அவளை நோக்கி வர... அப்போதுதான் கவனிக்கிறாள்... ராஜாவின் கையில் ஒரு பெரிய சொடுக்கு. அவள் என்னவென்று திடுக்கிடுமுன்பே அவளை நோக்கி படீர் படீரென சொடுக்கை விசுகிறான். அவனது அழகு முகம் சட்டென கோபக் கனலாகி விடுகிறது. என்ன ராஜாவாவது நம்மீது சொடுக்கை வீசுவதாவது என திடுக்கிட்டு அவள் தலையை சிலுப்ப...

சட்டென கனவு கலைந்தவளாய் நிஜத்திற்கு வந்தாள். நிஜம் அவளை மேலும் திடுக்கிடச் செய்தது. அவள் எப்போது காரிலிருந்து இறங்கினாள்? எப்போது இந்த ரூமிற்குள் வந்தாள்? எங்கே இருக்கிறோம் என கவிதா அதிர்ச்சியுடன் பார்த்தபோது, எதிரே விஷமமாய் சிரித்தபடி அசோக்குமார் நிற்பது தெரிந்தது.

என்ன விழித்து விட்டாயா? மயக்கம் கலைந்து விட்டதா? என்று அவன் கேட்டதும் அவளுக்குக் குழப்பம் அதிகமாயிற்று. என்ன மயக்கமா? நான் மயங்கிக் கிடந்தேனா?

ஆம் கவிதா! நீ மயங்கிக் கிடந்தாய்! உன்னை மயக்கமுறச் செய்தேன். நீ காரில் ஏறியதும் கண்களை மூடிக் கொண்டாய். எனக்கு வசதியாய் போயிற்று. ஏற்கனவே நான் தயாராய் வைத்திருந்த மயக்க மருந்து துணியை உன் முகத்தில் காட்டி அப்படியே மயக்கமுறச் செய்தேன். நீ மயங்கியதும் அப்படியே உன்னை அலுங்காமல் ஊருக்கு வெளியே இருக்கும் என்னுடைய ரகசிய பங்களாவிற்கு தூக்கி வந்துவிட்டேன். இனி நீ என்வசம்... என் சொற்படிதான் கேட்க வேண்டும்... நீ கேட்கப் போகிறாய்...

அதிகார குரலில் அசோக்குமார் கர்ஜிக்க, கவிதா அரண்டு போனாள். இவனது நிஜ சுயரூபம் தெரியாமல் ஏமாந்து விட்டோமே என்று பதைத்தவள் கூடவே மன உறுதி கொண்டவளாய் சினந்து, என்ன உளறுகிறாய்? என்றாள் குரலை உயர்த்தி எழுந்தபடி.

அசோக்குமார் அவளது ஆவேசத்தைக் கண்டு கொஞ்சமும் அசராதவனாய் சிகரெட் ஒன்று எடுத்து பற்ற வைத்துக்கொண்டு, இரு.



உனக்கு எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்கிறேன். நீ நினைப்பது போல் உன் மீது பித்துப் பிடித்து ஒன்றும் நான் உன்னைத் தூக்கி வரவில்லை. எல்லாம் அந்தக் கிழத்தால்தான். அது பண்ணிய வேலையால்தான். கோடி கோடியான சொத்து முழுவதையும் எங்கோ அனாதையாய் கிடந்த உன் பெயருக்கு கிழம் எழுதி வைத்துவிட்டது. அதனாலே அந்த சொத்துக்கள் வேண்டுமென்றால் நான் உன்னை மனைவியாய் அடைந்தால்தான் முடியும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. அதான் உனக்கு வலை விரித்தேன். கெட்ட வழிகளை, தீய பழக்கங்களை ஒழித்து விட்ட நல்லவன் போல உன் முன் நடித்தேன். நல்லவனாக வேஷம் போட்டேன். கடைசியில் நீயோ ராஜா காதல் கீதல் என எவன் பெயரையோ கூறி உளற ஆரம்பித்துவிட்டாய். சரி இனி சும்மா, இருந்தால் விஷயம் சரிபட்டுவராது என உன்னை எப்படியாவது மனைவியாக்கிவிட வேண்டியதுதான் என தூக்கியும் வந்து விட்டேன்...

என்றபடி முகத்தை மேலும் விகாரமாக்கி அசோக்குமார் அவளை நெருங்கியவன், இப்போது உனக்கு எல்லாம் புரிந்ததா? உன்னை இப்போதே மனைவியாக்கி ஒத்திகை பார்த்து விடட்டுமா? என்றபடி மேலும் ஆவேசமாகி அவள் பூக்களைப் பற்றினான். வெடுக்கென சினந்து போனவளாய் கவிதா கையை உதறினாள். அசோக்குமார் விடவில்லை. ஆக்ரோஷமாய் அவளது செவிட்டில் ஓங்கி அடித்தான். பலமான அடி நடந்த அதிர்ச்சி எல்லாம் ஒருசேர அவளைத் தாக்கின. நிலை தப்பியவளாய் அப்படியே மயங்கிச் சாய்ந்தாள் கவிதா.



## 21



கவிதா கண் விழித்தபோது சூழ்நிலை முற்றிலும் மாறியிருந்தது. தான் வலுவான தோள் ஒன்றில் முகம் புதைத்து மார்போடு ஒண்டிக் கொண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது.

மெல்ல மெல்ல சுயநினைவு வந்தவளாய் நிமிர்ந்து தன்னைத் தாங்கியிருந்த கரங்களுக்குச் சொந்தக்காரனைப் பார்த்தாள். கனிவுப் பார்வையும் குறும்புச் சிரிப்புமாய் அவளை அப்படியே பூக்குவியலாய் வாரியணைத்து அவளது கூந்தலை வாஞ்சையாய் வருடி விட்டபடி ராஜா! அவளுக்கு குழப்பம் அதிகமாகியது.

நீ... நீங்கள்.. நீங்கள்... எப்படி? என திக்கித் திணறியவள், முதலில் ஓய்வெடுத்துக் கொள் கண்மணி என புன்னகையுடன் நெஞ்சில் சாய்த்து ஆதரவாய் வருடினான். ஆனால் கவிதாவுக்க நடந்தவை தெரிந்தாக வேண்டுமே?

யோசித்துப் பார்த்தாள். கொஞ்சம் கொஞ்சமாய் எல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. அசோக்குமாருடன் ரெஸ்ட்டாரண்ட் வந்தது. அவனது பேச்சை நம்பி, காரில் ஏறியது. அந்த மோசக்காரன் அவளை நயவஞ்சகமாய் ஏதோ ஒரு இடத்திற்கு கடத்திச் சென்று வில்லத்தனமாய் நடந்து கொண்டது... என்ன ஆயிற்று? அதற்குப் பின் என்ன நடந்தது? அசோக்குமார் எங்கே? திடுக்கிடலுடன் ராஜாவைப் பார்த்தாள் கவிதா. அவளது பார்வை மூலமே அவளது கேள்விகளைப் புரிந்து கொண்டவன் போல் ராஜுழ மெல்ல அவளது கேள்விகளைப் புரிந்து கொண்டவன் போல் ராஜா மெல்ல அவளை உச்சி முகர்ந்தவன், சொல்கிறேன் கண்மணி.. என்றபடி விளக்க ஆரம்பித்தான்.

கவிதா, நீ அசோக்குமாருடன் ரெஸ்ட்டாரண்டில் பேசிக் கொண்டிருப்பதைத் தற்செயலாக அங்கு வந்த நான் பார்த்துவிட்டேன். அசோக்குமார் நயவஞ்சகன், ஏதோ பிளான் போட்டுத்தான் உன்னிடம் நாடகமாடுகிறான் என்பதைப் புரிந்து கொண்டேன். சரி என்னதான் நடக்கிறது என பார்ப்போம் என்றுதான் உங்கள் கண்ணில் படாமல் மற்றொரு இருக்கையில் அமர்ந்து உங்களையே கவனித்துக் கொண்டிருந்தேன். நான் நினைத்தது போலவே அசோக்குமார் உன்னிடம் ஏதோ சர்க்கரையாய் பேசியபடி இனிப்புடன் காருக்குள் கூட்டிச் சென்றான். நீயும் அவன் நடிப்பை உணராது காரில் ஏறிக் கொண்டாய். அவன் காரைக் கிளப்பி விரட்டியதும் நானும் காரில் பின் தொடர்ந்தேன். கடைசியில் பார்த்தால்...

நீளமான பெருமூச்சு விட்டபடி சலிப்புடன் நிறுத்தியவனைத் துணுக்குற்றுப் பார்த்தாள் கவிதா, அதற்குப் பின் என்ன நடந்தது.

பயத்துடன் ஆர்வமாய் அரற்றியவளை அப்படியே இறுக்கிக் கொண்டவன், ஒன்றும் பயம் தேவையில்லை கண்மணி. வழக்கமான சினிமாக் கதை போல் தான் அசோக்குமார் ரகசிய பங்களாவிற்கு உன்னைக் கடத்திச்சென்று வில்லத்தனமாய் நடக்க முயல, நீ அதிர்ச்சியில் மயக்கம் கொள்ள... அங்கு ஆபத்பாந்தவனாய் கதாநாயகன் போல் நான் வந்து உன்னைக் கைகளில் தாங்கி ஆபத்திலிருந்து காப்பாற்றிவிட்டேன்....

அப்படியானால் அசோக்குமார்?



அவனைப் பற்றி ஏன் கேட்கிறாய்? என் வலுவான உடம்பிற்கு கொஞ்சம் வேலை கொடுத்தான். அப்படியே அடித்து வைத்து போலீசிடம் அவனை ஒப்படைத்துவிட்டேன். பெரியவர் முருகதாசருக்கும் போன் செய்து ஒன்று விடாமல் எல்லா விஷயத்தையும் சொல்லிவிட்டேன்....

என்ன... பெரியவருக்கும் சொல்லி விட்டீர்களா? என திடுக்கிட்டவளை சமாதானப்படுத்துபவன் போல், இன்னும் எத்தனை நாள் மூடி மறைப்பது கண்மணி? அதான் எல்லா விஷயங்களையும் நம் காதல் உள்பட பெரியவரிடம் சொல்லிவிட்டேன். பெரியவரும் இவ்வளவு நாள் தெரிவிக்காததுக்கு கடிந்து கொண்டு உடனே சம்மதித்தும் விட்டார்...

என்ன பெரியவர் சம்மதித்து விட்டாரா? என அதிசயப் பட்டவளை மேலும் சேர்த்தணைத்த ராஜா, கன்னத்தோடு கன்னம் உரசியபடி, ஏன் சம்மதிக்க மாட்டார்? நம் காதல் எவ்வளவு தீவிரமாய் இருந்திருக்கிறது? என்றவன் மெல்ல செவ்விதழ்களை நோக்கி முன்னேற, அவசரமாய்த் தடுத்து அவன் முகம் நிமிர்த்தியவள், காதலா? நமக்கா...? என்ன சொல்கிறீர்கள்? போலி வியப்பு காட்டி ஆவல் பொங்கப்பார்த்தாள்.

இனியும் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க வேண்டாம். எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டது. நாம் காதலித்தது நம் இருவருக்கும் தெரியும். பிறகு எதற்கு வேஷம் கண்மணி? என்றவனை சட்டென பழையன ஞாபகம் வந்தவளாய் சினம் கொண்டு பார்த்தாள்.

பின் ஏன் அன்று அப்படி நடந்து கொண்டீர்கள்? தேவையில்லாமல் என் மீது சந்தேகப்பட்டு என்னவெல்லாம் வார்த்தைகளைக் கொட்டி விட்டீர்கள்? நான் எப்படி துடித்து விட்டேன் தெரியுமா? சிலிர்த்துச் சிணுங்கியவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டவன், அது தவறுதான். ஆனாலும் உன்மீது ஆரம்பபம் முதல் எனக்கு சந்தேகம் கொஞ்சமும் கிடையாது. அசோக்குமார் கெட்டவன். அவனைப் பற்றி உனக்கு எச்சரிக்க வேண்டும் என்பதற்காகவே அப்படி சந்தேகம் கொள்வது போல் நடித்தேன். ஆனால் கடைசி வரை நீ என்னுடைய நடிப்பையோ, அசோக்குமார் வேஷத்தையோ புரிந்து கொள்ளவே இல்லை.... சரி.... போகட்டும்.... இனி பழைய வைகள் எதற்கு? புதியன... புதியவைகள்... எவ்வளவு இருக்கின்றன...?

என்றபடி கவிதா சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் அப்படியே நெஞ்சோடு நெஞ்சாய் இறுக்கியவன், அப்படியே அவளைத் தூக்கி தட்டாமலை சுற்றினான். கிறங்கியவன் கண்கள் சொருக... மெல்ல மோனமயக்கத்தில் கிறங்கி நின்றவளின் செவ்விதழ்களை முத்தமிடவும் ஆரம்பித்தான்.

அவன் அணைப்பில் அப்படியே கட்டுண்டு தன் வசமிழந்தவளாய் வெட்கம் படர கண்களை மூடிக்கொண்டாள் கவிதா. காதல் தென்றல் மேலும் இறுக்கத்துடன் அவர்களைத் தழுவ ஆரம்பித்தது. தங்களை மறக்க ஆரம்பித்தனர் இருவரும்.

(முற்றும்)





## நாட்டு வைத்தியம்



**-வசந்தி வேலன்**

### உன் சமையலறையில்

❖கறிகாய்களை நறுக்குவதில் கூட உணவின் சுவை கூடும். குறையும் வெங்காயத்தை சாம்பாரில் போடும்போது நீளவாக்கிலும் குழம்பு மற்றும் பொரியல், கூட்டு செய்யும்போது சற்று பொடிப்பொடியாகவும் நறுக்க வேண்டும். கத்தரிக்காயை சாம்பாரில் போடும்போது நீளவாக்கிலும், காரக்குழம்பில் போடும்போது நீளவாக்கில் நறுக்கி பின் குறுக்காகவும் நறுக்கிப் போடவேண்டும்.

❖தக்காளிச் சட்னி அரைக்கும்போது கொஞ்சம் புளி அல்லது கொஞ்சம் எலுமிச்சை சாறு சேர்த்து அரைக்க சுவை கூடும். தக்காளி மற்றும் வெங்காயச் சட்னிகளை மிக்ஸியில் மைய அரைக்காமல் சற்றுக் கரகரப்பாக அரைத்தால் சுவையாக இருக்கும்.

❖மோர்க்குழம்பு திக்காக வரவேண்டுமா? அரைக்கும் சாமான்களோடு பச்சைக் கடுகு ஒரு டீஸ்பூன் வைத்து அரைத்து வடிகட்டி கெட்டித் தயிரில் போட்டு சின்ன வெங்காயம் 4, பூண்டு 2 பல் இரண்டையும் சற்று கரகரப்பாக அரைத்துச் சேர்த்து கடுகு, மிளகு, கறிவேப்பிலை பெருங்காயம் தாளித்து இரண்டு முறை நுரைத்து வரும்போது அடுப்பிலிருந்து இறக்கி வேறொரு பாத்திரத்தில் ஊற்றி ஆறவிடவும். (காப்பிக்கு ஆறுவது போல இரண்டு, மூன்று முறை ஆற்ற மோர்க்குழம்பு குழம்பாக இருக்கும்) மோர்க்குழம்பு அதிக நேரம் அடுப்பில் வைத்தால் குழம்பு நீர்த்து, மோர் சாம்பார் ஆகிவிடம்.

❖எந்த வகை ரசம் தயாரித்தாலும் கொஞ்சம் வேகவைத்து மசித்த துவரம் பருப்பு அல்லது பருப்புத் தண்ணீரை சேர்க்க ரசம் சுவையோ சுவை.